




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:245 | 21-03-2026 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி







## இன்றைய பஞ்சாங்கம்

21.03.2026 பங்குனி 7
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.18

திதி:
இன்று அதிகாலை 4.28 வரை துவிதியை பின்பு திரிதியை.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 4.12 வரை ரேவதி பின்பு அசுவினி

யோகம் :
இன்று இரவு 8.58 வரை ஐந்திரம் பின்பு வைதிருதி.

கரணம்
இன்று அதிகாலை 4.28 வரை கௌலவம் பின்பு மாலை 3.27 வரை தைதுலம் பின்பு கரசை.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.17 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று அதிகாலை 4.12 வரை பூரம் பின்பு உத்திரம்.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30

இராகு காலம்
இன்று காலை 9.00 – 10.30.

எமகண்டம்
பிற்பகல் 1.30 – 3.00.

குளிகை
காலை 6.00 – 7.30.

இன்று ரம்ஜான் பண்டிகை

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# அரசியல் கட்சிகள் விளம்பரங்களை வெளியிட சான்றிதழ் பெற வேண்டும்: அர்ச்சனா பட்நாயக்

**சென்னை, மார்ச் 21:**

தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

**1. அரசியல் விளம்பரங்களுக்கான முன்-சான்றிதழ்:**

மின்னணு அல்லது சமூக ஊடகங்களில் அரசியல் விளம்பரங்களை வெளியிட விரும்பும் அனைத்து அரசியல் கட்சிகள் (அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாதவை), போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் இதர நபர்கள், மாநில அல்லது மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிடம் (MCMC) முன்-சான்றிதழ் பெற வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் ஒளிபரப்பிற்கு குறைந்தது 3 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும். அங்கீகரிக்கப்படாத கட்சிகள் மற்றும் பிற விண்ணப்பதாரர்கள் 7 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும். பெறப்படும் விண்ணப்பங்கள் 48 மணி நேரத்திற்குள் பரிசீலிக்கப்படும்.

விண்ணப்பங்கள் மீதான முடிவுகள் குறித்த மேல்முறையீடுகளை மாநில அளவிலான மேல்முறையீட்டுக் குழுவிடமும், அதன்பின் இந்தியத் தேர்தல் ஆணையத்திடமும் செய்யலாம்.

இந்தக் குழுக்கள் அரசியல் விளம்பரங்களை ஆய்வு செய்து சான்றளிக்கவும், 'கட்டணச் செய்திகள்' (Paid News) உள்ளிட்ட ஊடகத் தளங்களின் தவறான பயன்பாட்டைத் தடுக்கவும் அமைக்கப்பட்டுள்ளன.

**2. செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் உருவாக்கப்பட்ட உள்ளடக்கங்களுக்கான வழிகாட்டுதல்கள்:**

'ஆழ் மாறாட்டம்' (Deepfakes) மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட உள்ளடக்கங்களால் ஏற்படும் சவால்களைக் கருத்தில் கொண்டு, தேர்தல் ஆணையம் கடுமையான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது:



செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட அல்லது டிஜிட்டல் முறையில் மாற்றப்பட்ட அனைத்து உள்ளடக்கங்களிலும் "AI-ஆல் உருவாக்கப்பட்டது", "டிஜிட்டல் முறையில் மேம்படுத்தப்பட்டது" அல்லது "செயற்கை உள்ளடக்கம்" போன்ற தெளிவான லேபிள்கள் இருக்க வேண்டும். இது காட்சிப் பரப்பில் குறைந்தது 10% அல்லது ஆடியோ உள்ளடக்கத்தின் ஆரம்ப 10% நேரத்தை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

ஒருவரின் அனுமதி இன்றி அவரது அடையாளம், குரல் அல்லது தோற்றத்தை தவறாகச் சித்தரிக்கும் மற்றும் வாக்காளர்களை திசைதிருப்பக்கூடிய உள்ளடக்கங்கள் முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

அரசியல் கட்சிகளின் சமூகவலைதள பக்கங்களில் இத்தகைய தவறான அல்லது சட்டவிரோத உள்ளடக்கங்கள் கண்டறியப்பட்டாலோ அல்லது அது குறித்து புகார் அளிக்கப்பட்டாலோ, 3 மணி நேரத்திற்குள் அவை நீக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**3. வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான (BLO) ஊதியம் உயர்வு (20252026):**

பிழையற்ற வாக்காளர் பட்டியலே துடிப்பான ஜனநாயகத்தின் அடிப்படை என்பதை இந்தியத் தேர்தல் ஆணையம் வலியுறுத்துகிறது. அந்தந்த வாக்குச்சாவடி பகுதிகளில் வாக்காளர் பட்டியலின் துல்லியம் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLOs) முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.

தற்போது, தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியில் மொத்தம் 75,037 அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் அர்ப்பணிப்பைப் பாராட்டும் வகையில், அவர்களின் ஆண்டு ஊதியம் ரூ. 6,000-லிருந்து ரூ. 12,000-ஆக இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

கூடுதலாக, சிறப்புத் திருத்தப் பணிகளுக்காக (SSR/SR) ரூ.2,000 சிறப்பு ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது.

இதன்படி, 20252026 ஆம் ஆண்டிற்காக தமிழ்நாடு முழுவதும் உள்ள BLO-க்களுக்கு மொத்தம் ரூ. 99,81,54,000/- (ரூபாய் தொண்ணூற்று ஒன்பது கோடியே எண்பத்தியோரு லட்சத்து ஐம்பத்தி நான்காயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4. அடுக்குமாடி குடியிருப்புகளில் வாக்குச்சாவடிகள்:**

நகர்ப்புற வாக்காளர்களின் ஆர்வமின்மையைக் குறைக்கும் வகையில், உயரமான அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் குழு வீட்டு வசதி சங்க வளாகங்களுக்குள்ளேயே வாக்குச்சாவடி வசதிகளைத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தியுள்ளது. இதன்படி, 2026 சிறப்புத் தீவிரத் திருத்தத்தின் (SIR) போது இத்தகைய இடங்களில் 14 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

"தேர்தல் திருவிழா - தமிழ்நாட்டின் பெருவிழா" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திராவிட மாடலை நாடு முழுவதும் பின்பற்றினால் இந்தியா இன்னும் விரைவாக வளரும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, மார்ச் 21:**

தமிழ்நாட்டின் திராவிட மாடல் நாடு முழுவதும் பின்பற்றப்பட்டால் இந்தியா இன்னும் விரைவாக வளர்வது உறுதி என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

உத்தரப் பிரதேசத்தில் மகப்பேறு இறப்பு விகிதத்தைக் குறைக்கும்பொருட்டு, அதற்கான தீர்வு காண உத்தரப் பிரதேச திட்டக்குழு அதிகாரிகள் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் மகப்பேறு இறப்பு விகிதத்தைக் குறைக்க செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டுள்ளனர். மேலும் மதுரை, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் இதுதொடர்பாக கள ஆய்வு செய்யவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்நிலையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் இதுதொடர்பாக தனது எக்ஸ் பக்கத்தில்,

"ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளும் இந்த ஆரோக்கியமான போக்கு மென்மேலும் வளர வேண்டும் என விழைகிறேன். தமிழ்நாட்டுக்கு வந்துள்ள விருந்தினர்களை நம் மக்களின் சார்பாக அன்போடு வரவேற்கிறேன்.

மகப்பேறு இறப்பு விகிதம் குறைப்பதில் மட்டுமல்ல; மாநில சுயாட்சி, மொழிக் கொள்கை, சமூகநீதி ஆகியவற்றிலும் தமிழ்நாட்டின் திராவிட மாடல் நாடு முழுவதும் பின்பற்றப்பட்டால் இந்தியா இன்னும் விரைவாக வளர்வது உறுதி!" என்று பதிவிட்டுள்ளார்.

பிரசவத்தின்போது அல்லது பிரசவம் முடிந்து 42 நாள்களுக்குள் இறக்கும் தாய்மார்களின் எண்ணிக்கையை வைத்து மகப்பேறு இறப்பு விகிதம் கணக்கிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஒரு லட்சம் பிரசவங்களில் 35 பேர் உயிரிழக்கும் நிலையில் உத்தரப் பிரதேசத்தில் இந்த எண்ணிக்கை 141 ஆக உள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் மகப்பேறு இறப்பு விகிதம் (MMR) 2019-20ல் 54 என்ற நிலையிலிருந்து 2022-23ல் 35 ஆக கணிசமாகக் குறைந்துள்ளது. இது தேசிய சராசரி 88-யை விடக் குறைவாகும்.

# ஏப்.17 முதல் கோடை விடுமுறை!

**சென்னை, மார்ச் 21:**

தமிழகத்தில் அரசு, அரசு உதவிப்பெறும், தனியார் பள்ளிகளுக்கான ஆண்டு இறுதி தேர்வு அட்டவணையை பள்ளிக் கல்வி இயக்கம் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ளது.

அதன்படி, 1 - 3ஆம் வகுப்புகளுக்கு ஏப். 8 முதல் ஏப்.16ஆம் தேதி வரையும், 4,5 வகுப்புகளுக்கு ஏப்.6 முதல் ஏப்.16 வரையும் தேர்வுகள் நடைபெறுகின்றன. மேலும் 6 முதல் 9ஆம் வகுப்புகளுக்கு ஏப்.1 முதல் ஏப்ரல் 16ஆம் தேதி வரை தேர்வுகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஏப்ரல் 23ஆம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் நிலையில் தேர்வுகள் முன்கூட்டியே முடிக்கப்படுகின்றன.

தேர்வுகள் ஏப்ரல் 16ஆம் தேதியுடன் முடிவடையும் நிலையில் அடுத்த நாளில் இருந்து மாணவர்களுக்கு கோடை விடுமுறை தொடங்குகிறது.






# மன்சுக் மாண்டவியாவை சந்தித்த புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி - தொகுதி பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்து

**புதுச்சேரி, மார்ச் 21:**

புதுச்சேரியில் அடுத்த மாதம் 9-ந்தேதி சட்டசபை தேர்தல் நடக்கிறது. இந்த தேர்தலிலும் ஆளும் என்.ஆர். காங்கிரஸ், பா.ஜ.க. கூட்டணி தொடரும் என இரு கட்சி தலைவர்களும் கூறி வந்த நிலையில், தொகுதி பங்கீடு தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்றது.

30 தொகுதிகள் கொண்ட புதுச்சேரி மாநிலத்தில் என். ஆர்.காங்கிரஸ் கட்சிக்கு 16 இடங்கள், பா.ஜ.க. கூட்டணிக்கு 14 இடங்கள் என முடிவானது. இதனை முதல்-அமைச்சர் ரங்கசாமியும் உறுதி செய்தார். இதற்கிடையில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையின்போது புதுச்சேரியில் புதிதாக தொடங்கப்பட்ட லட்சிய ஜனநாயக கட்சியை கூட்டணியில் இணைக்க கூடாது, புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று என்.ஆர். காங்கிரஸ் வலியுறுத்தியதாகவும், இதனை பா.ஜ.க. ஏற்கவில்லை என்றும் கூறப்படுகிறது.



இதனிடையே புதுச்சேரியில் தேசிய ஜனநாயக் கூட்டணியில் தொகுதி பங்கீட்டில் உடன்பாடு எட்டப்படாத நிலையில், மன்சுக் மாண்டவியா தலைமையில் பா.ஜ.க. பேச்சுவார்த்தை குழு புதுச்சேரி சென்றுள்ளது. தனியார் ஓட்டலில் மன்சுக் மாண்டவியாவை என்.ஆர். காங்கிரஸ் குழுவை சேர்ந்த அமைச்சர்கள் லட்சுமி நாராயணன், ஜெயபால் ஆகியோர் சந்தித்து பேசிய நிலையில், நேற்று மாலை 6 மணிக்கு முதல்-மந்திரி ரங்கசாமியை சந்திக்க மன்சுக் மாண்டவியா திட்டமிட்டிருந்தார்.

ஆனால் மன்சுக் மாண்டவியாவை சந்திக்காமல் ரங்கசாமி திருச்செந்தூர் புறப்பட்டு சென்றார். இதனால் பா.ஜ.க.-என்.ஆர்.காங்கிரஸ் கூட்டணியில் விரிசல் ஏற்பட்டதா? என கேள்வி எழுந்த நிலையில், இன்று காலை திருச்செந்தூரில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய ரங்கசாமி, என்.ஆர்.காங்கிரஸ் கட்சி பா.ஜ.க.வுடன்தான் கூட்டணியில் உள்ளது என்றும், பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து தட்டாஞ்சாவடி மற்றும் மங்களம் ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட ரங்கசாமி வேட்புமனு தாக்கல் செய்தார். இந்த நிலையில், பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் மன்சுக் மாண்டவியாவை இன்று ரங்கசாமி சந்தித்து பேசியுள்ளார்.

இந்த சந்திப்பின்போது, ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் தொடங்கியுள்ள லட்சிய ஜனநாயக கட்சியை கூட்டணியில் சேர்க்க ரங்கசாமி ஒப்புதல் அளித்துள்ளார். புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்கும் கோரிக்கையை ரங்கசாமி வலியுறுத்தியதால் கூட்டணியில் இழுபறி ஏற்பட்ட நிலையில், மாநில அந்தஸ்து குறித்து விரைவில் முடிவு எடுக்கப்படும் என மன்சுக் மாண்டவியா உறுதி அளித்ததை தொடர்ந்து, புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ்-பா.ஜ.க. இடையே தொகுதி பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தானதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி என்.ஆர்.காங்கிரஸ் 16 தொகுதிகளிலும், பா.ஜ.க., அ.தி.மு.க., லட்சிய ஜனநாயக கட்சி ஆகியவை இணைந்து மீதமுள்ள 14 தொகுதிகளிலும் போட்டியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எந்தெந்த தொகுதிகளில் எந்தெந்த கட்சி போட்டியிடுவது என்பதை முடிவுசெய்ய பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# மார்ச் 26 வரை சில இடங்களில் மழைக்கு வாய்ப்பு

**சென்னை, மார்ச் 21:**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மன்னார் வளைகுடா முதல் வட கர்நாடகாவின் உள்பகுதி வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளையும், நாளை மறுநாளும் (மார்ச் 21, 22) மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதைத் தொடர்ந்து, 26-ம் தேதி வரை லேசான மழை நீடிக்கும். இதர பகுதிகளில் வறண்ட வானிலை நிலவும்.




## திருக்குறள் குறள்-565

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து



எளிதில் காணமுடியாத அருமையும், இனிமையற்ற முகமும் உடையவனது பெரிய செல்வம், பேய் கண்டு காத்திருப்பதைப் போன்ற தன்மையுடையது.

## சிந்திக்க ஒரு நொடி



இலக்கு நிர்ணயம்
செய்த பின்
தயங்காதே
மின்னல்
வேகத்தில் செல்
வெற்றி உன்னிடம்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகன்



திருவஹிந்திபுரம் ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகன்

## யுகாதி திருநாளை முன்னிட்டு பழைய காட்பாடி ஸ்ரீவரதராஜ பெருமாள் கோவிலில் திருமஞ்சனம்!



**வேலூர், மார்ச் 21:** வேலூர் மாவட்டம், பழைய காட்பாடியில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ வரதராஜ பெருமாள் ஆலயம் அமைந்துள்ளது. இந்த திருக்கோயிலில் 19 .3.2026 வியாழக்கிழமை தெலுங்கு வருடப்பிறப்பான யுகாதி திருநாளை முன்னிட்டு அதிகாலை 4 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் நடந்தது. இதை தொடர்ந்து காலை 7 மணிக்கு மூலவருக்கு திருமஞ்சனம் நடைபெற்றது. அதை தொடர்ந்து மாலை 6:30 மணிக்கு பஞ்சாங்கம் வாசித்தல் மற்றும் பிரம்மோற்சவம் தொடர்பான பத்திரிகையை வாசித்தல் ஆகிய அனைத்து பணிகளும் சிறப்பாக நடந்தது. இதை தொடர்ந்து பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று ஸ்ரீ வரதராஜ பெருமாளை யுகாதி பண்டிகையையொட்டி தரிசனம் செய்து தங்களது வேண்டுதலை நிறைவேற்றிக் கொண்டனர். பூஜையில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு கோயில் நிர்வாகம் சார்பில் பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. இந்த திருமஞ்சனம் மற்றும் பூஜைகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கோயில் அறங்காவலர் குழு தலைவர் அசோகன் செய்திருந்தார்.

## வாக்குச்சாவடி மையத்தில் 2026 பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு அடிப்படை வசதிகள் குறித்து நேரில் ஆய்வு



திருவண்ணாமலை மாநகராட்சி சமுத்திரம் பகுதியிலுள்ள நகராட்சி தொடக்கப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் 2026 பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு முன்னேற்பாடுகள் பணிகள் குறித்தும், அடிப்படை வசதிகள் குடிநீர்,கழிவறை போன்ற வசதிகள் குறித்து திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க.தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# கோவில்பட்டியில் ‘தேடல்’ புத்தகத் திறனாய்வு விழா



**கோவில்பட்டி, மார்ச் 21:** கோவில்பட்டியில் ’இலக்கியச் சாரல்’ மற்றும் ’சகாராவைத் தாண்டாத ஒட்டகம்’ கல்வி நிறுவனம் சார்பில், இராஜேஷ் சங்கரப்பிள்ளை எழுதிய ’தேடல்’ புத்தகத்தின் திறனாய்வு விழா சிறப்பாக நடந்தது.

கோவில்பட்டி நாடார் காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள தியான பயிற்சி அரங்கில் நடைபெற்ற இந்த விழாவிற்கு, நல்லாசிரியர் ப. ஜான் கணேஷ் தலைமை தாங்கினார்.

விஸ்வாஸ் கல்வி அறக்கட்டளை நிறுவனர் ’ஞான ஒளிமலர்’ இந்திராணி அம்மா மற்றும் எஸ்.எஸ்.டி.எம் கல்லூரி முதல்வர் முனைவர் ஆர். செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோவில்பட்டி இசை எப். எம்.இயக்குநர், மேனாள் வேளாண்கல்வி ஆசிரியர் கோ. சுரேஷ்குமார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

புத்தகத் திறனாய்வு விழாவில் நூலினைப் பற்றிப் பின்வரும் இலக்கிய ஆளுமைகள் விரிவான திறனாய்வு செய்தனர், முனைவர் முருக சரஸ்வதி இராதா (தமிழாசிரியர்) முனைவர் கி. பிரபு (முதல்வர்) நல்லாசிரியர் ராஜசேகர் (தமிழாசிரியர்) கவிஞர் ஜெ. பார்த்திபன்ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

நிகழ்ச்சியின் இறுதியில், ’தேடல்’ புத்தகத்தின் ஆசிரியர் இராஜேஷ் சங்கரப்பிள்ளை ஏற்புரையாற்றினார்.

வரகவி நல்லாசிரியர் மா. முருகேசன் நன்றி கூறினார்.

நிகழ்சியில் கழுகு மலை திருவள்ளுவர் கழகத் தலைவர் பொன்ராஜ்பாண்டியன், செயலாளர் முருகன், கோவில்பட்டி கம்பன் கழகச் செயலர் சரவணச் செல்வன், தலைவர் முத்துப் பாண்டியன், சிறார் கலை இலக்கிய சங்க செயலாளர் மணிமொழி நங்கை, பொருளாளர் கண்ணகி, கவிஞர் போத்திராஜ், எழுத்தாளர் இராஜ லட்சுமி, திருவள்ளுவர் மன்றத்துணைத் தலைவர் திருமலை முத்துச்சாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தெலுங்கு வருடப்பிறப்பு, குரு வாரம் தினமான தக்ஷிணாமூர்த்தி சிறப்பு வழிபாடு





**சென்னை மார்ச் 21:** சோழிங்கநல்லூர் -119 புதிய குமரன் நகரில் அமைந்திருக்கும் ஸ்ரீ விஜய கணபதி தெலுங்கு வருட பிறப்பை முன்னிட்டு ராமகிருஷ்ணன் அய்யர் அவர்களால் ஸ்ரீ விஜய கணபதிக்கும், குரு வார தினத்தில் ஸ்ரீ தஷிணாமூர்த்திக்கும் சிறப்பு அபிஷேகங்கள், பால், தயிர், சந்தனம், பன்னீர், இளநீர், பஞ்சாமிர்தம், தேன் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. விஜய கணபதியையும், தஷிணாமூர்த்தியையும் வேண்டி அருள் பெற்றனர்.அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.பிரசாதம் சர்க்கரை பொங்கல், புளியோதரை இன்றைய உபயதாரர் : R.ராமகிருஷ்ணன் ஐயர் அவர்கள் சோழிங்கநல்லூர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# அருப்புக்கோட்டை கிரின் விஸ்டம் மெட்ரிக் பள்ளியில் சமூக நல்இணக்கவிழா!



**அருப்புக்கோட்டை, மார்ச் 21:** அருப்புக்கோட்டை கிரீன் விஸ்டம் மெட்ரிக்குலேசன் பள்ளியில் சமூக நல்லிணக்க விழாவாக இரமலான் பண்டிகை மற்றும் அறிவியல் கண்காட்சி பள்ளியில் நடைபெற்றது. மாணவ, மாணவிகள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினர்.

பள்ளியின் முதல்வர் ஆனந்தி வரவேற்புரை வழங்கினார். விஸ்டம் எஜுகேசனல் சொசைட்டி தலைவர் ஆயை மு.காஜாமைதீன் அவர்கள் தலைமை வகித்தார். செயலாளர் சம்சுதீன், உறுப்பினர்கள் அகமது யாசிர், அம்சா கனி சிக்கந்தர், நசீரா, மற்றும் அகமது ஹபீரா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோ.சுரேஷ் குமார் (மைக்ரோ கிரின் செயல்பாட்டாளர்) முன்னாள் வேளாண் அறிவியல் தொழிற்கல்வி ஆசிரியர் மற்றும் கோவில்பட்டி இசை FM இயக்குநர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு அறிவியல் கண்காட்சியைத் திறந்து வைத்து சமூக நல்லிணக்க உரை நிகழ்த்தினார்.

மீரா மருத்துவமனை சார்பில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் மற்றும் பங்குபெற்ற அனைத்து மாணவர்களுக்கும் எம்.என்.எர்சாத்கான் சார்பில் பரிசுகள் மற்றும் பிரியாணி வழங்கப்பட்டது. ஆசிரியர் வீரசுதா நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

ஆசிரியர் யாஸ்மித் ராணி நன்றியுரை வழங்கினார். நாட்டுப்பண்ணுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## ஆண்டாள் திருக்கோலம்

இராஜ மன்னார்குடி ஸ்ரீவித்யா இராஜகோபால ஸ்வாமி திருக்கோயில், பங்குனி ப்ரும்மோத்ஸவ பதிமூன்றாம் திருநாள் மாலை ஸ்ரீ பெருமாள் யானைமால் தோட்டத்தில் ஆண்டாள் திருக்கோலம்.




## ஆடுமாடுகளைக் காத்தருளும் ஸ்ரீமாதாசியப்பன் சுவாமி



19.03.2026 அன்று பங்குனி யுகாதி திருநாளை முன்னிட்டு, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், துய்யம்பூந்துறைக் கிராமம், ஆண்டக்கொத்தாம்பாளையம் பருத்திக்காரர் காட்டில் புதர்போன்ற இடத்தில் குடிகொண்டுள்ள ஆடுமாடுகளைக் காத்தருளும் ஸ்ரீமாதாசியப்பனுக்கு பொங்கல் வைத்து வழிபாடு செய்யப்பட்டது. மிகவும் எளிமையான இடம். (கோவில் கூட இல்லை). விவசாய பெருமக்களின் நம்பிக்கை நாயகனாக விளங்கி வருகிறார். இங்கு தூக்குப்பழம் பிரசித்தம். சாமி தலைக்கு மேல் ஒரு கயிறு கட்டி அதில் பலரும் சீப்பு சீப்பாக வாழைப் பழங்களை தொங்கவிட்டு பூஜை முடிந்தபின் அவரவர் பழச்சீப்புகளை திருப்பி பெற்றுக்கொள்வர். காலையில் 10.00 மணி முதல் பகல் 12.00 மணி வரை பெண்கள் பொங்கல் வைத்து, பகல் 1.00 அளவில் பூஜை நடைபெற்றது. கூட்டாஞ்சோறு அடிப்படையில் சர்க்கரைப் பொங்கல், பஞ்சாமிர்தம், பொங்கல் சாதத்துடன் பலவகைப் பொறியல் வகைகள், சட்னி, சாம்பார், பச்சைப்புளி ரசம், தயிர் என எல்லோருக்கும் உணவு வழங்கப்படுகிறது. பெண்கள், ஆண்கள், குழந்தைகள் என திரளாகக் கலந்து கொண்டு திருப்தியாக, உணவருந்திய மகிழ்ச்சியுடன் பொங்கல் விழா இனிதே நிறைவுற்றது. நன்றி! வணக்கம்!

# தெலுங்கு வருட பிறப்பு, யுகாதி பண்டிகையை முன்னிட்டு லட்டு தேரில் நம் வாசவி அம்மன்







**திருவண்ணாமலை மார்ச் 21:** ஸ்ரீவாசவிகன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் (யுகாதி பண்டிகை) தெலுங்கு வருடப்பிறப்பை முன்னிட்டு காலை 5:30 மணிக்கு கோ பூஜை, 6:30 மணிக்கு அளவில் ஸ்ரீவாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள் காலை 8 மணிக்கு புதிய பஞ்சாங்கம் கணேஷ் ஐயர் அவர்களால் வாசிக்கப்பட்டது. மகா தீபாராதனையும் நடைபெற்றது.

யுகாதி பண்டிகைக்கு (யுகாதி பச்சடி) பிரசாதமாக அனைவருக்கும் வழங்கப் பட்டது. ஆர்ய வைஸ்ய ஆண்கள்,பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். மாலை 6:00 மணிக்கு மூலவருக்கு சந்தன காப்பு அலங்காரமும், உற்சவருக்கு வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து 2000 லட்டுகள் வைத்து தேரில் அலங்கரித்து தேர் ஆலயம் சுற்றி வந்தது.லட்டு தேரின் முன் பெண்கள் கோலாட்டம் செய்தனர்.

வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுக்கள் பாடி, லலிதா சகஸ்ரநாமம் பாராயணம் செய்தனர். திரளான ஆர்ய வைஸ்ய ஆண்கள்,பெண்கள் அனைவரும் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர்.

அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. இவ்விழாவினை ஏற்பாடு செய்தவர்கள் ஆர்ய வைஸ்ய சமாஜம் திருவண்ணாமலை வெகு சிறப்பாக நடைபெற்றது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# திசையன்விளை மனோ கல்லூரியில் மூன்று நாள் தூய்மை பணிகள் முகாம் தொடக்கம்



**திசையன்விளை, மார்ச் 21:** மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) சார்பில், “தூய்மை பணிகள் முகாம்” என்ற மூன்று நாள் சிறப்பு முகாம் நேற்று சிறப்பாக தொடங்கியது.

இந்த முகாம், நாட்டு நலப்பணித் திட்ட தென்மண்டல பொறுப்பாளர் முனைவர் சாமுவேல் செல்லையா மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் வெளியப்பன் ஆகியோரின் வழிகாட்டுதலின் படி, கல்லூரி முதல்வர் முனைவர் லில்லி அவர்களின் தலைமையில் நடைபெற்று வருகிறது.

முகாமின் முதல் நாளான நேற்று, கல்லூரி அருகிலுள்ள பேருந்து நிலையத்தில் விரிவான தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மாணவர்கள் உற்சாகமாக கலந்து கொண்டு சுற்றுப்புறத்தை சுத்தமாக்கினர். இதன் மூலம் பொதுமக்களிடையே தூய்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சி சிறப்பாக நடந்தது.

இம்முகாமின் இரண்டாம் நாள் (22-03-2026) பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள குடிநீர் தொட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. தொடர்ந்து மூன்றாம் நாள் (23-03-2026), கல்லூரி வளாகம் முழுவதும் சுத்தம் செய்யும் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

இந்த மூன்று நாள் முகாமின் மூலம் மாணவர்கள் சமூக பொறுப்புணர்வை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கின்றது. மேலும், “தூய்மை இந்தியா” என்ற தேசிய இயக்கத்தின் நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் முக்கிய முயற்சியாக இம்முகாம் பார்க்கப்படுகிறது.

நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் பலவேச கிருஷ்ணன் முன்னின்று செய்து வருகிறார். கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.


இந்த தூய்மை பணிகள் முகாம், திசையன்விளை பகுதியில் சுத்தம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் ஒரு முன்னுதாரண முயற்சியாக அமைந்துள்ளது.



# 2026 தேர்தல் கொண்டாட்டம்

## இவர்கள் கூறுவதென்ன?

### "கூவிக் கூவி அழைத்தும் தவெகவுடன் கூட்டணிக்கு யாரும் வரவில்லை" - அமைச்சர் சேகர்பாபு



"கூவிக் கூவி அழைத்தும் அவர்களுடன் (தவெக) கூட்டணிக்கு யாரும் வரவில்லை" என அமைச்சர் சேகர்பாபு விமர்சனம் செய்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "மக்கள் பணிகளை மையப்படுத்தி மட்டுமே தேர்தல் களத்தில் இருக்கிறோம். பேய், பிசாசு, பூச்சாண்டிகளுக்கு எல்லாம் பயப்படும் இயக்கம் திமுக அல்ல. மக்கள் சக்தி யார் பின்னால் இருக்கிறது என மே 4-ம் தேதி தான் தெரியவரும். 60 ஆண்டுகால உழைப்பு, முதல்வர் ஸ்டாலின் ஆற்றியுள்ள மக்கள் நலப் பணிகளுக்கு வர இருக்கும் தேர்தலில் முடிவு தெரியும். கூவிக் கூவி அழைத்தும் தவெகவுடன் கூட்டணிக்கு யாரும் வரவில்லை; ஆனால் முதல்வர் ஸ்டாலின் அனைவரையும் அரவணைத்துச் செல்பவர். திமுக கூட்டணி வலுவானது. 234 தொகுதிகளிலும் திமுக கூட்டணி வெற்றி பெறும். சென்னையை ஒட்டியுள்ள தொகுதிகளில் கடந்த முறையை விட அதிகமாக வெற்றி கொள்வோம்." இவ்வாறு சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

### 'டார்ச் லைட்' தான் வேணும்! திமுகவிடம் மநீம கோரிக்கை



சென்னை அறிவாலயத்தில் திமுக -மக்கள் நீதி மய்யம் இடையே 2-ம் கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்போது, மநீம தரப்பில் 6 தொகுதிகள் கேட்கப்பட்டது. அதற்கு 2 தொகுதிகள் வரை ஒதுக்க திமுக ஒப்புக்கொண்டதாக கூறப்படுகிறது. மேலும், உதயசூரியன் சின்னத்தில் களமிறங்க திமுக வலியுறுத்தியதாகவும் தெரிகிறது. பின்னர், மநீம பொதுச் செயலாளர் அருணாச்சலம் செய்தியாளர்களிடம் கூறுகையில், "உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வேண்டுமென திமுக கோரிக்கை வைத்துள்ளது. கடந்த தேர்தல்களில் மக்கள் நீதி மய்யம் சுமார் 4 சதவீத வாக்குகளை 'டார்ச்லைட்' சின்னம் மூலம் பெற்றது. அதனால் எங்கள் சின்னமான 'டார்ச்லைட்' சின்னத்தில்தான் போட்டியிடுவோம் என்பதை திமுகவிடம் வலியுறுத்தியுள்ளோம். இதுதொடர்பாக கட்சியின் தலைவர் கமல்ஹாசன் கவனத்துக்கு கொண்டு செல்லவுள்ளோம். கமல்ஹாசன் முடிவுதான் இறுதியானது' என்றார்


### மாணவி கழுத்தில் அணிந்திருந்த 'விசில்' அவசர அவசரமாக அகற்றிய அதிகாரிகள்

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி தேர்தல் பிரிவினர் கோவை மாவட்டம் சுங்கம் பகுதியில் உள்ள நிர்மலா மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர். மகளிர் மட்டும் ஓட்டளிக்கும் வகையிலான மாதிரி வாக்குச்சாவடியை மாணவியர் அமைத்திருந்தனர். மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான பவன்குமார் கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன் மற்றும் தேர்தல் பிரிவு அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, மாநகராட்சி பள்ளி மாணவிகள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அப்போது கோலாட்டம் நிகழ்வில் 8-ம் வகுப்பு படிக்கும் மாணவிகள் சிலர் நடனமாடி விழிப்புணர்வு ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். அப்போது, சக மாணவியருக்கு நடன அசைவுகளை சொல்லித் தர, மாணவி ஒருவர் கழுத்தில் விசில் அணிந்திருந்தார்.

கோலாட்டம் ஆடத் தொடங்கியதும், மாணவி கழுத்தில் அணிந்திருந்த விசிலை ஊதிய பின்னர், அடுத்தடுத்த ஸ்டெப்புகள் அமைத்து நடனமாடினர். விசில் - தவெக கட்சியின் சின்னம். வாக்குப்பதிவு விழிப்புணர்வு நிகழ்வில் மாணவி கழுத்தில் விசில் அணிந்திருப்பதை எதிர்பார்க்காத மாவட்ட நிர்வாக அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர். அதைத் தொடர்ந்து அதிகாரி ஒருவர், அவசரமாக மேடை மீது ஏறி, மாணவி கழுத்தில் அணிந்திருந்த விசிலை அகற்றினார். இதனால் மாணவிகள் குழப்பம் அடைந்த நிலையில், பயிற்சி அளித்த ஆசிரியர் தொடர்ந்து ஆடும்படி உத்தரவிட்டார். இதையடுத்து மாணவிகள் கோலாட்டத்தை தொடர்ந்தனர்.

## வேட்புமனு: தேர்தல் அறிவித்தும் களத்தில் இறங்காத அரசியல் கட்சிகள்!




*வேட்புமனு தாக்கலுக்கே 2 வார காலம் அவகாசம் இருப்பதால், இப்போதே பிரச்சாரத்தை தொடங்கினால் செலவு அதிகமாகிவிடும் என்று சேலம் மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் பிரச்சாரத்தில் களமிறங்காமல் அமைதியாக இருக்கின்றன.*

*தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் தேதி 15-ம் தேதி அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துவிட்டன. இந்நிலையில், தேர்தல் என வந்துவிட்டாலே அனல் பறக்கும் பிரச்சாரங்களில் அரசியல் கட்சிகள் இறங்கிவிடும்.*

*வேட்பாளர்களின் பெயரை அறிவித்து, அவரது கட்சிக்கு வாக்களிக்க வலியுறுத்தி வாகனங்களில் ஒலிபெருக்கிகளை வைத்து, தெருத்தெருவாக பிரச்சாரம் செய்வது, வேட்பாளர் குறித்த விளம்பரம் செய்வதற்கு சுவர்களை முன்பதிவு செய்து வைப்பது, துண்டுப் பிரசுரங்களை அள்ளி வீசுவது என தேர்தல் பிரச்சாரங்கள் களைகட்டியிருக்கும்.*

*ஆனால், தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னரும், தமிழகத்தில் அரசியல் கட்சிகளிடையே கூட்டணி தொகுதிப் பங்கீடு முடியாமல் இருப்பதால், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என எந்தக்கட்சியின் கூட்டணியிலும் வேட்பாளர்கள் அறிவிக்கப்படவில்லை.*

*மேலும், புதிய கட்சிகள் சிலவற்றில் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுவிட்டாலும், எவரும் பிரச்சாரத்தில் களமிறங்காமல் அமைதியாக இருக்கின்றனர்.*

*இது குறித்த அரசியல் கட்சியினர் கூறியதாவது: ஒவ்வொரு தொகுதியிலும் தற்போது எம்எல்ஏ-வாக இருப்பவர்களுக்கு, மீண்டும் அதே தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கிடைக்குமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது.*

*மேலும், எம்எல்ஏ-வாக இருப்பவரின் தொகுதி, கூட்டணி கட்சிக்கு ஒதுக்கப்படவும் வாய்ப்பு உள்ளது. இந்த நிலையில், கட்சிகளிடையே கூட்டணிப் பங்கீடே இன்னமும் முடிவாகவில்லை.*

*அதன் பின்னர் தான் தொகுதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகியவற்றில், புது முகங்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என்று தகவல்கள் வருகின்றன.*

*எனவே, சீட் கிடைப்பது உறுதியான பின்னரே, தேர்தல் பிரச்சாரத்துக்கு செலவழிக்க வேண்டும் என்று எல்லோரும் காத்துள்ளனர். மேலும், வேட்புமனு தாக்கல் வரும் 30-ம் தேதி தான் தொடங்க உள்ளது.*

*சுமார் 2 வார கால அவகாசம் இருக்கும் நிலையில், இப்போதே பிரச்சாரத்துக்கு செலவு செய்துவிட்டால், தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டால், கடைசி நேரத்தில் பிரச்சாரம் செய்வதற்கு செலவு செய்ய முடியாத நிலை ஏற்படும். எனவே, பொறுமையாக பிரச்சாரத்தை தொடங்கலாம் என காத்திருக்கிறோம், என்றனர்.*

*இதனிடையே, 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி கையெழுத்து இயக்கம், பேரணி, இருசக்கர வாகன பேரணி என தேர்தல் ஆணையம் தேர்தலுக்கான பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுள்ளது.*

*மேலும், ஒவ்வொரு தொகுதியிலும் பறக்கும் படை சோதனை, நிலைக்குழு கண்காணிப்பு என தேர்தல் ஆணையம் மட்டுமே, இப்போது தேர்தல் களத்தில் பரபரப்பாக இயங்கிக் கொண்டுள்ளது.*

## புதுவை முதல்வர் ரங்கசாமி வேட்புமனு தாக்கல்! 2 தொகுதிகளில் போட்டி!!



*புதுவையில் மங்களம், தட்டாஞ்சாவடி ஆகிய இரு தொகுதிகளில் முதல்வர் ரங்கசாமி போட்டியிட உள்ள நிலையில் தட்டாஞ்சாவடி தொகுதியில்(மார்ச் 20) வேட்புமனு தாக்கல் செய்தார்.*

*புதுவையில் வருகிற ஏப்ரல் 9 ஆம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. வேட்புமனு தாக்கல் கடந்த மார்ச் 16 ஆம் தேதி தொடங்கிய நிலையில் மார்ச் 23 கடைசி நாளாகும்.*

*ஆனால், புதுவையில் திமுக கூட்டணியிலும் சரி, என்.ஆர். காங்கிரஸ் கூட்டணியிலும் சரி இழுபறி நீடித்து வருகிறது. திமுக, காங்கிரஸ் கட்சிகள் தனித்தனியே வேட்புமனு தாக்கல் செய்து வருகின்றன. அதேபோல என்.ஆர். காங்கிரஸ் - பாஜக கூட்டணி இறுதியாகாமல் உள்ளது. எனினும் பாஜகவுடன்தான் கூட்டணியில் இருக்கிறோம் என்றும் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் முதல்வர் ரங்கசாமி கூறியுள்ளார். இந்நிலையில் புதுவையில் மங்களம், தட்டாஞ்சாவடி ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிட முதல்வர் ரங்கசாமி முடிவெடுத்துள்ளதாகத் தெரிகிறது.*

*முதலாவதாக தட்டாஞ்சாவடி தொகுதியில் போட்டியிட வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளார்.*

## "தேர்தல் பணியில் இருக்கும் அதிகாரிகளுக்கு திமுக தொடர் அழுத்தம்" - தவெக



"திமுகவினர் தொடர்ந்து தேர்தல் பணியில் இருக்கும் அதிகாரிகளுக்கு சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட அழுத்தம் கொடுப்பதும், சில அதிகாரிகள் அந்த அழுத்தத்திற்கு பணிந்து செயல்படுவதும் தேர்தல் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடக்கும் சூழலை உருவாக்காது," என தவெக கொள்கைப் பரப்பு பொதுச் செயலாளர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "நேற்றைய தினம் திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மல்லசமுத்திரத்தில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகி நடத்தி வரும் புகழ்பெற்ற பள்ளியில் தேர்தல் பறக்கும் படையினர் சட்டத்திற்கு புறம்பான ரெய்டு நடத்தி இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

தேர்தல் ஆணையத்தின் விதிமுறைப்படி ஓரிடத்தில் கணக்கில் காட்டப்படாத பணமோ பொருட்களோ பதுக்கி வைத்திருப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டால், பறக்கும் படையினர் வருமான வரித்துறையினருக்கு தகவல் அனுப்பி விட்டு, அந்த இடத்திற்கு விரைந்து சென்று, அந்த இடத்தை பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வரவேண்டும். அந்த இடத்திற்குள் நுழைந்து சோதனை செய்ய பறக்கும் படையினருக்கு அதிகாரம் இல்லை. முறையான வாரண்ட் உடன் வருமான வரித்துறையினர் தலைமையில் தான் சோதனை நடத்தப்பட வேண்டும்.

ஆனால் நேற்றைய தினம் திருச்செங்கோடு மல்லசமுத்திரம் பேரூராட்சியில் இயங்கி வரும் புகழ்பெற்ற *AKV* பள்ளியில் தேர்தல் பணியில் ஈடுபட்டிருக்கும் வெற்றிவேல் *(ASST AGRI OFFICER)* தலைமையில் தேர்தல் பறக்கும் படையினர் சட்டத்திற்கு புறம்பான சோதனை நடத்தியுள்ளனர். சோதனைக்குப் பிறகு அங்கு எந்த ஒரு பணமோ பொருளோ இல்லை என்பதை உறுதிப்படுத்தி சான்றிதழ் அளித்து சென்று இருக்கிறார்கள்.

இவ்வாறு சோதனை நடத்தவோ, சோதனையில் எதுவும் கிடைக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தி கடிதம் கொடுக்கவோ தேர்தல் பறக்கும் படையினருக்கு எந்த ஒரு அதிகாரமும் இல்லை. இதேபோல் *16-03-2026* அன்று திருச்செங்கோடு வரகுராம்பட்டியில், பட்டேல் நகர் பகுதியில் பூட்டி இருந்த வீட்டிற்குள் பரமராஜ் *(ASST AGRI OFFICER)* தலைமையில் தேர்தல் பறக்கும் படையினர் அத்துமீறி உள் நுழைந்து அங்கு வைக்கப்பட்டிருந்த ரூ. *23,000* மதிப்பிலான பொருட்களை பறிமுதல் செய்துள்ளனர் என தெரிவித்துள்ளார்.

## திமுக கூட்டணிக் கட்சிகளின் சீட்டை மக்களும் குறைப்பார்கள்: நயினார் நாகேந்திரன் கருத்து

*"திமுக கூட்டணி கட்சிகளின் சீட்டுகள் குறைக்கப்பட்டுள்ளதாக அனைவரும் சொல்கிறார்கள். திமுக கூட்டணி கட்சிகளுக்கான சீட்டை மக்களும் குறைப்பார்கள்" என பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.*

*இது தொடர்பாக நேற்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியதாவது: மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் இன்னும் ஓரிரு நாட்களில் தமிழகம் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை குறித்து பின்னர் அறிவிப்போம். தேர்தலுக்கு இன்னும் நாட்கள் உள்ளது. வேட்பு மனு தாக்கல் செய்ய 10 நாட்கள் அவகாசம் உள்ளது.*

*அமலாக்கத்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை வைத்து யாரையும் மிரட்ட வேண்டிய அவசியம் எங்களுக்குக் கிடையாது. அமலாக்கத் துறை வருமானத் துறை என்பவை எல்லாம் சுதந்திரமான அமைப்புகள்.*

*அமலாக்கத் துறை வழக்கில் சிக்கியவர்கள் மீதுதான் விசாரணை நடத்தப்படும். புதிதாக வழக்குப் பதிவு செய்தால் அமலாக்க துறையை வைத்து நாங்கள் மிரட்டுவதாகச் சொல்லலாம். தற்போது அமலாக்கத் துறை விசாரணையில் இருக்கும் அனைவர் மீதும் கடந்த தேர்தலுக்கு முன்பிருந்தே வழக்கு உள்ளது. விஜய் கட்சி ஆரம்பிப்பதற்கு முன்பிருந்தே அவர் மீதும் திமுக அமைச்சர்கள் மீதும் அமலாக்கத் துறை, வருமானவரித் துறை வழக்குகள் உள்ளது.*

*10 ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் மீது வழக்கு இருக்கும் சூழலில் இப்போது அதை வைத்து மிரட்டுவதாகச் சொன்னால் சரியானதாக இருக்குமா? தமிழக பாஜக தலைவர் என்ற முறையில் சொல்கிறேன், நீங்கள் குறிப்பிடும் யாருடனும் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. விஜய் கட்சியில் இருந்தும் எங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. அப்படி இல்லாத பட்சத்தில் பிம்பம் கம்பம் என்பதெல்லாம் தேவையில்லாதது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.*

*80 தொகுதிகளும் இரண்டரை ஆண்டுகள் முதல்வர் பொறுப்பும் தருவதாக விஜய்க்கு ஆஃபர் வந்ததாக ஆதவ் சொல்கிறாரே என செய்தியாளர்கள் கேட்டதற்கு, "ஆதவ் அர்ஜுனா என்பவர் யார் என்றே தெரியாது" என்றார்.*

## "அதிமுகவை எதிர்க்க இயலாமல் 'டெல்லி அணி' என திசை திருப்புகிறார் முதல்வர்" - டிடிவி தினகரன்



"அதிமுகவை எதிர்க்க தைரியம் இல்லாமல், 'டெல்லி அணி' என்று திசை திருப்பப் பார்க்கிறார் முதல்வர் ஸ்டாலின்," என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவையில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணியில் இடம் பெற்றுள்ளது. சட்டப்பேரவை தேர்தல் தேதி அறிவிப்புக்கு பிறகு நேற்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி டெல்லி சென்றுவந்த நிலையில் இன்று டிடிவி தினகரன் டெல்லி செல்ல சென்னை விமான நிலையம் வந்தார்.

முன்னதாக செய்தியாளர்களை சந்தித்த அவர், "அதிமுக தலைமையிலான தே.ஜ.கூட்டணி தமிழக சட்டப்பேரவையில் போட்டியிட இருக்கிறது. இக்கூட்டணியில் பாஜக அங்கம் வகிக்கின்றது, நாங்கள் அவர்களுடன் கூட்டணியில் இருக்கின்றோம் (அமமுக). எனவே அந்த கூட்டணியில் உள்ள பாஜகவின் டெல்லி தலைமை எங்களிடம் பேச்சுவார்த்தை நடத்துகிறது.

இந்த சந்திப்பு நான்கு நாட்களுக்கு முன்பாக கிடைக்கப்பெற்ற அழைப்பை பொருத்தே நடக்கிறது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை பொருத்தவரை, இது அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணி மட்டுமே. இதனை ஊடகங்கள் வாயிலாக முதல்வருக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்." என்றார்.

மத்திய அரசிடம் நிதியை பெற்றுத் தர வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை குறித்து பேசிய தினகரன், "தேர்தல் அறிவிப்புக்கு பிறகு மத்திய அரசிடம் எப்படி நிதியை பெற்றுத் தர முடியும் ?.

கடந்த 5 ஆண்டுகளில் மத்திய அரசிடம் இருந்து கிடைத்த நிதியை திமுக எப்படி சுரண்டியது என்பது மக்களுக்கு நன்றாக தெரியும். திமுகவை அகற்ற வேண்டும் என்று வாக்குப்பதிவு நாளுக்காக தமிழக மக்கள் காத்துகொண்டு இருக்கின்றனர்.

அதிமுகவை எதிர்க்க தைரியம் இல்லாமல், 'டெல்லி அணி' என்று திசை திருப்பப் பார்க்கிறார் முதல்வர். இவர்கள் மத்தியில் அத்தனை ஆண்டு காலம் இருந்தும் தமிழக மக்களுக்கு என்று என்ன செய்தார்கள். நீட் தேர்வை கொண்டு வந்தது திமுக, இலங்கை தமிழர்களை கொன்று குவிக்கும் போது மத்தியில் அங்கம் வகித்து வாய்மூடி மவுனம் காத்துவிட்டு, என்டிஏ கூட்டணி குறித்து பேச திமுகவினருக்கு தகுதி இல்லை." என்று டிடிவி தினகரன் கூறினார்.

# ஸ்ரீரங்கம் நம்பெருமாளுக்கு சிறப்புத் திருமஞ்சனம்

**ஸ்ரீரங்கம், மார்ச் 21:**

யுகாதி என்னும் தெலுங்கு வருட பிறப்பையொட்டி ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி கோயிலில் நம்பெருமாளுக்கு வியாழக்கிழமை காலை சிறப்பு திருமஞ்சனம் நடைபெற்றது.

விழாவையொட்டி வியாழக்கிழமை காலை நம்பெருமாள் சிறப்பு அலங்காரத்தில் புறப்பட்டார். அவருடன் ஆழ்வார்களும் எழுந்தருளி, ஸம்வத்ஸராதி புறப்பாடு கண்டருளினர். தொடர்ந்து சந்தனு மண்டபத்தில் நம்பெருமாளுக்கு சிறப்புத் திருமஞ்சனம் நடைபெற்றது. நம்பெருமாள் புறப்பாடு நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

ஏற்பாடுகளை கோயில் இணை ஆணையர் செ. சிவராம்குமார் மற்றும் கோயில் பணியாளர்கள் செய்தனர். புதன்கிழமை அமாவாசையன்று சதுர்த்தசி திதி கலந்து இருந்ததால் நம்பெருமாள் புறப்பாடு மற்றும் திருமஞ்சனம் நடைபெறவில்லை என்பது குறிப்பிடதக்கது.

# ஏழுமலையான் கோயிலில் உகாதி பண்டிகை கோலாகலம்; வழிபட்ட முஸ்லிம்கள்

**திருமலை, மார்ச் 21:**

பராபவ நாம தெலுங்கு வருடப் பிறப்பை முன்னிட்டு திருப்பதி ஏழுமலையான் கோயிலில் நேற்று முகப்பு கோபுரம், பலிபீடம், தங்க கொடிமரம், உப சன்னதிகள் மற்றும் கோயில் வெளிப் புறத்தில் ஸ்ரீ ராமர், ஸ்ரீ கிருஷ்ணர், ஏழுமலையான், மச்சாவதார சிலைகள் வைத்து வண்ணமிகு மலர்க்காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது. இது பக்தர்களை வெகுவாக கவர்ந்தது.

மூலவருக்கு புதிய பட்டாடை உடுத்தி சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டன. உற்சவர்களான ஸ்ரீதேவி, பூதேவி சமேத மலையப்பருக்கும் புதிய பட்டாடை உடுத்தி, சேனாதிபதியான விஸ்வக்சேனருடன் கருடன் சன்னதி அருகே கொண்டு வந்து, அங்கு புதிய பஞ்சாங்கம் வாசிக்கப்பட்டது. அப்போது இந்த ஆண்டு பலன்களை வேத பண்டிதர்கள் கூறினர்.

பிறகு பக்தர்கள், அதிகாரிகள் அனைவருக்கும் 'உகாதி பச்சடி' பிரசாதமாக வழங்கப்பட்டது.

கடப்பா மாவட்டம், தேவுன்னி கடப்பா பகுதியில் உள்ள ஸ்ரீ லட்சுமி வெங்கடேஸ்வரர் திருக்கோயிலிலும் நேற்று உகாதி பண்டிகை கொண்டாடப்பட்டது.

அப்போது, அந்த ஊரில் வசிக்கும் இஸ்லாமியர்கள் குடும்பம், குடும்பமாக வந்து பெருமாளை வழிபட்டனர்.

ஒவ்வொரு ஆண்டும் பீபி நாச்சியார் சமேதமாக உள்ள பெருமாளை வழிபடுவது இங்குள்ள இஸ்லாமியர்களின் வழக்கம்.

பெருமாளை இவர்கள் தங்கள் வீட்டு மருமகனாக பார்க்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருமலை ஏழுமலையான் கோயிலில் யுகாதி ஆஸ்தானம் கோலாகலம்

**திருப்பதி, மார்ச் 21:**





திருமலையில் உள்ள ஏழுமலையான் கோயிலில், யுகாதி ஆஸ்தானம் வியாழக்கிழமை கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

ஆண்டுதோறும் தெலுங்கு புத்தாண்டான யுகாதி மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அதன்படி வியாழக்கிழமை கோயிலில் ஆஸ்தானம் நடைபெற்றது.

அதையொட்டி, ஏழுமலையானுக்கு சுப்ரபாதம் முடிந்த பிறகு, சுத்தி செய்யப்பட்டது. அதைத் தொடா்ந்து, ஸ்ரீதேவி பூதேவி, ஸ்ரீ மலையப்ப சுவாமி மற்றும் விஸ்வக்ஷேனரை தங்க வாயில் அருகே கருடாழ்வாா் முன் எழுந்தருளச் செய்து, அவா்களுக்கு பட்டு வஸ்திரம் உள்ளிட்ட சிறப்பு அா்ப்பணிக்கப்பட்டது.

பின்னா், விமான பிரகாரம் மற்றும் கொடிமரத்தைச் சுற்றி உற்சவமூா்த்திகளை ஊா்வலமாக கோயிலுக்குள் கொண்டு சென்றனா. அதன் பிறகு, ஏழுமலையானின் மூலவா் மற்றும் உற்சவ சிலைகளுக்குப் புதிய ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

பின்னா், பஞ்சாங்க படித்தல் நடைபெற்றது. ஆகம அறிஞா்களும் அா்ச்சகா்களும் தங்க வாயிலில் யுகாதி ஆஸ்தானத்தை நிகழ்த்தினா்.

இதில், திருமலை ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியஜீயா் சுவாமி, ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சின்னஜீயா் சுவாமி, செயல் அதிகாரி ரவிச்சந்திரா, அறங்காவலா் குழு உறுப்பினா்கள், இணை செயல் அதிகாரி (கல்வி மற்றும் மருத்துவம்) டாக்டா் ஏ. சரத், பாதுகாப்பு அதிகாரி முரளி கிருஷ்ணா ஆகியோா் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனா்.

பின்னா், செயல் அதிகாரி ரவிச்சந்திரா கூறியது ஸ்ரீ பரபாவ நாம ஆண்டு பிறப்பை முன்னிட்டு, நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள ஏழுமலையான் பக்தா்களுக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு அனைவருக்கும் நல்ல ஆண்டாக அமையவும், மாநிலம் செழிப்பாக இருக்கவும் சுவாமியிடம் பிராா்த்தனை செய்ததேன்", என்றாா்.

பண்டிகையை முன்னிட்டு, ஏழுமலையான் கோயிலைச் சுற்றியுள்ள முன் வாயில், கோயிலுக்கு முன்பாக மற்றும் ஜிஎன்சி சுங்கச்சாவடி பகுதிகளில் தேவஸ்தான தோட்டக்கலைத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மலா் அலங்காரங்கள் பக்தா்களைக் வெகுவாக கவா்ந்தது.

# திருமலையில் 72,332 பக்தர்கள் தரிசனம்

**திருமலை, மார்ச் 21:**



திருமலை ஏழுமலையான் கோயிலில் புதன்கிழமை முழுவதும் 72,332 பக்தா்கள் தரிசித்தனா். 21,852 பக்தா்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினா்.

பக்தா்களின் எண்ணிக்கை குறைந்துள்ள நிலையில், வியாழக்கிழமை நிலவரப்படி தா்ம தரிசனத்துக்கு 12 (தரிசன டோக்கன்கள் இல்லாதவா்கள்) மணிநேரமும், ரூ.300 விரைவு தரிசனம், நேரடி இலவச தரிசன டோக்கன்கள் பெற்ற பக்தா்களுக்கும் 3 முதல் 4 மணி நேரம் ஆனது. அலிபிரி நடைபாதை வழியாக மதியம் 2 மணிவரை 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள், அவா்களின் பெற்றோா், இரவு 10 மணிவரை அனைத்து பக்தா்களும் அனுமதிக்கப்படுகின்றனா்.

மேலும், புதன்கிழமை முழுவதும் 72,332 பக்தா்கள் தரிசனம் செய்தனா்; 21, 852 பக்தா்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினா்.

உண்டியல் காணிக்கையை கணக்கிட்டதில் ரூ.3.53 கோடி வசூலானது என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

# மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில் ஊஞ்சல் உற்சவம்

**மேல்மலையனூர், மார்ச் 21:**



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூரில் உள்ள பிரசித்தி பெற்ற அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில் பங்குனி மாத அமாவாசையன்று இரவு ஊஞ்சல் உற்சவம் வெகுவிமரிசையாக நடந்தது.

இதையொட்டி அதிகாலையில் கோவில் நடை திறக்கப்பட்டு மூலஸ்தானத்தில் உள்ள அங்காள பரமேஸ்வரி அம்மனுக்கும், சிவபெருமானுக்கும் பால், தயிர், சந்தனம், மஞ்சள், விபூதி, குங்குமம், இளநீர், பஞ்சாமிர்தம், தேன், பன்னீர் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை கொண்டு சிறப்பு அபிஷேகமும், ஆராதனையும் நடைபெற்றது. தொடர்ந்து அம்மனுக்கு தங்க கவசம் அணிவிக்கப்பட்டு மகாதீபாராதனை காண்பிக்கப்பட்டது. அதன்பிறகு உற்சவர் அம்மனுக்கு பல்வேறு வகையான மலர்களை கொண்டு சேஷசயனம் அலங்காரம் செய்யப்பட்டு உட்பிரகாரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். பின்னர் இரவு 11 மணியளவில் மேள தாளம் முழங்க வடக்கு வாசல் வழியாக உற்சவர் அங்காள பரமேஸ்வரி அம்மன் சிறப்பு அலங்காரத்தில் ஊஞ்சல் மண்டபத்தில் எழுந்தருளினார். அப்போது அங்கு இடி-மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இருப்பினும் ஊஞ்சல் மண்டபம் எதிரில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கொட்டும் மழையில் குடைகளை பிடித்தபடி கற்பூர தீபம் ஏற்றி அம்மனை வழிபட்டனர். நள்ளிரவு 12 மணிக்கு ஊஞ்சல் உற்சவம் முடிந்து, அம்மனுக்கு அர்ச்சனை செய்து, தீபாராதனை காண்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து உற்சவர் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில் உள் மண்டபத்தை அடைந்தார்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

# கொள்ளுவின் மருத்துவ குணங்கள்!



கொள்ளு (MACROTYLOMA UNIFORUM) என்பது ஒரு வகை பயறு இனமாகும். தட்டையாக பழுப்பு மற்றும் மண்ணின் நிறத்திலும் காணப்படும் ஒரு வகை தானியமாகும். கொங்கு நாடு மற்றும் தெற்கு கர்நாடகா பகுதி உணவு வகைகளில் கொள்ளு பருப்பு அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

இளைத்தவனுக்கு எள்ளு கொழுத்தவனுக்கு கொள்ளு என்பது நமது பழமொழி. ஏழைகளின் மருந்து நோய்களை விரட்டும் பருப்பு என பாரம்பரிய மருத்துவத்தில் புகழ் பெற்றது கொள்ளு பருப்பு. குறைந்த செலவில் கிடைக்கும் இந்த பருப்பு, அதிக ஊட்டச்சத்து கொண்ட ஒரு சூப்பர் உணவு ஆகும் என்கிறார் உணவியல் நிபுணர் சங்கீதா

தினசரி எடுத்துக் கொள்ள வேண்டிய அளவு முறைகள்

ஊற வைத்த கொள்ளு : ஒரு கைப்பிடி அளவு முறைகள் ( கால் கப் முதல் அரை கப்) 30 - 50 கிராம் இரவு முழுவதும் ஊறவைத்து, காலையில் எலுமிச்சை சாறுடன் வெறும் வயிற்றில் சாப்பிடலாம். எடை இழப்புக்கு மிகவும் உதவும். கொள்ளுப் பொடி – சுவையை அதிகரிக்க உங்கள் வழக்கமான ரசத்தில் 2-3 தேக்கரண்டி வறுத்து அரைத்த கொள்ளுப் பொடியைச் சேர்க்கலாம்.

முக்கிய ஆரோக்கிய நன்மைகள்

உடல் எடை குறைப்பிற்கு சிறந்தது – கொள்ளு பருப்பு கலேரிகள் குறைவாகவும், நார்ச்சத்து அதிகமாகவும் இருப்பதால் நீண்ட நேரம் பசியை கட்டுப்படுத்துகிறது.

*உடலில் கொழுப்பு சேர்வதை குறைக்கும்.

*மெட்டபாலிசத்தை அதிகரிக்க உதவும்.

*நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற உணவு.

*குறைந்த கிளைசமிக் இன்டக்ஸ் கொண்டது.

*ரத்த சர்க்கரை திடீரென உயர்வதை தடுக்கிறது.

*இன்சுலின் செயல்பாட்டை மேம்படுத்துகிறது.

*இதய ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது.

*கெட்ட கொழுப்பு (எல்டிஎல் கொலஸ்ட்ரால்) அளவை குறைக்கிறது. *நல்ல கொழுப்பு (எச்டிஎல் கொலஸ்ட்ரால்) அதிகரிக்க உதவுகிறது.

*ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துகிறது.

# சோலார் கிச்சன்: காஸ் சிலிண்டர் தேவையின்றி சூரிய சக்தியில் இயங்கும் சமையலறை!





ஈரான் மீது அமெரிக்கா - இஸ்ரேல் கூட்டு படைகள் தாக்குதல் மேற்கொண்டதால் மேற்காசியாவில் போர் மூண்டுள்ளது. இதனால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் மற்றும் எல்பிஜி விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் எதிரொலி இப்போது இந்திய தேசத்தின் சமையலறையில் எதிரொலிக்க தொடங்கியுள்ளது.

இந்தியாவின் பெரும்பாலான நகரங்களில் உணவகங்களுக்கு விநியோகிக்கப்படும் வர்த்தக காஸ் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் உணவகங்களின் வழக்கமான செயல்பாடு பாதிக்கப்பட்டுள்ளது. சில உணவகங்கள் மாற்று ஏற்பாடாக விறகுகளுக்கு மாறியுள்ளன. இந்த நிலை தற்போது சீரடையத் தொடங்கியிருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சூழலில் புதுச்சேரிக்கு அருகே தமிழகப் பகுதியில் அமைந்துள்ள சர்வதேச நகரமான ஆரோவில் நகரில் சூரிய சக்தியில் இயங்கும் 'சோலார் கிச்சன்' இயங்கி வருகிறது. இதன் செயல்பாடு குறித்து பார்ப்போம். நவீன வடிவிலான சோலார் பேனல்கள் இல்லாமல் 'சோலார் BOWL' மூலம் சூரிய ஒளி மூலம் நீரினை வெப்பமடைய செய்து, அதைக் கொண்டு இந்த சோலார் கிச்சனில் சுமார் 80 சதவீத உணவுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த உணவகத்தின் செயல்பாடு குறித்து சோலார் கிச்சனில் பணியாற்றி வரும் ரஜினிகாந்த் விவரித்தார்.

"சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு ஆரோவில் நகரில் சோலார் கிச்சன் நிறுவப்பட்டது. ஆரோவில் நகரில் வசிக்கும் சமூக மக்கள் மற்றும் ஆரோவில் அறக்கட்டளையும் இணைந்து இதனை நிறுவினர். இதன் நிர்வாகத்தை ஆரோவில் அறக்கட்டளை கவனித்து வருகிறது. இங்கு இயற்கையாக கிடைக்கும் ஆற்றலை கொண்டு இந்த சமையலறையை இயக்க செய்ய வேண்டுமென்ற முடிவில் இதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டது.

இந்த சோலார் கிச்சனில் சிறப்பு என்னவென்றால், இங்குள்ள அமைக்கப்பட்டுள்ள சோலார் BOWL தான். இதில் கண்ணாடிகள் பொருத்தப்பட்டுள்ளன. அதில் சூரிய ஒளி படர்ந்து மேற்புறம் உள்ள ரிப்ளக்டரில் விழும். அந்த வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. ரிப்ளக்டர் வெப்பமடைந்து அதனோடு இணைக்கப்பட்டுள்ள குழாய் வெப்பமடையும். அந்த வெப்பம் உணவகத்தின் கீழ் பக்கம் உள்ள கொதிப்பானுக்கு கடத்தப்படும். அதன் மூலம் அதில் உள்ள நீர் வெப்பமாகும். அதை கொண்டு நாங்கள் இந்த உணவகத்துக்கு தேவையான 80 சதவீத உணவுகளை தயாரிக்கிறோம். இதர சமையல் பணிகளுக்கு விறகுகளை பயன்படுத்துகிறோம். இதன் பராமரிப்பு மிகவும் முக்கியம். அதனால் சீரான இடைவெளியில் அதற்கான பணிகளை மேற்கொள்வோம். அதனால் எங்கள் உணவகத்தில் காஸ் சிலிண்டர் தேவை என்பது இல்லை. முழுவதும் ஆரோவில்லில் இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட காய்கறிகளை கொண்டு இங்கு உணவு தயார் செய்கிறோம். மதியம் மற்றும் மாலை உணவு இங்கு கிடைக்கும். இது ஆரோவில் சமூகமக்களுக்கான உணவுக்கூடம். வெளிநபர்கள் இங்கு வந்து உணவு சாப்பிட முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். நாளொன்றுக்கு சுமார் 1,500 பேருக்கு உணவு தயாரிக்கிறோம். இதில் சரிபாதிக்கும் மேலான உணவு இங்குள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இங்குள்ள மக்கள் அதிகம் விரும்பி சாப்பிடும் உணவகமாக உள்ளது. இதோடு ஆரோவில் நகரில் உள்ள மூத்த குடிமக்களின் ஊட்டச்சத்து குறைபாடுகளை கண்டறிந்து, அதற்கேற்ற பிரத்யேக உணவுகளும் (டயட்) தயாரிக்கப்படுகிறது. இந்த உணவகம் மூலம் ஆரோவில்லை சுற்றி அமைந்துள்ள பகுதிகளின் மக்களும் வாழ்வாதாரம் பெறுகின்றனர்.

காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு நிலவினாலும் எங்களுக்கு அதனால் பாதிப்பில்லை" என அவர் தெரிவித்தார். சாதம், சாம்பார், வேகவைத்த காய்கறிகள், இட்லி, சாலட், பாஸ்தா உள்ளிட்ட உணவுகள் சோலார் கிச்சனின் மெனுவில் இடம்பெற்றுள்ளது. முழுவதும் சைவ உணவு மட்டுமே இந்த சோலார் கிச்சனில் தயாரிக்கப்படுகிறது

**நன்றி: இந்து தமிழ் திசை**

# "சிரிப்பே பலம்"

மழை நின்றதும் சரவணன் வெளியே வந்தான். அம்மாவின் மருத்துவமனை பில் கையில். வங்கி கடன் மெசேஜ் மொபைலில். வேலை இழந்ததை நினைவூட்டும் மேலாளரின் குரல் காதில். எல்லாவற்றிற்கும் மேலாக அப்பா உயிரோடு இருந்திருந்தால்...? என்ற எண்ணம் நெஞ்சில்.கதறி அழ ஆயிரம் காரணங்கள்.
பஸ் ஸ்டாண்டில் நின்றபோது சரவணனின் மொபைல் ஒலித்தது. "டேய்... சரவணா! இன்று அம்மா அப்பாவின் 40வது மணநாள்... எங்க வீட்டிலே சின்ன ஃபங்ஷன்.... நீ கட்டாயம் வரணும்"
எதிர் முனையில் நண்பன் ஆனந்த். சரவணன் ஒரு நொடி தயங்கினான். மருத்துவமனை பில், கடன், வேலை இழப்பு எல்லாம் நினைவுக்கு வந்த போதும் "கண்டிப்பா வர்றேன்டா," என்றான்.
ஆனந்தின் வீட்டில் சந்தோசமும், சிரிப்பும் நிரம்பியிருந்தன.
சாம்பிராணி வாசனை. சின்னச் சின்ன வண்ண விளக்குகள். பழைய பாடல்கள் சன்னமாய் ஒலித்தன. ஆனந்தின் அம்மாவும், அப்பாவும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரிக்கும் போது, சரவணனுக்கு தன் பெற்றோர் நினைவுக்கு வந்தனர். ஆனாலும் அவன் சிரித்தான். கேக் வெட்டும் போது கை தட்டினான். குழந்தைகளோடு கலகலப்பாய் பேசினான். ஜோக் சொன்னான். எல்லோரும் சிரித்தனர். ஆனால் ஆனந்த் மட்டும் அமைதியாக அவனை கூர்மையாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்.
ஃபங்ஷன் முடிந்து மாடியில் இருவரும் நின்றனர். ஆனந்த் மெதுவாகக் கேட்டான்.
"உன் சிரிப்புக்கு பின்னாலே ஏதோ நெருடல் தெரிகிறது... என்ன பிரச்சினை?"
அந்த ஒரு கேள்வி, சரவணன் கட்டியிருந்த சுவரை உடைத்தது.
அமைதியாகச் சொன்னான். "அம்மா ஹாஸ்பிடலில்.... இருக்காங்க!... எனக்கும் வேலை போச்சு.... கையில் பணம் இல்லை... கதறி அழணும் போல இருந்தும்... உன் வீட்டுல சிரிக்கணும்னு தோணிச்சு." சில நொடிகள் அமைதி. ஆனந்த் கீழே இறங்கி உள்ளே போனான். சில நிமிடங்களில் திரும்பி வந்தான். ஒரு கவரை சரவணன் கையில் வைத்தான்.
"இது கடன் இல்லை... நண்பன் உரிமை... நாளை வேலை கிடைக்கும் போது நீ வேறொருவருக்கு உதவி பண்ணு.... அதுதான் ரிட்டர்ன்." சரவணனின் கண்களில் நீர் திரண்டது. ஆனந்த் சிரித்தபடி சொன்னான். "பலம் என்பது அழுகையை மறைப்பது அல்ல. அழுகைக்கு இடமிருந்தும்சிரிப்பைத் தேர்ந்தெடுப்பது"



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# ஆருயிர் தோழி...!



எப்போதெல்லாம் கோடை விடுமுறையில் பெரியம்மா வீட்டுக்குச் செல்கிறேனோ அப்போதெல்லாம் நான் வந்திருப்பதை கேள்விப்பட்டு நலம் விசாரிக்க வருவாள் என் அன்பான தோழி நந்தினி.
என் மீது அளவுகடந்த அன்பும் பாசமும் வைத்திருந்தவள், கருப்பு நிறம். கலையான முகம். கருகருவென வளர்ந்திருந்த கூந்தல். சிரித்த முகமுடைய தோற்றம். இதுதான் என் தோழியின் உடல் மொழியின் அடையாளங்கள்.
வருடத்திற்கு ஒரு முறை அய்யனார் கோயிலில், ரைஸ் மில்லில் தென்னந்தோப்பில் தோழியோடு விளையாடிய நினைவுகள் அழிக்கமுடியாதவையாய் உயிர்வாழ்கிறது .
மாலை நேரத்தில் முகம் கழுவி தலைவாரி சின்னதாய் பொட்டுட்டு சிரித்த முகத்தோடு பெரியம்மா விட்டு திண்ணையில் உட்கார்ந்து என்னோடு கள்ளம் கபடம் இல்லாமல் பேசிப் பழகியவள்.
நந்தினி அம்மாவும் பாட்டியும் என் மீது அக்கறையும் பாசமும் கொண்டவர்கள். என் கல்லூரி கால அனுபவங்களை என் தோழியோடு கலகலப்பாக பேசி கழித்தக் காலங்கள் மனதுக்குள் மறையாமல் உள்ளது. என் எதிர்கால திட்டம், நிகழ் காலப் பயணம், அதை அடைவதற்குண்டான பாதை இவை அனைத்தையுமே என் தோழியிடம் மறைக்காமல் சொல்லிவிடுவேன்.
நான் சொல்லும் ஒவ்வொரு சொல்லையும் முகம் சுளிக்காமல் சிரித்த முகத்தோடு பொறுமையாய் உட்கார்ந்து கேட்டு என்னை ஊக்கப்படுத்தும் அழகான தோழி அவள் .
அய்யனார் கோயில் தெருவில், பங்களா வீட்டுக்கருகில் வரிசையாக கட்டப்பட்டு வீடுகளில் ஒன்றுதான் தோழி நந்தினியின் வீடு. அவள் வீட்டுக்கு முன்னால் சாக்கடை தண்ணீர் வழிந்து ஓடும்.
தோழியின் மனதிற்குள் பெரிய கனவு இருந்ததாக தெரியவில்லை. என் கல்லூரிக் காலத் தோழிகளைவிட, பெரியம்மா வீட்டுக்குப் பக்கத்து தெருவில் வசித்த நந்தினியின் தோழமை சிறந்தது.
என் தோழியை பற்றிய நினைவுகளை நினைத்து ஜன்னல் ஓரம் நின்றிருந்தேன்.
பெரிய மரத்தின் ஒற்றைக் கிளையில் தனித்து தவித்துக் கொண்டிருந்த ஊர் குருவிபோல என் தோழி வாழ்ந்தாளோ என்று எண்ணத் தோன்றியது.
மனதுக்குள் காதலையும் ஆசையையும் மறைத்துவைத்து சொல்லத் தெரியாமல் காலத்தைக் கழித்து விட்டாளோ என்று அவள் மீது பரிதாபப்பட்டேன்..
அவள்தான் சொல்லவில்லை நாமாவது சொல்லியிருக்கவேண்டும் என்று இப்போது வருத்தப்பட்டு நின்றிருந்தேன்.
என் ஆருயிர் தோழி இன்று வரை வாழ்க்கைத் துணையின்றி தனித்தே வாழ்ந்திருக்கிறாள் என்று நினைக்கும்போது மனதிற்கு கஷ்டமாக இருந்தது. இந்த முடிவை அவள் எடுத்ததற்கு நான்தான் காரணமாக இருந்திருப்பேனோ என்றும் நினைக்கத் தோன்றுகிறது.
காலங்கள் கடந்து, தோழியின் மனதிற்குள்ளிருந்ததை கடிதமாக எழுதி வைத்துவிட்டுச் சென்றதை, அவள் அப்பா என்னிடம் கடிதத்தைக் கொடுத்து படிக்கச் சொன்னபோது நிலைகுலைந்து போய்விட்டேன்.
தோழி எழுதிய கடிதத்தில். அன்புள்ள...... என்று ஒரு கோடிட்டு, அடுத்தது இப்படி தொடங்குகிறது.
நீ ஊரிலிருந்து வந்திருக்கிறாய் என்பதை கேள்விப்பட்டு, என்னை அலங்கரித்துக்கொண்டு உன் பெரியம்மா வீட்டுத் திண்ணையில் சிரித்த முகத்தோடு உட்கார்ந்திருப்பேன். நீயும் என்னோடு அளவுகடந்த அன்போடு நிறைய பேசி என் மனதிற்கு மகிழ்ச்சியை தந்திருக்கிறாய்., நீ வரும் ஒவ்வொரு முறையும் எப்படியாவது என் மனதுக்குள் இருக்கின்ற ஆசையை வெளிப்படுத்திட வேண்டும் என்று நினைப்பேன்.
அது முடியாமல் போய்விட்டது. தோல்வியில் முடியும்போதெல்லாம். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று என் மனதை தேற்றிக்கொண்டேன். எனக்குள் இருந்த ஆசையை சொல்ல முடியாமல் போனதற்கு உனக்கும் எனக்கும் இருந்த அந்த சாதிய பாகுபாடுதான் காரணம். நீ எங்கு ஏற்க மறுத்து, தட்டிக் கழித்து விடுவாயோ என்ற அவநம்பிக்கை எனக்குள் இருந்தது. ஆனால், உன்னுடைய ஒவ்வொரு பயணத்தின் வருகையின் போதும், உன்னோடு பழகியதில், அந்த சாதியை அழுக்குக்கள் சிக்கி தவிப்பவன் இல்லை என்பதைப் புரிந்து கொண்டேன். கடைசியாக உன்னிடத்தில் எப்படியாவது என் மனதுக்குள்ளிருக்கின்ற தவிப்பை சொல்லி விடலாம் என்று நினைத்துக்கொண்டிருந்த வேளையில், இப்படி நடந்துவிட்டது. கடைசிவரை சொல்ல முடியவில்லை.
எனக்குள்ளே உன்னைப் பற்றிய உயர்ந்த மதிப்பை பாதுகாத்து வைத்துள்ளேன் காதலாய்.... இப்படிக்கு உன் அன்புள்ள...." என்று கடிதம் முடிகிறது
தோழி நேரடியாக அவள் மனதில் உள்ளதை சொல்லியிருந்தாள், அவளுக்காக ஏற்றுக்கொண்டிருப்பேன். இப்பொழுது தோழி இல்லை. எனக்குள் அவளின் நினைவுகள் வாழ்கிறது. மன்னித்துவிடு தோழி. உன்னை நான் தோழியாக அடைந்தது நீ எனக்கு கிடைத்த.....என்று வருந்தினான்.
தோழியின் கடிதத்தை படித்து முடித்த அடுத்த நொடியில், தோழிக்கு நான் எழுதிய கடிதத்தை அறையில் தேடினேன். ஒரு நாட்குறிப்பு புத்தகத்திலிருந்து கடிதத்தை எடுத்து படித்தேன். அவளுக்குள் இருந்த ஆசையின் தவிப்பைப் போலே, தானும் ஆசைப்பட்டு தவித்திருந்ததை சொல்ல முடியாமல், கடிதமாக எழுதி வைத்திருந்ததை, மீண்டும் ஒருமுறை படித்து கண்ணீர் வடித்தேன்.
என் ஆருயிர் தோழி, என் வருகைக்காக நீ வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தது எனக்கு நன்றாகத் தெரியும். என் வருகையை கேள்விப்பட்டு, நேரில் வந்து நலம் விசாரித்து பிரியமுடன் பேசிவிட்டு செல்வாய்.
என்மீதான உன் பிரியத்தை எப்படி சொல்வது, வார்த்தை இல்லை. என் கல்லூரிக்கால நிகழ்வுகளை உன்னோடு பகிர்ந்துகொண்டேன், சிரித்த முகத்தோடு ரசித்து கேட்டவள், என்னுடைய நோக்கம், இலக்கு, பயணம், அனைத்தையும் உன்னிடத்தில் சொன்னபோது. ஒவ்வொன்றையும் கேட்டுவிட்டு என்னை ஊக்கப்படுத்தினாய்.
எனக்குள் உன்னை "............... ." என்று கடிதத்தில் எழுதியதை படித்து முடித்து அடுத்த விநாடியில், கண்ணீர் சிந்தினேன்.
காலம் கடந்து இரண்டு கடிதங்கள் ஒன்றோடு ஒன்று பேசிக்கொண்டன, சொல்ல மறந்த சுகமான ஆசைகளை.



- கயப்பக்கம்
இரா.இரமேஷ்

# ஔவையின் குறளும் ஆன்மீகப் பதிவும்

அதிகாரம் 2



■Banumathi Nachiyar




## குறள் 6

மாசற்ற கொள்கை மனத்தில
டைந்தக்கால் ஈசனைக் காட்டு முடம்பு

**விளக்கம்**

உடம்பானது மனதில் உள்ள குற்றங்களை நீக்கும் குணமுடையதாகில், அவ்வுடம்பு ஈசனைக் காட்டும், அதாவது உணர்விக்கும் என்பது கருத்து. இந்த உடம்பானது உணர்ச்சிகளால் சம்பந்தப்பட்டிருப்பதால் மனத்தைச் சுத்தப்படுத்துதல் என்பது எளிதானதல்ல. அதனால் தான் ஔவையும் மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தக்கால் என்கிறார். சுத்தமடைந்து விட்டால் அந்தத் தேகத்தால் ஈசனைக் காணலாம் என்கிறார். அதனாலேயே ஈசனைக் காட்டும் உடம்பு என்கிறார். புறந்தூய்மை நீரான் அமையும் என்பது வள்ளுவம்.
ஔவையார் சங்க காலம் முதல் பிற்காலம் வரை வாழ்ந்த, பல தமிழ்ப் புலவர்களைக் குறிக்கும் பொதுச்சொல். சங்க கால ஔவையார் தான் இப்பாடல்களையும் எழுதி இருக்க வேண்டும். எட்டுத்தொகை நூல்களில் இவரது பாடல்கள் உள்ளன. அதியமான் காலத்தில் வாழ்ந்தவரும் இவரே. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்த நிகழ்வு வரலாறு.
ஔவையின் குறளும் ஆன்மீகப் பதிவும்

## குறள் 7

ஓசை உணர்வுக ளெல்லாந்
தருவிக்கு நேசத்தா லாய உடம்பு

**விளக்கம்**

ஓசை, சத்தம் ஆகிய பஞ்சதன் மாத்திரைகள், உணர்வுகள் எல்லாம் விருப்பத்தால் உண்டான சரீரமானது உண்டாக்கும். பஞ்சதன் மாத்திரைகள் ஆகிய ஒலி, பரிசம், ரூபம், ரசம், கந்தம் ஆகிய உணர்ச்சிகளை எல்லாம் உடம்பின் தத்துவ அளவுக்கு ஏற்றபடி விருப்பத்தால் உண்டாகும் என்பர்.
அதாவது உடம்பால் புலன்களின் விருப்பத்தால் உண்டாகும் உணர்வுகள் ஆன்மாவை நோக்கி இருக்க வேண்டும். அதன் அளவுக்கு ஏற்றபடியே ஆன்மா இறைவனை அடையும் இலக்கை அடையும் . இறைவனின் புகழைப் பாடும் வாய் திருவருவத்தைக் காணும் கண், நாமங்களை, கதைகளைக் கேட்கும் செவி, அவனது குணங்களைச் சுவைக்கும் சுவை, பரிசம் என்று உண்டாகும் தேகத்தின் ஐம்புலன்களால் ஏற்படும் ஆசையின் அளவுக்கேற்றபடியே ஆன்மா இறைவனை நோக்கி பயணப் படுகிறது என்பது கருத்தாகும்.

(தொடரும்).

# ரமலான்: இறை அச்சமும் பொறுமையும் மலரும் புனித மாதம்

இஸ்லாத்தின் ஐந்து அடிப்படைத் தூண்களில் ஒன்றான நோன்பு, ரமலான் மாதத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது. 'ரமலான்' என்ற சொல்லிற்கு 'சுட்டெரிக்கும் வெப்பம்' என்று பொருள். இது மனிதனின் பாவங்களைச் சுட்டெரித்து அவனைத் தூய்மைப்படுத்துவதைக் குறிக்கிறது.




புனித குர்ஆன் அருளப்பட்ட மாதம் இஸ்லாமிய நம்பிக்கையின்படி, இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்குப் புனித குர்ஆன் அருளப்பட்ட மாதமே இந்த ரமலான். இம்மாதத்தின் கடைசிப் பத்து நாட்களில் வரும் லைலத்துல் கத்ர் (வல்லமை மிக்க இரவு), ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

நோன்பின் மாண்பும் நோக்கமும் நோன்பு என்பது அதிகாலை முதல் மாலை சூரியன் மறையும் வரை உணவு, நீர் மற்றும் இச்சைகளைத் தவிர்த்து இருப்பதாகும்.

இறையச்சம் (தக்வா): நோன்பின் முக்கிய நோக்கமே மனிதர்களிடையே இறை அச்சத்தை உருவாக்குவதாகும்.

ஏழைகளின் பசி அறிதல்: வசதி படைத்தவர்கள் ஏழைகளின் பசியின் கொடுமையை உணர்ந்து, அவர்கள் மீது இரக்கம் கொள்ள நோன்பு ஒரு பயிற்சியாக அமைகிறது.

சுயகட்டுப்பாடு: கோபம், பொய், புறம்பேசுதல் போன்ற தீய பழக்கங்களிலிருந்து விலகி, மனதைச் செம்மைப்படுத்த இது உதவுகிறது.

ரமலான் காலச் சடங்குகள் ஸஹர் & இஃப்தார்: நோன்புக்காக அதிகாலையில் உட்கொள்ளும் உணவு 'ஸஹர்' என்றும், மாலை நோன்பு முடிக்கும்போது உட்கொள்ளும் உணவு 'இஃப்தார்' என்றும் அழைக்கப்படுகிறது.

தராவீஹ்: ரமலான் இரவுகளில் மட்டும் தொழப்படும் சிறப்புத் தொழுகை இதுவாகும்.


ஸகாத் & தர்மம்: ஏழைகளுக்குக் கட்டாயமாக வழங்கப்பட வேண்டிய 'ஸகாத்' மற்றும் இதர தர்மங்கள் இம்மாதத்தில் அதிகளவில் வழங்கப்படுகின்றன.

முடிவுரை ரமலான் என்பது வெறும் பட்டினி கிடப்பது மட்டுமல்ல; அது ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும் ஒரு ஆன்மீகப் பயணம். சகோதரத்துவம், அன்பு மற்றும் சகிப்புத்தன்மையை உலகிற்குப் போதிக்கும் இந்த மாதம், நோன்புப் பெருநாளுடன் (ஈகைத் திருநாள்) இனிதே நிறைவடைகிறது.

## தினம் ஒரு தலைவர்கள்

# கொல்வின் ஆர்.டி சில்வா வரலாறு

கொல்வின் ரெஜினால்டு ஆர். டி சில்வா (16 பெப்ரவரி 1907 27 பெப்ரவரி 1989; பொதுவாகக் கொல்வின் ஆர். டி சில்வா) என்பவர் இலங்கையின் இடதுசாரி அரசியல்வாதியும், முன்னாள் அமைச்சரும், வழக்கறிஞரும் ஆவார். இவர் இலங்கையின் முதலாவது மார்க்சியக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியின் நிறுவனத் தலைவர்களில் ஒருவர் ஆவார்.



ஆரம்ப வாழ்க்கையும் கல்வியும் கொல்வின் ஆர். டி சில்வா பலப்பிட்டி என்ற இடத்தில் 1907 பெப்ரவரி 16 இல் பிறந்தவர். இவரது தந்தை ஒபினமுனி அர்னோலிசு டி சில்வா ஒரு மருத்துவர் ஆவார். தாய் பெட்டாகன் யோசலீன் டி சில்வா பிரபலமான தொழிலதிபரான பெட்டாகன் அசனெரிசு டி சில்வாவின் மகள் ஆவார். ஆரம்பக் கல்வியை பாணந்துறை புனித யோவான் கல்லூரியிலும், பின்னர் கொழும்பு றோயல் கல்லூரியிலும் கற்றார். பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் சேர்ந்து படித்து வரலாற்றுத் துறையில் இலண்டன் பல்கலைக்கழகத்தின் இளங்கலைப் பட்டம் பெற்றார். தொடர்ந்து இலண்டன் கிங்சு கல்லூரியில் "பிரித்தானிய ஆக்கிரமிப்பில் இலங்கை" என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு 1932 ஆம் ஆண்டில் முனைவர் பட்டம் பெற்றார். இவ்வாய்வு பின்னர் நூலாக வெளிவந்தது.

சட்டத் துறையில் இலண்டனில் இருந்து நாடு திரும்பியதும், கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா இலங்கை மீயுயர் நீதிமன்ற வழக்கறிஞராக பதவிப்பிரமாணம் செய்து சட்டத்தரணியாகத் தனது சேவையைத் தொடர்ந்தார். மார்க் அந்தோனி பிரேசுகர்டில் மீதான ஆட்கொணர்வு மனு தொடர்பாக வழக்காடிப் பெரும் புகழ் பெற்றார். 1940 களில் இருந்து 1960 கள் வரை இவர் ஒரு குற்றவியல் வழக்கறிஞராக ஒரு இணையற்ற நற்பெயரைப் பெற்றிருந்தார். அவர் தனது நாளின் ஒவ்வொரு உயர்மட்ட குற்றவியல் விசாரணையிலும் தோன்றினார். சதாசிவம் கொலை வழக்கில், இவரது சிறப்பான குறுக்கு விசாரணைத் திறமை அவரது கட்சிக்காரரை விடுதலை செய்ய வழிவகுத்தது. அதே போன்று, குலரத்தின கொலை வழக்கின் மேல்முறையீட்டில், சூழ்நிலைச் சாட்சியங்கள் பற்றிய அவரது நெருங்கிய அறிவு குற்றம் சாட்டப்பட்டவரைக் காப்பாற்றியது. விவியன் குணவர்தன தாக்கப்பட்ட வழக்கு உட்பட்ட அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகளை டி சில்வா முன்னின்று நடத்தினார். அமைச்சராகப் பணியாற்றிய காலத்தைத் தவிர, அவர் இறக்கும் வரை தனது சட்டப் பயிற்சியைத் தொடர்ந்தார்.

### அரசியல் வாழ்க்கை

ஆரம்ப அரசியல் லங்கா சமசமாஜக் கட்சி 1935 திசம்பர் 21 இல் ஆரம்பிக்கப்பட்ட போது என். எம். பெரேரா, லெஸ்லி குணவர்தன, பிலிப் குணவர்தனா, இராபர்ட் குணவர்தனா ஆகியோருடன் இணைந்து கொல்வின் ஆர். டி சில்வா அதன் முதலாவது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஒரு தீவிரமான திரொத்சுக்கியவாதியான டி சில்வா, இரண்டாம் உலகப் போரின் போது, கொழும்பு போகம்பரை சிறையிலிருந்து தப்பி இந்தியாவுக்குத் தப்பிச் சென்றார், அங்கு அவர் போர்-எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக தேசத்துரோக குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டார். இந்தியாவில் அவர் இந்திய, இலங்கை, பர்மிய போல்செவிக்-லெனினிஸ்ட் கட்சியின் முன்னணி போராளியாக செயற்பட்டார். போருக்குப் பிறகு அவர் இலங்கைக்குத் திரும்பி போல்செவிக் சமசமாஜக் கட்சியின் முக்கியத் தலைவரானார்.

நாடாளுமன்ற அரசியல் 1947 முதலாவது நாடாளுமன்றத்திற்கு போல்சவிக் சமசமாஜக் கட்சியின் (போ.ச.க) ஐந்து பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கொல்வின் ஆர் டி சில்வா வெள்ளவத்தை-கல்கிசை தொகுதியில் வெற்றி பெற்றார். இவரது கட்சி லங்கா சமசமாஜக் கட்சியுடன் இணைந்ததை அடுத்து டி சில்வா லங்கா சமசமாசக் கட்சியின் முக்கிய தலைவரானார்.

சதாசிவம் படுகொலை வழக்கில் அவருக்கு கிடைத்த செல்வாக்கிழப்புக் காரணமாக கற்றதன் காரணமாக 1952 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் எஸ். டி சில்வா ஜெயசிங்கவிடம் வெள்ளவத்தை-கல்கிசை தொகுதியை இழந்தார், ஆனால் 1956 தேர்தலில் அதை மீண்டும் கைப்பற்றினார். சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டபோது, அவரது உரை பெரும் வரவேற்பைப் பெற்றது: "எங்களுக்கு... ஒரே தேசம் வேண்டுமா அல்லது இரண்டு தேசங்கள் வேண்டுமா? எங்களுக்கு ஒரே நாடு வேண்டுமா அல்லது இரண்டு வேண்டுமா? எங்களுக்கு "ஒரு இலங்கை" வேண்டுமா அல்லது "இரண்டு" வேண்டுமா? எல்லாவற்றுக்கும் மேலாக, நாம் ஒரு விடுதலை பெற்ற இலங்கையை விரும்புகிறோமா? மொழிப் பிரச்சினையின் தோற்றம் பற்றி நாங்கள் விவாதித்து வருகிறோம்."

நான்காம் அகிலத்துடனான தொடர்புகளுக்கு சமசமாசக் கட்சி சார்பாக டி சில்வா பொறுப்பேற்றார். அவர் அகிலத்தின் சர்வதேச செயற்குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். சமசமாசக் கட்சி அனைத்துலகத்தில் இருந்து வெளியேற்றப்படும் வரை அவர் பதவி வகித்தார். 1964 இல் லங்கா சமசமாஜக் கட்சி அரசாங்கத்தில் இணைவதற்கு எதிராக டி சில்வா வலியுறுத்தினார்.



1967 இல் இடம்பெற்ற இடைத்தேர்தலில் டி சில்வா அகலவத்தைத் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு நாடாளுமன்றம் சென்றார். 1970 தேர்தலில் மீண்டும் தேர்தெடுக்கப்பட்டார். 1970 இல் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அமைச்சரவையில் தோட்டத்தொழிற்துறை மற்றும் அரசியலமைப்பு விவகாரங்களுக்கான அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவரது பணிகளில் இலங்கையின் புதிய குடியரசு அரசியலமைப்பை உருவாக்குவதும் அடங்கும், இது முன்னர் நியதிச் சட்டத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட சிங்கள பேரினவாதத்தின் முதல் அரசியலமைப்புச் சட்டமாக பார்க்கப்பட்டது. அவர் 1975 வரை பணியாற்றினார், அரசுக் கூட்டணியில் பிளவு ஏற்பட்டதைத் தொடர்ந்து அவரது கட்சி அரசாங்கத்தில் இருந்து நீக்கப்பட்டது. 1977 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து இடதுசாரிகளுடன் சேர்ந்து அவர் தனது இடத்தை இழந்தார்.

### கட்சித் தலைவர்

என். எம். பெரேராவின் இறப்பைத் தொடர்ந்து, கொல்வின் ஆர் டி. சில்வா சமசமாசக் கட்சியின் தலைவரானார். 1982 அரசுத்தலைவர் தேர்தலில் கட்சியின் சார்பாகப் போட்டியிட்டு 1.28% வாக்குகளைப் பெற்று ஐந்தாவதாக வந்து தோல்வியடைந்தார். 1988 இல் அவரது கட்சி மற்ற மூன்று இடதுசாரிக் கட்சிகளுடன் ஐக்கிய சோசலிசக் கூட்டணியை அமைத்துப் போட்டியிட்டதில் கூட்டணிக்கு ஒரு தேசியப் பட்டியல் உறுப்பினர் கிடைத்தது, அதற்கு கொல்வின் ஆர். டி சில்வா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### மறைவு

கொல்வின் ஆர் டி சில்வா நாடாளுமன்றத்தில் தேசியப் பட்டியல் உறுப்பினராக பதவியேற்ற நில நாட்களில் 1989 பெப்ரவரி 27 இல் கொழும்பில் தனது 82-ஆவது அகவையில் காலமானார். அவரது நிவைவாக, கொழும்பு கொம்பனித் தெருவிற்கு கொல்வின் ஆர். டி சில்வா சாலை எனப் பெயரிடப்பட்டது.

### குடும்பம்

கொல்வின் ஆர். டி சில்வா தனது சொந்த ஊரான பலப்பிட்டியைச் சேர்ந்த தொழிலதிபரான பெட்டகன் பெனால் டி சில்வாவின் மகள் பெட்டகன் சுவினீத்தா டி சில்வாவை மணந்தார். இவர்களுக்கு இரண்டு மகள்களும் ஒரு மகனும் இருந்தனர். மூத்த பெண் மனோரி முத்தட்டுவேகம இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளராக இருந்ததோடு, கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான சரத் முத்தட்டுவேகமவை மணந்தார்.

# விஜய் சேதுபதியுடன் முதல்முறையாக இணையும் சாய் பல்லவி... இசையமைப்பாளர் யார் தெரியுமா?





பிரபல இயக்குநர் மணிரத்னம் 'தக்லைஃப்' படத்தை தொடர்ந்து, தனது அடுத்த படத்தை நடிகர் விஜய் சேதுபதியை வைத்து இயக்குகிறார். இப்படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக சாய் பல்லவி நடிக்கிறார். விஜய் சேதுபதியுடன் முதல் முறையாக சாய் பல்லவி இணையும் இப்படத்திற்கு 'புரொடக்ஷன் நம்பர் 23' என தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ளது.

லைகா புரொடக்ஷன்ஸ் மற்றும் இந்தியா டாக்கீஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு ஏ.ஆர். ரகுமான் இசையமைக்க உள்ளார். முன்னதாக இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்க உள்ளதாக தகவல் வெளியாகி இருந்த நிலையில், இன்று படக்குழு போஸ்டர் வெளியிட்டு இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இப்படத்தின் படப்பிடிப்புகள் வருகிற ஜூலை மாதம் முதல் நடைபெறும் என்று கூறப்படும் நிலையில், படத்தின் கதைகளம், நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் குழுவினர் குறித்த விவரங்கள் இன்னும் வெளியாகவில்லை.

இதனால் வரும் நாட்களில் இப்படத்தின் அப்டேட்கள் அடுத்தடுத்து வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



நடிகை ராய் லட்சுமி தமிழ், தெலுங்கு, கன்னடம் என பல மொழிகளில் கவர்ச்சியாக நடித்து வருபவர். அவர் ஏராளமான படங்களில் நடித்திருக்கிறார் என்றாலும் சமீப காலமாக அவரை படங்களில் பார்க்க முடிவதில்லை. இருப்பினும் அவர் இன்ஸ்டாக்ராமில் தொடர்ந்து தாராள கிளாமர் ஆக வெளியிட்டு வரும் ஸ்டில்கள் வைரல் ஆகின்றன. தற்போது ராய் லட்சுமி இந்தோனேசியாவின் பாலி-க்கு ட்ரிப் சென்று இருக்கிறார். அங்கு அவர் பிகினி உடையில் இருக்கும் ஹாட் ஸ்டில்களை தற்போது வெளியிட்டுள்ளார்.

# நடிகர் சூர்யாவை பின்பற்றி மெகா ஸ்டார் எடுத்துள்ள அதிரடி முடிவு



நடிகர் சிரஞ்சீவி, தெலுங்கு புத்தாண்டான யுகாதி தினத்தை முன்னிட்டு நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், சமூக சேவைகள் மற்றும் தனது எதிர்கால திட்டங்கள் குறித்து பகிர்ந்தார்.

ரத்த தானம் மற்றும் கண் தானம் மூலம் லட்சக்கணக்கான மக்களுக்கு உதவி செய்து வருவதாகவும், மக்கள் தன்னை உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்ததால் அவர்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த சேவைகளை தொடங்கியதாகவும் அவர் கூறினார்.

மேலும், ஏழை மாணவ-மாணவிகளுக்கு இலவசமாக தரமான கல்வி வழங்க வேண்டும் என்பது தனது அடுத்த இலக்கு என தெரிவித்தார். நல்ல கல்வி கிடைத்தால் ஏழை குடும்பங்களின் வாழ்க்கை முன்னேறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், தமிழ் திரைப்பட நடிகர் சூர்யா தன்னை முன்மாதிரியாக கொண்டு அகரம் பவுண்டேஷன் நிறுவியதை நினைவுகூர்ந்த அவர், எப்படி சூர்யா என்னுடைய முயற்சிகளிலிருந்து உத்வேகம் பெற்று அகரம் அறக்கட்டளை மூலம் கல்வி சேவை வழங்கி வருகிறாரோ அதேபோல, நானும் சூர்யாவிடமிருந்து உத்வேகம் பெற்று இலவசக் கல்வி சேவையை வழங்க விரும்புகிறேன். நலிந்த மக்களுக்கு இலவசக் கல்வி வழங்குவதை நோக்கமாக கொண்டு இந்த சேவை இருக்கும் என்றும், ஒரு பெரிய முன்னெடுப்பாக விரைவில் இது தொடங்கப்படும். இத்திட்டம் குறித்த முழு விவரங்களும் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# Jana Nayagan படத்தில் என்ன பிரச்சனை இருக்கிறது என்பதை சொல்ல மறுப்பது தான் பிரச்சனை- இயக்குநர் அமீர்





மதுரையில் ரம்ஜான் திருநாளை முன்னிட்டு ஜாக் அமைப்பு இஸ்லாமியர்கள் சிறப்புத் தொழுகையில் ஈடுபட்டனர். இந்த தொழுகையில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பங்கேற்றனர். அவர்களுடன் இயக்குநர் அமீரும் பங்கேற்று தொழுகையில் ஈடுபட்டார்.

இதன்பின் செய்தியாளர்களை சந்தித்த இயக்குநர் அமீரிடம், 'ஜன நாயகன்' பட விவகாரம் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு இயக்குநர் அமீர் கூறுகையில், தேர்தல் ஆணையம் என்பது உச்சப்பட்ட அதிகாரம் கொண்டது. அந்த ஆணையம் ஒரு முடிவை எடுத்து இருக்கும் போது அதற்கு கட்டுப்பட வேண்டியது அனைவரது பொறுப்பு. இதற்கு முன்பு வரை தேர்தல் நேரத்தில் தேர்தல் ஆணையத்தால் ஒரு படம் நிறுத்தப்பட்டதாக எனக்கு நினைவு இல்லை. முதல் முறையாக தமிழகத்தில் அப்படி ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது. த.வெ.க. தலைவர் திரைப்படம் தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கான காரணத்தை தணிக்கை துறையும் சொல்லவில்லை. அவங்களும் சொல்லவில்லை. 'விஸ்வரூபம்' திரைப்படம் வரும் போது அந்த படத்தில் மைனாரிட்டி மக்களை பாதிக்கப்படக்கூடிய காட்சிகளும், வசனங்களும் இருந்தது என்பதால் அப்படத்தை பார்த்தவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

ஜன நாயகனில் என்ன இருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. ஏன்னா அது ரீமேக் படம். தெலுங்கில் இருந்து மொழிமாற்றம் செய்யப்பட்ட ஒரு படம். அந்த படத்தில் அப்படி என்ன காட்சி இருந்தது என்று இரு தரப்பும் சொல்லாதது தான் கேள்விக்குறியாக உள்ளது. படத்தில் என்ன பிரச்சனை இருக்கிறது என்பதை சொல்ல மறுப்பது தான் பிரச்சனை. அடிக்கிறவர்கள் தான் சொல்லவில்லை என்றால் அடி வாங்குகிறவர்களாவது உண்மையை சொல்ல வேண்டும். நாம் யூகத்தில் பேச முடியாது என்றார்.



விஜய் தொலைக்காட்சியில் விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் சீரியல் மகாநதி. இந்த சீரியலில் காவேரி என்கிற கதாபாத்திரத்தில் நடித்து ரசிகர்களின் மனதில் இடம்பிடித்தவர் நடிகை லட்சுமி பிரியா. இவர் இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கக்கூடிய பிரபலம் ஆவார். அவ்வப்போது தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை இன்ஸ்டாவில் பதிவு செய்து வரும் லட்சுமி பிரியா, தற்போது சேலையில் எடுத்துக்கொண்ட அழகிய போட்டோஷூட் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார்.

# புதிய படங்கள் ஒப்புக்கொள்ளாத Trisha... சினிமாவில் இருந்து விலகுகிறாரா?



தமிழ் சினிமாவின் தவிர்க்க முடியாத நாயகியாக திகழும் திரிஷா, தமிழ் தாண்டி தெலுங்கு, கன்னடம், இந்தி படங்களிலும் நடித்து வருகிறார். 22 ஆண்டுகளுக்கும் மேலாக கதாநாயகியாக கோலோச்சி வருகிறார். கதாநாயகிகளிலேயே அதிக சர்ச்சைகளில் சிக்கியுள்ளவர் திரிஷா தான். சமீபத்தில் கூட விஜய்யுடன் அவர் திருமண நிகழ்வுக்கு ஜோடி போட்டு சென்றது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

திரிஷா, தற்போது சூர்யாவுக்கு ஜோடியாக நடித்துள்ள 'கருப்பு' படம் மே மாதம் திரைக்கு வருகிறது. மேலும் மலையாளத்தில் 'ராம்', தெலுங்கில் 'விஸ்வம்பரா படங்களும் அடுத்தடுத்து வெளியாக உள்ளன.

இந்தநிலையில், கடந்த 3 மாதங்களுக்கு மேலாக புதிய படங்கள் எதிலும் திரிஷா ஒப்பந்தமாகவில்லை என தகவல் வெளியாகியுள்ளது. புதிய வெப் தொடர்களையும் அவர் ஏற்கவில்லை. திரிஷாவின் இந்த முடிவுக்கு என்ன காரணம்? என கேள்வி எழுந்துள்ளது. இதற்கிடையில் 42 வயதாகும் திரிஷா சினிமாவில் இருந்து விலகப்போகிறாரா? என்றும் ரசிகர்கள் கேள்வி எழுப்பி வருகிறார்கள்.

முனீஸ்வரர் துணை
RG
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80% OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 – Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349



ஜெயஜெய சங்கரா!
ஹர ஹர சங்கர!
ஸதாசிவ ஸமாரம்பாம்!
சங்கராச்சார்ய மத்யமாம்!
அஸ்மதாசார்ய பர்யந்தாம்
வந்தே குருபரம்பராம்!

பச்சையே உன்றன் குறக்குலத் திருவாம் பத்தினி மேனியும் பத்தா
பச்சையே கேகயப் பரியும் பதக்கத்திலணி மரகதமும்
பச்சையே நீ வாழ் குன்றுகள் தோறும் பக்தர்பால் இரங்குமுன் மனமும்
பச்சையே உந்தன் மலையும் பசுமலை வாழும் பரமனே பாவநாசகனே
- அருட்கவி தவத்திரு. சாதுராம் சுவாமிகள்.

பசுமலை கிரிவலம் தருமே பலநலம்!
பசுமலை தரிசனம் பாபவிமோசனம்!
வள்ளி தெய்வானை வளர் இருபுறமும்
மெல்லியவள் பெற்றெடுத்த பாலா!
புள்ளி மயிலேறி வரும் புண்ணியனே
நண்பர்கள் தம் நற்றுயரைபோக்கு
பசுமலை முருகா!

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்ஒலக்கூர்
பசுமலை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்கு விசுவாவசு வருஷத்திய
பிரமோற்சவப் பத்திரிக்கை

அன்புடையீர் வணக்கம்.
குன்றுகள் தோறும் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப் பெருமான், மகிமை நிறைந்ததும், சித்தர்களும், ஞானிகளும் வணங்கும் புண்ணிய திருத்தலம் பசுமலை என்று அழைக்கப்படும் கோ கிரி என்னும் திருக்கோயில் ஆகும்.
எழிலும், அருளும் நிறைந்த பசுமலையில் முருகப்பெருமான் ஸ்ரீ வள்ளி, தேவசேனா சமேத ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி என்னும் திருநாமத்தோடு வீற்றிருந்து பக்தர்களின் இன்னல்களை களைந்து வாழ்வில் அனைத்து செல்வங்களையும் தந்து மேன்மையடையச் செய்கிறார் என்பது பக்தர்கள் வாயிலாகக் கண்ட நிதர்சனமான உண்மை.
இறைவன் திருவருளாலும், பூஜ்யஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் குருவருளாலும் நிகழும் மங்கலகரமான கலியுகாதி 5126 விசுவாவசு வருடம் பங்குனி மாதம்-08 ம் தேதி 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை, சதுர்த்தி திதி, பரணி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் காலை 10.30 மணிக்கு மேல் 12.00 மணிக்குள் மயூர துவஜாரோகணமும் அன்று முதல் பதினொன்று நாட்கள் வரையில் சிறப்பான மகோற்சவங்களும் நடக்க இருப்பதால் பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டுஸ்ரீமுருகப்பெருமான் திருவருளுக்கு பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| பங்குனி மாதம்- 07 | 21.03.2026 சனிக்கிழமை | விநாயகர் வழிபாடு,பூர்வாங்க பூஜைகள் |
| பங்குனி மாதம்- 08 | 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை | அஸ்திர தேவர் பூஜை, துவஜாரோகணம்(கொடியேற்றம்) |
| பங்குனி மாதம்- 09 | 23.03.2026 திங்கட்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 10 | 24.03.2026 செவ்வாய்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 11 | 25.03.2026 புதன்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 12 | 26.03.2026 வியாழக்கிழமை | மயில்வாகன கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 13 | 27.03.2026 வெள்ளிக்கிழமை | முத்து பிரபை கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 14 | 28.03.2026 சனிக்கிழமை | இந்திர விமான கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 15 | 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை | திருக்கல்யாணம் இரவு 9.00 மணிக்கு |
| பங்குனி மாதம் - 16 | 30.03.2026 திங்கட்கிழமை | ரதோற்சவம் [ மாலை 5.00 மணிக்கு திருத்தேரோட்டம்] |
| பங்குனி மாதம் - 17 | 31.03.2026 செவ்வாய்கிழமை | பங்குனி உத்திரம், தீர்த்த வாரி, துவஜ அவரோகணம்(கொடி இறக்கம்) |
| பங்குனி மாதம் - 18 | 01.04.2026 புதன்கிழமை | 11-ம் நாள் விடையாற்றி உற்சவம் |

குறிப்பு
பிரதிமாதம் பௌர்ணமி கிரிவலம் நடைபெறுகிறது
கிரிவலம் செய்து வளமோடு வாழ்க!

பிளாஸ்டிக் உபயோகிப்பதை தவிர்ப்போம்.
தாய்மண்ணை காப்போம்.

இங்ஙனம்.
S.V.சுப்ரமண்ய சோமயாஜுலு
V.ராம்குமார் சோமயாஜுலு
ஆதின பரம்பரை அறங்காவலர்கள்,
மேல் ஒலக்கூர் - 604 203.
செல் : 9962344722, 8610716563
9047725285
94432 89877






## அரங்கனின் கருணை

ஸ்ரீரங்கத்து வீதியிலே பொன்னிறத் தூசு பறக்க,
மறைகளும் திவ்யப்பிரபந்தமும் ஒன்றாய்க் கலக்க,
உகாதி திருநாளில் நம் பெருமாள் புறப்பட,
அரங்க மாநகரமே ஆனந்தத்தில் திளைக்க!
வேத கோஷமும் தமிழ் பாசுரமும் ஒலிக்க,
அடியார்கள் சூழ அரங்கன் அசைந்து வர,
திடீரென நின்றது அந்தத் தெய்வ ஊர்வலம்,
ஓர் அடியார் காலடியில் விழுந்த அந்தப் பரவசம்!
இறைவன் ஒருவனுக்கு மட்டும் அவர் பணியவில்லை,
அடியார் கூட்டத்திற்கே விழுந்து வணங்கினார் அங்கே!
சுமப்பவர், பாடுபவர் எனப் பேதம் பார்க்காமல்,
அகந்தை அழித்து விழுந்தார், அன்பைத் தேக்காமல்!
சைகை காட்டி அவர் "புறப்படுக" எனச் சொல்ல,
காலத்தைக் கடந்தவனும் மெல்லத் தடம் கொள்ள,
அடியார் சொல்லுக்காக அரங்கனும் காத்திருப்பானோ?
அன்புக்குக் கட்டுப்பட்டே அவன் இங்கு நிற்பானோ?
காலத்தையே ஆள்பவன் கணம் திகைத்து நின்றான்,
தன் அடியார் ஆணைக்கு அடிபணிந்து சென்றான்!
அரங்கமாநகரும் பாக்கியம் செய்தது, அந்த அடியாரும் –
அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனை நிறுத்தினார்!

**SHREEDEVI KRISHNAN**, bangalore,

## தினம் தினம் வெற்றி தான்...

உள்ளத்தில் உறுதியான
எண்ணம் இருந்து விட்டால்
தடை வந்தாலும் வெற்றியே
கிடைக்கும் .. தளராத
மனமும் அயராத உழைப்பும்
என்றென்றும் வெற்றி தான்
குட்டி குட்டி முயற்சியில்
வெற்றி தட்டி தட்டி வந்து
விடுமே உற்சாகத்துடன்
நடந்தால் வெற்றியும்
உற்சாகம் தருமே

நம்பிக்கை நம் நண்பனாகி
விட்டால் வெற்றி நம்மிடம்
வந்து விடுமே
ஒவ்வொரு நாளும்
முயற்சியுடன் செயல் பட்டால்
அயர்ச்சி இல்லா வெற்றிதான்
வெற்றி வேர்வை நிலத்தில்
பட முற்றிலும் உழைத்தால்



வெற்றியும் நம்மிடம்
பற்றி கொள்ளும்
பிறகென்ன....
அகிலமே நம்
கைதான் ....

**உஷா முத்துராமன்**

## கள்ள மௌனங்கள்

ஒரு பேருயிர் போல
ஆரவாரித்துச் சென்ற
ரயிலை மௌனமாய்ப்
பார்த்தது தண்டவாளத்தில்
கிடந்த தலை

அரிவாள் உழுத காதலன்
உடலருகே 'ஓ' வென்று
அழுத அவள் குரலை
விழுங்கி விட்டது
கடைவீதியின் இரைச்சல்

குடும்பமே கொன்று
மரக்கிளையில் தொங்கவிட்ட
சிறுமியின் உடலை
ஊஞ்சலாட்டியது காற்று
இறுகிய மௌனம் காத்தது
வேப்ப மரம்



'காதலினால்
உயிர்
தோன்றும்'
என்று
நீசொல்லியது
என்னவாயிற்று
பாரதி?

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை



## அவள்

பனியின் குளுமை
பணிந்து விடுகிறது
உன்னிடம்.

மலரின் மென்மை
தலைகுனிந்து விடுகிறது
உன்னிடம்.


பாயும் பகலவன் ஒளி
பதுங்கி விடுகிறது
உன்னிடம்.

நிலவின் தண்ணொளி
நிலைகுலைந்து போகிறது



உன்னிடம்.
ஏதுமறியாமல்
நீ
என்னருகில்.

**கே. பி. ஜனார்த்தனன்**



எல்லா காயத்திற்குமே
உன் ஒற்றை முத்தமே
மருந்தாகி போகிறது!

நீ விரல் சொடுக்கும்
நொடி பொழுதிலும்
வீழ்ந்து போவேன்
உனக்காக மட்டும்!

கொஞ்சம் சிரித்து பேசு
சலித்து போகாது
இந்த பெரும் வாழ்வு!

தென்றல் கிள்ளி விட்டு
சொன்னது நீ சூடும்
மல்லியின் வாசனைக்கு
எந்த திரவியமும்
ஈடு இணை இல்லையென்று!

இந்த பிரபஞ்சத்தில்
எத்தனை பேரழகிகள்
இருந்தால் தான்



எனக்கென்ன?
என் காதலுக்கு
நீ மட்டுமே
போதுமானவள்!

**லி.நௌஷாத் கான்**

## முதுமையிலும் துணை தேவை

இளமைக்காலத்தைவிட
முதுமையில்தான்
அதிகமாய்~ நமக்கு
துணை தேவைப்படுகிறது,
சின்னவயதில் சிரித்துப்பேசி
சினேகமாய் பழகவும்
விம்மி அழுதால்
கண்ணீர் துடைக்கவும்
எத்தனையோ
துணைகள் எதிர்பாராய்
விதமாய்~ நமக்கு
கிடைத்துவிடுகிறது,
நடை
தளர்ந்தக்காலத்தில்
ஏனோ அது வாய்ப்பதில்லை,
கிராமங்கள் என்றால்
ஏதோ ஒரு குடிசையின்
திண்ணையும்,நகரமானால்
அனாதை விடுதிகளும்
அந்நியமாய் தெரிந்தாலும்
ஆதரவு காட்டுகின்றன,,,,

இளமையின் நினைவுகளை



பகிர்ந்துக்கொள்ளவாவது
ஒரு துணை அவசியம்
தேவைதான் படுகிறது
முதுமையிலும்,,,,,!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை



பூந்தளிர் கரம் கொண்டு
தாயின் கண்ணீரைத்
துடைக்கும் இன்னுயிர்
குழந்தாய் ! பிறக்கும்
போதே உனக்கு தாயின்
பேரன்பும் அரவணைப்பும்
என்றென்றும் பெறர்க்கரிய
பேறு என்று தெரிந்து தாயின்
கண்ணீரைத் துடைக்க
வந்த தங்கக் கண்மணியே!
இத்தாயின் அன்பும்
அரவணைப்பும் அவள்
ஆயுட்காலம் முழுமையும்
உனக்குத்தான் பெரும்பேறு!
உன்னை வயிற்றில் சுமந்த
தாய், என்றும் உன்னைத்
தன் நெஞ்சில் சுமந்து
கொண்டிருப்பாள்! ஒரு
பொழுதும் அவள்
கண்ணீருக்கு நீ காரணமாக
ஆகிவிடாமல், அவளை உன்
கண்ணிலும், இதயத்திலும்
வைத்துப் பார்த்துக்
கொள்ளவேண்டியது உன்



பொறுப்பு !
என்றும் மாறாத
தாயன்பை
இழந்துவிடாதே
கண்மணியே !

**உமா வெங்கடேசன்**

## சகஜ நிலை !

பெரிய ஆறுதல் வார்த்தைகள்
சொல்பவர்களை விடவும்...
வலிமை மிக்கதாகிறார்கள்
குழந்தைகள்... !
மரணம் நிகழ்ந்த
வீட்டில் சகஜ நிலையை
மீட்டெடுக்க !

## வெகு தொலைவில் !

திடீரென ஏற்பட்ட விபத்து...
கை கால்களில் வெள்ளைத்
துணி பாண்டேஜ்
கட்டப்பட்டு... குருதியும் ...
குளுக்கோசும் ஏற்றப்பட்டு
கொண்டிருக்க...
உறவினர்கள் புடை
சூழ ஆறுதல் சொல்லிக்
கொண்டிருந்தனர்..

"ப்ளட் ஏதும் தேவைப்பட்டால்
சொல்லு எனக்கு ஆள்
இருக்கு !" என்றார் ஒருவர்...

"இதெல்லாம் சின்ன ஃப்ரேசர்
தான் எனக்கு தெரிஞ்ச
ஒருத்தர் இதே மாதிரி
அடிபட்டு... !" இப்படி சிலர்...
உறவினர்களின் ஆறுதலில்
வலியை மறந்து சற்றே
ஆசுவாசம் அடைந்தேன்...

"பேஷண்ட் கூட வந்தவங்க
யாரு, ஃபர்ஸ்ட் எய்டு
டீரிட்மெண்டுக்கு
இருபதாயிரம் உடனே
கட்டுங்க !" செவிலியர்
கையில் பில்லுடன் வந்து
சொன்னபோது...

எனக்கும் அவர்களுக்கும்
எந்த பந்தமும் இல்லை,
என்பது போல் வெகு
தொலைவில் நின்றிருந்தனர்
எனக்கு ஆறுதல் சொன்ன
உறவினர்கள் !


## மேற்படிப்பு !

பல நடுத்தர குடும்பங்களில்
தன் பிள்ளைகளின்
மேற்படிப்புக்காகவும், மகளின்
திருமண செலவுக்காகவுமே
விலை பேசப்படுகின்றன..



அவர்களால்
ஆசையாய்
வளர்க்கப்பட்ட
ஆடு, மாடுகள்!

**எம்.பி.தினேஷ்**
கோவை



பூக்களுடன் தான்
என் பயணம்

நதி கிளம்பும் திக்கை
நோக்கி.. வழியில்
காணக்கூடும்..

எனக்கே எனக்கான
ஓரன்பை..



அப்போது என்
பயணம்
திரும்பும்
பூக்களுக்குப்
பதில்
உன்னுடன் !

**ரிஷபன்**

## வாழ்க்கை!

சிந்தித்து பார்ப்பதால் மட்டும்
சிறந்த எண்ணங்கள்
தோன்றாது மனிதன் மனம்
வாக்கு செயல்மூன்றில்
ஒழுக்கம் இருந்தால்
மட்டும்தான் நல்வாழ்க்கை
உதயமாகும்!

எந்த மனிதன்
எப்படிப்பட்டவர்
எப்போது அறிந்து
கொண்டாலும் அமைதியாக
இருந்து தர்மத்தில்
நம்பிக்கை கொண்டவன்
வாழ்வுதான் நாள்தோறும்
மகிழ்வு பொங்கும்!

யாரை எங்கே நிறுத்த
வேண்டும் நாம் நினைத்து
கொண்டிராமல் நாம் எங்கு
நிற்க வேண்டும் சிந்தித்து
செயல் புரிந்தால்தான்
நம் வாழ்க்கை வளம் பெறும்!

ஏன் தவறாக நடத்தினோம்
எதிரிகள் சிலர் காலம்
கடந்து உணர்ந்து புரிந்து
கொள்ளும் வகையில்
மனிதன் வாழ்ந்து
காட்டுவதே நல்வாழ்க்கை!

என்னவெல்லாம் ஆக
வேண்டும் என்று
பேராசைப்பட்ட மனிதன்



இறுதியில்
நாம்
குழந்தையாகவே
இருந்திருக்கலாம்
என்று மனம்
ஏக்கத்தில்
முடிவதுதான்
வாழ்க்கை!

**பூ.சுப்ரமணியன்**
சென்னை

## தித்திக்கும்

எல்லாம் முடியும் என்பவனே...
என்னினிய இளைஞனே!
மாண்புநிறை மனித குலம்
சோம்பல் சுகத்தில்
சுருங்கி விடக் கூடாதென்று
வலிந்து தேடலே
வாழ்க்கை வெளிச்சம் என்று
திறன் மிகுந்த தெளிந்தோர்
தீர்க்கமுடன் சொல்லி
வைத்தார்... தேடல்
பயணத்தில் தேவையோடு
தேவையற்றவையும்
திரல் திரலாய் இணைந்தே
கிட்டிடும் இன்ப
துன்பமுமாய்...! வாழ்வில்
இப்படி தேவையற்றதை
யெல்லாம் துன்பமாய்
உணர்ந்து உள்ளத்தில்
பாடமாய்ப் பதிவதும்
தேவை என்பதைத்
தெரிந்தால் போதும்...
தேவையில்லாததும்
தெவிட்டா தேனமுதமாகும்...
இன்பம் துன்பம் இரண்டுமே
ஒன்றென்ற அத்வைத
ஞானம் சித்திக்கும்...
அகிலத்தில் உள்ள
அனைத்துமே ஆனந்த




லயத்தில்
தித்திக்கும்!

**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்

# நூல் விமர்சனம்

**முத்தையா மோகனின்
நூல் சுவை...
நான் மாடக் கூடல்...
கவிதைத் தொகுப்பு.
ஆசிரியர். கௌ. ஆனந்த பிரபு
கொட்டாரம் வெளியீடு...
விலை 150.
பேச: 95855 17592.**




ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒளிந்து கிடக்கின்ற கவிதை வெளிகளை கண்டெடுப்பதென்பது அத்தனை சுலபமான செயலல்ல. உங்களுக்குள்ளும் சரி எனக்குள்ளும்சரி வெவ்வேறு கோணங்களில் வெவ்வேறு பாதைகளை கொண்டவைகளாக கவிதைகளில் கதம்பங்கள், சேர்ந்து கிடக்கிறது. கதம்பம் என்கிற போது பல்வேறு பூக்களின் மனங்கள் ஒரே நாசியில் ஏற்றப்பட்டால் எப்படியோ அப்படித்தான் ஒரு புத்தகத்தில் பல்வேறு விதமான விடயங்களை எடுத்து ஓடுகின்ற கவிதைகளும் ஆகும்.

ஒவ்வொரு கவிஞனுக்குள்ளும் அனுபவ மிடுக்குகள் வெவ்வேறானதாக அமைகிறது அது நமதுகவிஞர் ஆனந்த பிரபுவுக்கும் இயல்பாகவே ஏற்பட்டிருக்கிறது. இருக பூட்டப்பட்டு கிடக்கின்ற மனங்களின் நடக்கின்ற பாவனைகள் மாறி, இங்கே ஓடிக் கொண்டிருக்கிறோம் என்கிற கேள்விகளூடே இதயக் கூடுகளின் கதவிடுக்குகளில் மாட்டிக் கொண்டு சிக்கித்தவிக்கிற மனங்களை அந்த மனங்களின் தவிப்புகளை, மனங்கள் படுகின்ற பாடுகளை சோக இழைவுகளை தத்ரூபமாக படம் பிடித்து கவிதையாக்கி இருக்கிறார் நமது ஆனந்த பிரபு.

எப்போது அழைத்தாலும் கடன் கோரும் நண்பனை புறக்கணிக்க பழகிக்கொண்டேன் இறைஞ்சிய படி வரும் குறுஞ்செய்திகள் திறக்கப் படுவதே இல்லை...

வினோத காரணங்களைச் சொல்லி பணம் கேட்டு எங்கள் நகைப்புக்கு ஆளானவன் இறுதியாய் வேறொரு எண்ணில் இருந்து விடாப்பிடியாய் அழைத்து எரிச்சலை பெற்றுக் கொண்டான்... வெயிலூறும் ஒரு மதியத்தில் வாழ்வை முடித்துக் கொண்டானென தகவல் வந்தது. கவிழ்ந்திருக்கும் சோகத்தினூடே எஞ்சிய நாள்களெல்லாம் கெஞ்சிய குரலோடு இனி அவன் துரத்த ஆரம்பிப்பான்... இந்த முதல் கவிதையிலேயே நம் நெஞ்சங்களை கிழித்தெறிந்து விட்டார் ஆனந்த பிரபு. இது ஆனந்த பிரபுக்கு மட்டுமான அனுபவமல்ல... இன்றைக்கும் நமது சக எழுத்தாளர்கள் பொருளாதார சிக்கல்களில் தங்களையே இழந்து கொண்டிருக்கிறார்கள், அதனினும் கொடிய செயல் பிறரிடத்திலே தனக்கு நெருக்கமானவர்கள் தானே என்று எண்ணி, கையேந்தி நிற்கின்ற அவலங்களையும் பார்க்கின்றோம். என்பதை பட்டவர்த்தனமாக சொல்கிறார் கவிஞர். சேர்த்து கேட்ட இரண்டு ரூபாயை வாதத் திறனை காண்பித்து ஒன்றாக குறைத்தேன்... தேய்க்கையில் கிடைத்தென்று நூறைத் தந்து பெட்டிக்கறியை பூசி விட்டு போகிறார் இஸ்திரி காரர்... வாங்குகிற பொருட்களுக்கு தம்முடைய வாதத் திறமைகளால் ஒன்றுக்கு முக்காலாக கிடைக்கிறதா என்று பார்த்து,வாங்கிய பிறகு நாம்தான் பெரிய சாமர்த்தியவாதி என்ற எண்ணங்களோடு வீடடைகிறோம். ஒரு ரூபாய்க்கும் இரண்டு ரூபாய்க்கும் எத்தனை முகங்களிலே பல சாடல்களைக் கண்டு,அந்த சாடல்களினுடைய சாபங்களையும் பெற்று... வாழ்க்கையை புறந்தள்ளி கொண்டிருக்கின்ற கூலித் தொழிலாளர்களின் வியர்வை துளிகளையும், நேர்மையையும் நாம் மதிக்கத் தவறிவிட்டோம் என்பதைத்தான் தனது கவிதை புலம்பல்களினால் நமது கன்னங்களில் அரைகிறார் கவிஞர் கௌ. ஆனந்த பிரபு

அப்பா குடியை மறக்க கொண்டத்தம்மனுக்குப் பூ மிதிக்கப் போய் தவறி விழுந்து தீக்காயத்தோடு அம்மா வதைபட்ட இரவில் முற்றிய போதையில் விழுந்து கிடந்தார் அப்பா...

சாமிக்குத்தம் ஆகிவிட்டதென முணுகி கிடந்தவளின் புண்ணெங்கும் வீசியது பிராந்தி வாடை... திருந்தாத கணவனை கட்டிக் கொண்டாலும் பெண்கள், மருந்தாக பாவிப்பதென்பது மூட நம்பிக்கைகளின் உச்சம் தான். கணவனின் குடியை கட்டுக்குள் கொண்டு வர கடவுள்களிடம் மன்றாடும் பெண்கள்... இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை இதைவிடவும் தெளிவாக சொல்லத்தான் முடியுமா...? சிலுவையைச் சுமந்து போகிறார் அங்கியெங்கும் கசிந்து கொண்டிருக்கிறது உதிரம் ஏதேனும் அற்புதம் நிகழ்த்தித் தப்பித்து விடக்கூடாதா என்றேன்...

கடைசிப் புன்னகையைச் சிந்தி மன்னித்தலே அற்புதம் என்கிறார் தொலைவில் தெரிகிறது கல்வாரி... இங்கே எல்லா விதமான குற்ற பரம்பரைகளுக்கும் ஏதோ ஒரு விதத்தில் மன்னிப்பு என்பது கிடைத்துக் கொண்டேதான் இருக்கிறது. அத்தகைய மன்னிப்பு என்பதுதான், மனிதர்களின் தீய சிந்தனைகளின், நேர் மாறான நடமாடல்களின் ஊற்றிடமாக அமைந்து விடுகிறது என்பதும் வேறு கதை. கௌ. ஆனந்த பிரபுவின் ஒவ்வொரு கவிதைகளிலும் சோகங்களும், சுகங்களும் கலந்த ஒரு கலவையாய் எழுத்து பரிமாணங்கள் மேலோங்கி செல்வதைக் காண முடிகிறது. பிணவறைக்குள் சாந்தமேவிய முகத்தோடு படுத்திருந்த நண்பனின் அப்பா சொந்த வீடற்ற குற்றத்திற்காக வீதியோரம் கிடத்தப்பட்டிருந்தார்.

பரம்பரையில் மரணத்தையே கண்டிராத அந்த சிரஞ்சீவி வீட்டுக்காரன் சற்றும் இளகவில்லை... கலேபரத்தை கண்ணுற்ற ஒருவன் தன் துணிக்கிடங்கின் கதவை திறந்து "அகத்தே கொண்டு வரூ பேடிக்கண்டா இது நம்மோட கடையானு' என்றபடி முறுவலித்தான் ஒளிவட்டமும் இறக்கைகளுமற்று சமயங்களில் வருவதுண்டு. கடவுள்... மனிதாபிமானங்களை தன்னகத்தே கொண்டு பிறருக்கு உதவுகின்ற குணம் எவனிடமெல்லாம் உள்ளதோ அவன்தான் கடவுள் என்கிறது இந்த கவிதை. மனிதர்களுக்குள் இருக்கும் கடவுளை கண்டெடுக்க தெரியாத மனிதர்கள்தான் கல்லை கடவுளென்று குவிந்து கிடக்கிறார்கள் மனிதன் மட்டும்தான் பேசத் தெரிந்தவன் என்கிற உண்மையை உணராமல். அழுது அடம் பிடிப்பேனென்று அப்பா என்னைக் குளிக்க வைத்ததேயில்லை ஒரே ஒரு முறை அவரை குளிப்பாட்டியிருக்கிறேன் அப்போதும் அழுது கொண்டுதானிருந்தேன்... தனது நிழலில் நடந்த, நடந்து முடிந்த விடயங்களை கூட மிக இயல்பாக கவிதைகளாக்க முடியுமென்பதை நிரூபித்திருக்கிறார் கவிஞர். அவரவர் நிழலில் ஒளிந்து கிடக்கின்ற ஒப்புவுமைகளைக் கொண்டே... தனது கவிதை வரிகளில் வாழ்வியல் சாரங்களை வகைப்படுத்தி இருக்கிறார் கவிஞர் கௌ ஆனந்த பிரபு. கவிஞர் மிகவும் நுட்பமான சமூகப் பார்வையுடையவராய் இருக்கிறார் என்பதும் பல கவிதைகளில் பட்டவர்த்தனமாய் தெரிகிறது. சிலம்பு விற்ற காசில் மப்பேரி மதுபான கடையின் வலப்புர மூலையில் சுரண்டு கிடக்கிறான் கோவலன் இன்னும் இல்ல மடையாத கணவனை பற்றிய கவலையோடு அலுவலகத்தில் கணக்கெழுதி கொண்டிருக்கிறாள் கண்ணகி அம்மாவின் கார் சிலம்பை திருடி ஐபோனில் விளையாடிக் கொண்டிருக்கிறான் இளவரசன் புராண பிழையிலிருந்து மீளா மன்னனால் திருட்டுப் பொருளை வாங்கிய குற்றத்திற்காக சிறைச்சேதம் செய்யப்பட்டான் வட்டிக்கடை சேட்டு நீதி கேட்டு கதறும் வட இந்திய பெண்ணின் மொழி புரியாது போனாலும் வலியின் பொருட்டு மீண்டும் எரிய தொடங்கிற்று நான் மாடக்கூடல்...

இன்றைய கண்ணகி கோவலன்களின் கதையை இப்படியும் கவிதைகளில் கூற முடியும் என்று தன்னைத் தானே செதுக்கி கொண்டிருக்கிறார் அன்று மதுரை எரிந்த கதையும், இன்று மனிதர்கள் எரிந்து கொண்டிருக்கிற அதையும் நாம் அத்தனை பேரும் அறிந்த ஒன்றுதான். என்ற போதும் அதை நமது நினைவிளாட செய்கிறார் கவிஞர் கௌ. ஆனந்த பிரபு தெளிந்த பார்வையும், நேர்கொண்ட எழுத்துக்களும் இன்னும் இன்னும் நிறைய நமக்கு கொடுப்பார் தோழர்,கவிஞர் கௌ ஆனந்த பிரபு என்று வரவேற்கிறோம் புரட்சி வாழ்த்துகளுடன்.

**முத்தையா மோகன்
76 உமா நாம நகர் 1.
உப்பிலிபாளையம்
மாவட்ட ஆட்சியராக
அருகில் கோயம்புத்தூர்
641018.
பேச: 9659419429.**






## காதல் சுற்றும் வாலிபன்

என் இனிய காதல் தேவி நீ!
உன்னை(யே) நினைப்பதும்
உன்னை(யே) சுற்றுவதையும்
விடவும் வேறு மகிழ்ச்சியான
தருணம் இந்த வனப்பான
உலகத்தில் எனக்குக்
கிடைத்து விடுமா என்ன?!
என்னுள் அன்பைச் செலுத்திக்
காதலையே சுற்றி வரச் செய்து
என்னைச் சக்ரவர்த்தியாக்கிய
வெற்றித் திருமகள் நீ!
என் ராணி உன்னை விடவா
வேறொரு தேவதை
என் மனதில் மகாராணியாக
வீற்றிருக்க முடியும்?!
என் அரசி பெண் அரசி
உன் முத்தங்களில் கிட்டாத
சுபிட்சம் சொர்க்கத்திலும்
கிடைக்காத இன்பம் என்றே
நான் நவில்வேன்! நீ சைவத்
திலகம் எனும் போதும்
எனக்காக(வே) நிகழும்
உன் அசைவுகள்
வரலாற்றில் நான் இது வரை
காணாத அன்பின் பெரும்
பேறு! காதலை இத்தனை
அழகாக்க உன்னை விட
வேறு யாரால் இயலும்?!
என் இனிய உயிர்க்காதல்
அன்பே!

நீ கொலஸ்ட்ரால் சுந்தரி
என்றாலும்(கூட) உன்னிடம்
பேரரசியின் சாயல் அதிகம்!
உன்னைப் பிடிவாதம்
குத்தகைக்கு
எடுத்திருந்தாலும்
அதைப் பற்றிக் கொண்டு
ஆட்சி புரிவதில்
உனக்கு நிகர் நீ மட்டும் தான்!
நான் உன்னைச் சுற்றும்
காதலனாக இருப்பினும்
மடக்கிச் சாய்த்து
அமர வைப்பதில் நீ ஓர்
அழகிய காதல்மதி!
உன் முத்தங்களுடன்
ஒப்பிடுகையில் இனிப்பின்
சுவை ஓரங்கட்டப்பட்டு
எங்கோ ஒரு மூலையில்
இருப்பிடம் தேடுகிறது!
நீ நம் காதலில் நல்லாட்சி
நடத்துகையில் வேறொரு
ராணி இனி எனக்கெதற்கு?!

நீ வெப்பமாக இருக்கும்
போதும் வெப்பன்ஸுடன்
இருக்கும் போதும்
வன தேவதை!
நீ குளிர்ச்சியாக
இருக்கும் போதும்
முத்தங்களால்
என்னைக் குளிர
வைக்கும் போதும் நீ
வானத்து தேவதை!
உன்னைச் சுற்றும் போது
நான் காதல்
இளவரசனாகிறேன்!
நீ என்னை
முத்தமிடும்போதோ
காதலுக்கே நான்
சக்ரவர்த்தியாகிறேன்!
சேலையோ சுடிதாரோ
தாவணியோ சல்வார் கம்மீஸோ
ரோஜா மலர்களால் செய்தால்
தான் உனக்கு அழகாகவும்
பொருத்தமாகவும் இருக்கும்!
மனசுக்குள் வந்து விட்டாய்
என் மஞ்சத்திற்கும் வா!

ஒரு முத்தாரத்தில் சேர்த்து
வைத்த முத்துகளைப் போல்
உன் சிரிப்பழகு!
கன்னத்தில் மயிலிறகால்
வருடியது போல்
உன் இதழ்களின்
பெட்டகத்திலிருந்து
உதயமாகும் புன்னகை!
உன்னைச் சுற்றினால்
காதலையே சுற்றியது போல்
அத்தனையோர் அழகான
சுகம்! உன்னைப் பற்றி எழுத
நினைக்கிறேன்
அழகான மற்றும் பேரழகான
வனப்பான மற்றும் சுந்தரமான
அத்தனை வார்த்தைகளும்
வந்து வரிசை கட்டி நிற்கிறது!
எந்தப் பக்கம் எப்பொழுது
எப்படித் திருப்பிப் பார்த்தாலும்
நீதான் என் காதல்
நீ மட்டும் தான் என் காதல்
என்ற உண்மை
எனக்குத் தெரிய வருகிறது!

நீ எப்பொழுதாவது
என்னைச் சந்திக்க வரும்
போதே நான் கரும்புத்
தோட்டத்தில் புகுந்த
வேழமாகிறேன்!
இன்னும் நீ எந்த நேரமும்
என்னுடனே(யே) இருந்து
விட்டால் நான்
காதல் சுற்றும் வாலிபனாக
அல்லவா மாறி விடுவேன்!
புன்னகை சிந்தும் மலர்
நீ பொழுது புலர்ந்தது முதல்
நள்ளிரவு வரை உன்னைப்
பற்றிய சிந்தனையிலேயே
என் காதல் நதி ஓடுகிறது!
அழகி அப்சரஸ் சுந்தரி
தேவதை என்றெல்லாம்
உன்னை விதவிதமாக
வர்ணிக்கிறார்கள்!
ஆனால் நானோ இந்த
உண்மையையெல்லாம்
ரசித்து ருசித்தபடியே
வாழ்கிறேன்!



**முத்து ஆனந்த்** வேலூர்

## கோள் வினை நம்பாதே.!

வினையென்றும்..
விதியென்றும்..சிலர்
சொல்லுவார்.! தன்
பிழைப்புக்கு வழிதேடி
இதை சொல்லுவார்.!
கோளென்றும்.. குறியென்றும்
கதைச் சொல்லுவார்.!
உன்னை ஏமாற்றி சுகவாழ்வு
அவர் வாழுவார்!

பரிகாரம் செய் என்று
பணம் அள்ளுவார்.!பலி
தந்தால் ஜெயம் என்று
உயிர் கொல்லுவார்! ஏழரை
நடக்குதென்று
எடுத்தோதுவார்.. அதற்கு
இதுசெய்க.. அதுசெய்க..
எனச் சொல்லுவார!

உழைப்பொன்றே
உயர்வென்று அறியாமலே..
இங்கு உண்மையை
உணராமல் அதில் வீழுவார்!
பணத்தோடு பணம்சேர
பலன் சொல்லுவார்.. அதற்கு
கோள் என்றும் வினை
என்றும் பெயர் கூறுவார்!
இதை உணரந்தோர்கள்
உலகத்தில் நலம் காணுவார்.!

**வே.கல்யாண்குமார்.**

எளிதில் கிடைத்திடும்
எதற்கும்
நிஜ மதிப்பில்லை.



உழைப்பெனும்
உப்பில்
உறுவதே
வாழ்வின்
சுவை.

**கே. பி. ஜனார்த்தனன்**

## ஆயுதத் தொழிற்சாலை காப்போம்!

நேரிசை வெண்பா!

கல்கத்தா காசிபூரில்
ஆயுத உற்பத்தி

வல்ல முறையிலே
வண்ணமாய்..நல்லவாறு

கண்டநாள் காண்கின்ற
ஆயுத நாளாகும்

கண்காட்சி மூலமே காண்!

ஆயுதம் செய்வோம்
அழகாய் உழைப்பிலே

ஓயுதல் செய்யோமே
ஒண்மையாய்ச்..சாயுதல்
செய்யோம் சரிநிகராய்ச்
செம்மை உழைப்பினால்

பெய்வோம் உழைப்பைப்புரி!

## குறள்வெண் செந்துறை கேள்வி!

கேட்கப் படுதல்
கேள்வியாகும்
கேள்விச் செல்வம்
கேள்வியாகும்!
ஈட்டும் செல்வம்
கேள்வியாகும்
இன்பம் நல்கும்
கேள்வியாகும்!

சிறந்த செல்வம்
கேள்விதானே
செழுமைக் கருத்தைக்
கேட்டிடலாம்! அறிவே
வளரும் கேள்வியாலே
அன்பே கூடும்கேள்வியாலே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

## அன்பின் அலைகள்

அன்பின் அலைகள்
உள்ளத்தில் பரவசமாக
வீசுகிறது என் உள்ளக்
கடலில் அன்பு என்ற
அலை மகிழ்ச்சியாக வந்து
வந்து போகிறது குட்டி
புன்னகையில் மெட்டு
போட்ட பாட்டு போல மனம்
ரசிக்கிறது குறைவான
வார்த்தைகளாக இருந்தாலும்
நிறைவான மகிழ்வை
தருகிறதே... பிரேமத்தில்
வீசும் கடல் அலைக்கு
இணையே கிடையாது
இவையெல்லாம் வருவதால்
வாழ்க்கை நிறைவாகிறதே ...
வீசும் தென்றல் கூட
கொஞ்சம் அன்பை
காட்டுகிறதே...
இன்பத்தின் அலைகளில்
துன்பமெல்லாம் கரைந்து



ஓடி கடலில்
கரைகிறதே .....
மனிதாபிமானம்
நிறைந்த
இறைவனை
வணங்குவோம்...
மகிழ்ச்சி
கடலில் தத்தளிப்போம் ...

**உஷா முத்துராமன்**

## யார் அறிவார்

மனித இனமும்
தாவர இனமும் ஒன்னுதான்,,,

மனிதர்கள் எல்லாம்
ஒன்னுப்போல
தோன்றினாலும்
மனதின் எண்ணங்கள்
மாறுப்படுகிறது

தாவரங்கள் எல்லாம்
ஒன்னுப்போல
தோன்றினாலும்
மலரின் வண்ணங்கள்
மாறுப்படுகிறது

மனது நினைப்பதையும்
மலர்கள் மலர்வதையும்
யார் அறிவார்,,,?

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

## இருட்டறையில் உள்ளதடா உலகம்!

அறுசீர் மண்டிலம்.

பகுத்தறிவுப் பாசறைக்கு
வாவென்றே பாங்காக
அழைக்கின்ற பாட்டிஃதே
வகையான நற்கருத்தை
வலியுறுத்தும் வண்ணமய
செய்திகளைத்தாங்கிவரும்!
தகவில்லா மூடநம்பிக்
கைகளையே தருகின்ற
கருத்தமைந்த பாட்டிஃதே
இகபரத்தில் இல்லாத
நம்பிக்கைகள் இம்மண்ணில்
காண்பதையே சுட்டிடுவார்!

கண்மூடிப் பழக்கங்கள்
எல்லாமே காணாமல்
போய்விடவே
வேண்டுமென்றார்
மண்மூடும் நாள்வரைக்கும்
வழக்கங்கள் மறையாத
பழக்கமாகக்காண்கிறதே!
எண்டிசையும் புகழ்மணக்க
தமிழரெல்லாம் ஏற்றமுடன்



பகுத்தறிவாய்
வாழவேண்டும்
அண்டியுள்ள
மூடப்பழக்கங்கள்
அகிலத்தில்
மறைந்தேதான்
போகவேண்டும்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## ஆழியும் அவளும்...

ஆழியும் அவளும் ஒன்று
என்று மார்கழியில்
நினைத்தேன் நான் இன்று!
தூளியில் ஆடும்
குழந்தை போல துள்ளி
எழுவாள் என்னை கண்டு!

ஆழ் கடலின் நடுவே
படகினிலே! பயணம்
சென்றால் பகலினிலே!
இடையே தெரியா உடை
உடுத்தி! நீல ஆடையில்
மயில் ஒருத்தி!

வலக்கையில் பாதம் தான்
பிடித்து இடக்கையில்
ஆடைஅதை திருத்தி!
முகத்தை காட்டா
முழுமதியாய்
கெண்டை மீனின்
கண்ணழகி மலர்
கொண்டை அழகை
காட்டுகிறாள் !

ஆழியின் எல்லை
முழுவதையும்
கண்டவர் உலகில்
கிடையாது! பெண்
அவளின் மனதில்
உள்ளதையும்
கண்டிட என்றும் முடியாது!
ஆழியும் அவளையும்
ஒன்றினைக்க ஒற்றுமை
இதைவிட வேரில்லை!
அவளின் நினைவுகள்
விழுதுகளாய்... மனதில்



முளைவிட்ட
வேர் எல்லை.

**கவிஞர்**
**பொன்.**
**பனகல்**
**பொன்னையா.**

மழைநீர் மண்ணில் கரைந்து
நிறமாறும்...

உன் விழி நீர் என்னை
நனைத்து...உறவாகும்....



பழகிய மனம்
தான்..
பிரிவில்
தடுமாறும்...

கடந்த
நினைவுகள்
கடக்க இயலாது...
தழும்பாகும்....

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## சைகை மொழி !

உன் வீட்டு பால்கனியில் நீ
பேசிக் கொண்டிருப்பது உன்
தங்கையோடு என்றாலும்...

நீ உன் மீன் விழியால்
சைகை மொழியில்
பேசியது என்னோடு
என இத்தனை நாள்
நினைத்துக்கொண்டிருந்ததில்...



இடி
விழுந்தது..

பின்
வீட்டிலிருந்து,
அவன்
உன்னிடம்
சைகை காட்டி
கை அசைத்தபோது !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

## நினைவுகள்

நேற்று
கையில் இருந்தது
இன்று
காய்ந்து சருகான மலர்
இன்று
கையில் இருப்பதோ



என்
கனவுகள்
மொட்டொன்று
மலராய்
விரிந்து
மணம்
பரப்பும்
ஆசையுடன்

**ஓம் குமார் P N**

## சமூகச் சீர்கேடு

சமூகத்தின் அற நெறிகள்,
கலாச்சாரம், ஒழுக்கம்
சிதைந்து போவது !

தனிநபர் செயல் ஒட்டுமொத்த
தேசத்தை பாதிக்கிறது!

போதைப் பொருள் பயன்பாடு
இளைஞர்களிடையே
அதிகரித்து வருவது!

மதுப்பழக்கம்
குடும்பங்களையும்
சமுதாயத்தையும் சீரழிக்கிறது!

கல்வி மற்றும் வேலை
வாய்ப்பின்மை சரியான
வழிகாட்டுதல் இல்லாமை!

பொருளாதார நெருக்கடியும்
தவறான பாதையில் செல்லத்
தூண்டுகிறது !

வன்முறை மற்றும்
ஆபாசத்தை வெளிப்படுத்தும்
திரைப்படங்கள்!

சமூக வலைதளங்கள்
இளைய தலைமுறைகள்
மனதை மாற்றுகிறது!

சுயநலம் மற்றும் பணம்
சம்பாதிக்கும் ஆசையினால்
நேர்மை ஒழுக்கம் போன்ற
பண்பு குறைந்து வருவது!

ஒவ்வொருவரும் தன்
மனசாட்சிக்கு கட்டுப்பட்டு
நடப்பது அவசியம்!

பெற்றோர் மற்றும்
ஆசிரியர் சிறுவயதிலேயே
குழந்தைகளுக்கு
அறநெறி கதைகளையும்
ஒழுக்கத்தையும் போதிக்க
வேண்டும்!

குற்ற செயல்கள் மற்றும்
போதைப் பொருள்கள்
விற்பனைக்கு எதிராக
கடுமையான சட்டங்கள்
அமல்படுத்த பட வேண்டும்!

சமூக மாற்றம் தனிமனித
மாற்றத்திலிருந்து வரும்!

ஆயிரம் கனவுகள் சுமந்த
விழிகளில் ஆலகால
விஷமாய் போதை ஏறுதே !

ஈரம் காய்ந்த இதயக் கூட்டில்
ஈரம் இல்லா வன்முறை
முளைக்குதே!

பெற்றோர் வளர்த்த பாசம்
எங்கே?

பணம் தேடும் அவசரப்
பயணத்தில் மனச்சாட்சியைத்
தொலைத்த மனிதன் எங்கே?

தர்மம் உறங்கும் தேசத்தில்
அநீதி ஆட்டம் போடுதே!

கல்வி கற்றுக் கொடுத்த
ஒழுக்கத்தை கண்ணாடித்
திரைகள் சிதைக்குதே !

நாளை மலரும் நந்தவனம்
நச்சுக் காற்றில் கருகலாமா?

சமுதாயச் சீரழிவை வேரோடு
அறுக்க சத்தியக் கரங்கள்
இணையட்டுமே!

காகித பூக்கள்
மணப்பதில்லை இங்கே
கனிந்த பண்புகள்
நிலைப்பதில்லை!

அலைபேசி திரையில் உலகம்
சுருங்க அன்பின் உறவுகள்
ஏனோ விலக!
மதுவின் மயக்கம் மதியை



கொல்ல
மனிதன்
மறந்து
அலைகின்ற

**பெ.திருமுகம்.**
ஆசிரியர்
மணமேல்குடி



1. வயிற்றில் சுமந்த
தாய்க்கும் தோளில் சுமந்த
தந்தைக்கும் பாரமாகத்
தெரியாத மகள்மருமகளாக
மாறிய பின் மாமியாருக்கு
பாரமாக தெரிகிறாள்

2.விரும்பிய ஒருவர்
உடன் வாழத்தான்
திருமணம் அவசியம்
விரும்பியவர்களுக்குள் வாழ
அழகான காதல்
போதுமானது


3. கடவுளிடம் வருவது பக்தி
மனைவியிடம் வருவது
பயபக்தி

4. எவ்வளவு பாவம்
செய்துவிட்டு என்னிடமே
வேண்டுதல் வைக்கிறாயே
என்று கடவுள் நம்மிடம்
கேட்டால் பிறகு எந்த
வேண்டுதலும் இருக்காது
கோவிலில் கூட்டமும்
இருக்காது

5.உன் வேதனை பலரை
சிரிக்க வைக்கலாம்
ஆனால் உன் சிரிப்பு
அடுத்த வரை
வேதனைப்படுத்த கூடாது

6. காதலின் ஆரம்பம்
காபி ஷாப்
காதலின் முடிவு ஒயின் ஷாப்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## ஜீவாவைப்போல் யாரே உள்ளார்

ஊர்நடுவே பழுத்தமரம் மக்களுக்கே
உரியபயன் நல்குகின்ற தன்மையாகப்
பேர்பெற்ற காமராசர் முதல்வராகப்
பெருமையுடன் தமிழகத்தை ஆண்டபோது
சீர்மிகுந்த அரசுவிழா ஒன்றில் பேசச்
சிலரோடு மகிழுந்தில் செல்லும் போதோ
ஆர்வமுடன் சீவாவை அழைத்துச் செல்ல
அவரிருந்த குடிசைமுன்னே இறங்கி நின்றார் !

கட்டுவதற்குத் துவைத்திட்ட வேட்டி தன்னைக்
காய்வதற்கு வேலிமீது போட்டிருந்த
சட்டமன்ற உறுப்பினராய் இருந்த சீவா
சற்றுநீங்கள் பொறுத்திருந்தால் வருவே னென்றே
எட்டிநின்று உரைத்துவேட்டி காய்ந்த பின்பு
எடுத்துடுத்திக் குடிசைவிட்டு வெளியே வந்தார்
கட்டுமொரு வேட்டியொடு வாழும் செய்தி
காமராசர் அறிந்துநெஞ்சுள் கண்ணீர் விட்டார் !



காந்திமகான் தமிழ்நாடு வந்த போது
காண்பதற்கு வந்தசீவா தம்மைப் பார்த்துச்
சாந்தமூர்த்தி சொத்துளதா என்று கேட்கச்
சட்டென்றே இந்தியாதான் என்சொத் தென்றார்
பாந்தமுடன் சீவாவைத் தழுவிக் காந்தி
பாரதத்திதின் நல்சொத்தே நீதான் என்றார்
காந்தியைப்போல் வாழ்ந்தசீவா தியாகிபோல
காணவின்றோ அரசியலில் யாரே உள்ளார் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

## தெம்மாங்கு பாட்டு



போகுதடி எம்மனந தான்
போகுதடி நீ போன எடம்
பார்த்து மனம் போகுதடி ...

வாடுதடி எம்மனந்தான்
வாடுதடி நீ வரவில்லை என்று
எம்மனந்தான் வாடுதடி..

அடி அத்தை மகளே மாமே
மகளே சத்த நில்லடி இந்த
மச்சான் பாடுற பாட்டையும்
கொஞ்சம் நின்னு கேலடி

அஞ்சு வயசுல பிஞ்சு மனசுல
நெனைச்சது...நீ
ஆளாகி போனதினால் மலருது

மண்ண அள்ளி
கொட்டாங்கச்சியில சோறாக்கி
காட்டு இலையப் பரிச்சு நீயும்
எனக்கு சோற் போட்டு

இருட்டு முன்னே
வௌக்கணச்சு படுத்து
இருக்குதா.. ஞாபகம் தான்
இருக்குதா

அடி சைக்கிளில் பள்ளி
கொடத்துக்கு போகையிலே
உன் தாவணியும் சைக்கிள்ல
மாட்டியது அது இருக்குதா
ஞாபகம் தான் இருக்குதா...

பெண்...
மச்சான் இருக்குதுங்க
ஞாபகம் தான் இருக்குதுங்க
நீங்க இல்லைன்னா எனக்கு
தான் வெறுக்குதுங்க
மறக்குமாங்க எம்மனந்தான்
மறக்குமாங்க உங்கள
மறந்து விட்டா என் உசுரு
இருக்குமாங்க

அட அத்த மகனே
அட மாமே மகனே
சத்த நில்லையா
இந்த குயில் பாடுற பாட்டயும்
கொஞ்சம் நின்னு கேலையா

உங்களுக்காக பெறந்த
புள்ளே நானுங்க உங்க கூட
வாரதுன்ன தாலி ஒன்னு
வேணுங்க மச்சான்..
உங்களுக்காக.....

(அட அத்த மகனே..)


**முனைவர்**
**அ.சகாதேவன்**
இணை பேராசிரியர்
புதுக்கோட்டை




















**WANTED**

M/F லோடுமேன்,பிக்கர், ஹைப்ர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift

**7540003588**




**செக்யூரிட்டி கார்டுகள் தேவை**

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம்
கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை
செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539







































## Special Invitation

to retired seniors **house wives businessmen bankers**

CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your **second Innings with a career business opportunity**

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided

For successful business.

**Contact Mr. Irudaya Raj**

**Ph.9486634780**




We Are Urgently **Hiring!**

**Marketing Manager**

Ad Sales (Print Media)

Package Rs. 4.8 LPA

Company : **PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD**

Location : **Chennai**

**Padma Digital** a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.

**Key responsibilities for Marketing Manager**

- Minimum 5 years of experience in print media ad sales
- Proven experience in space selling
- Strong background in field sales and client acquisition
- Excellent communication and negotiation skills
- If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you

If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com

**Call: 9337501889**







**WANTED**

Needed female staff to look after children, patients.

Contact

9150989424




**WANTED**

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872













தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI


**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE






# பல்சுவை களஞ்சியம்




## எவை எவை மருந்துகள்



1. சீக்கிரம் தூங்கி சீக்கிரம் எழுவது மருந்து.

2. காலையில் இறைவனை நினைப்பது மருந்து.

3. யோகா, பிராணாயாமம் மற்றும் உடற்பயிற்சி ஆகியவை மருந்து.

4. காலை, மாலை நடைப்பயிற்சியும் மருந்தாகும்.

5. நோன்பு அனைத்து நோய்களுக்கும் மருந்து.

6. சூரிய ஒளியும் ஒரு மருந்துதான்.

7. தண்ணீர் குடிப்பதும் ஒரு மருந்து.

8. கைதட்டலும் மருந்துதான்.

9. அதிகம் மெல்லுவதும் மருந்துதான்.

10. உணவைப் போலவே, மெல்லும் நீர் மற்றும் குடிநீரும் ஒரு மருந்து.

11. உணவுக்குப் பின் வஜ்ராசனத்தில் அமர்வது மருந்தாகும்.

12. மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற முடிவும் மருந்தாகும்.

13. சில சமயங்களில் மௌனமும் மருந்தாகும்.

14. சிரிப்பும் கேலியும் மருந்து.

15. மனநிறைவும் மருந்துதான்.

16. மனமும் உடலும் அமைதியே மருந்து.

17. நேர்மையும் நேர்மறையும் மருந்து.

18. தன்னலமற்ற அன்பும் உணர்ச்சியும் கூட மருந்து.

19. அனைவருக்கும் நல்லது செய்வதும் மருந்தாகும்.

20. ஒருவருக்கு புண்ணியம் தரும் ஒன்றைச் செய்வதும் மருந்து.

21. எல்லோருடனும் சேர்ந்து வாழ்வதே மருந்து.

22. உண்பதும் குடிப்பதும் குடும்பத்துடன் பழகுவதும் மருந்தாகும்.

23. உங்களின் ஒவ்வொரு உண்மையான மற்றும் நல்ல நண்பரும் பணம் இல்லாத ஒரு முழுமையான மருத்துவக் கடை.

24. குளிர்ச்சியாக இருங்கள், பிஸியாக இருங்கள், ஆரோக்கியமாக இருங்கள், உற்சாகமாக இருங்கள், இதுவும் மருந்துதான்.

25. ஒவ்வொரு புதிய நாளையும் முழுமையாக அனுபவிப்பது மருந்தாகும்.



-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

## கருப்பு திராட்சை விதையில் உள்ள மருத்துவக் குணங்கள் பற்றி

கருப்பு திராட்சை என்றவுடன் அனைவருக்கும் நினைவுக்கு வருவது புளிப்பு சுவை தான். திராட்சைப் பழங்களை விட அதன் விதையில் ஏராளமான மருத்துவ நன்மைகள் நிறைந்துள்ளது. கருப்பு திராட்சைப் பழத்தை விட, அதன் விதையில் புரோ-ஆன்தோசயனிடின் (pசழயவொழஉலயானைin) எனும் சத்து அதிகமாக நிறைந்துள்ளது.

கருப்பு திராட்சை விதைகளில் உள்ள மருத்துவ நன்மைகள் :

???? இரத்தக்குழாய்களில் ஏற்படும் அடைப்பு, இரத்தக்;குழாய்களில் ஏற்படும் வீக்கம், இரத்தக் கொதிப்பு போன்றப் பிரச்சனைகளை குணமாக்க திராட்சை பழத்தின் விதை அதிகமாக பயன்படுகிறது.

???? கருப்பு திராட்சையின் விதை மூலநோயினால் ஏற்படும் இரத்தப்போக்கை கட்டுப்படுத்த பெரிதும் உதவுகிறது.

???? இரத்தக்குழாய்களில் உள்ள கொழுப்பைக் கரைத்து, சர்க்கரை நோய் மற்றும் கால்கள் மரத்துப்போதல் போன்ற பிரச்சனையை குணமாக்க கருப்பு திராட்சையின் விதை மிகவும் உதவுகிறது.

???? அதேபோல் சிறுநீரகச் செயல்பாட்டின் குறைகளை சரிசெய்யப் பயன்படுகிறது. மேலும், மாலைக்கண் நோய் மற்றும் கண்புரை போன்ற கண் தொடர்பான பிரச்சனைகள் வராமல் இருக்க கருப்பு திராட்சையின் விதை பயன்படுகிறது.

???? மேலும் பெண்களின் மார்பகப் புற்றுநோய், கருப்பை கோளாறுகள் மற்றும் ஆண்களுக்கு ஏற்படும் புரோஸ்டேட் புற்றுநோய் போன்றப் பிரச்சனைகள் வராமல் இருக்க கருப்பு திராட்சையின் விதை உதவுகிறது.

???? நம் உடலிலுள்ள நச்சுப் பொருட்களை வெளியேற்றிப் புத்துணர்ச்சி தரக்கூடிய ஆன்டிஆக்சிடன்டு இதில் அதிகம் நிறைந்துள்ளது. மேலும், புற்றுநோய் செல்களை அழித்து, புதிய ஆரோக்கியமான செல்கள் அதிக அளவில் உற்பத்தி செய்ய உதவுகிறது. எனவே திராட்சைப் பழத்துடன் விதைகளைச் சேர்த்து உண்பது நல்ல பலனைத் தரும்.



???? உடல் வளர்ச்சியில் குறைபாடு உள்ளவர்கள், உடல் பலகீனம் உள்ளவர்கள், தோல் வியாதி, மூட்டு வலி, மூட்டு வீக்கம் ஆகிய பிரச்சனை உள்ளவர்கள் இதை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் விரைவில் நிவாரணம் கிடைக்கும். நினைவாற்றலை பெருக்கவும் இது பயன்படுகிறது.

???? எனவே, இவ்வளவு மகத்துவம் நிறைந்த திராட்சை விதைகளை, இவ்வளவு நாளாக தூக்கி எறிந்து விட்டோமே என வருந்தாமல், இனிமேலாவது திராட்சை விதைகளை சாப்பிடுங்கள்.

# மீம்ஸ்







# விடுகதை



| | |
|---|---|
| சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம் அது என்ன? | கொசு |
| மழையில் பிறந்து வெயிலில் காயுது? | காளான் |
| அடித்தாலும், உதைத்தாலும் அவன் அழ மாட்டான், அவன் யார்? | பந்து |
| வட்ட வட்ட நிலவில் வரைஞ்சிருக்கு; எழுதியிருக்கு. அது என்ன? | நாணயம் |
| ஓடையில கருப்பு மீனு துள்ளி விளையாடுது அது என்ன ? | கண் |
| பூ பூப்பது கண்ணுக்குத் தெரியும். காய் காய்ப்பது கண்ணுக்குத் தெரியாது. அது என்ன? | வேர்கடலை |
| பட்டுப்பை நிறைய பவுண் காசு. அது என்ன? | வத்தல் மிளகாய் |

# ஜோக்ஸ்




வம்புலே மாட்டுறதுக்கு இன்பாக்ஸ் கேள்விகள் &பதில்கள்

1. U from??
எதுக்கு?

2. Married ah??
ஏஏஏஏன்?

3. Age yenna??
ஏழு கழுதை வயசாச்சு, என்ன இப்போ??

4.Saptingala??
அதுலாம்



நேராநேரத்துக்கு தெளிவா,

5. Good morning, good afternoon, good night, ப்ளீஸ் இதையெல்லாம் கமெண்ட்ல சொன்னா உங்க கெத்து போய்டுமா??

6.Yenna work panringa?
சோறு.. சோறு.. தண்டச்சோறு..

7. What's doing?
வெட்டி.. எப்பவுமே வெட்டி தான்,



8. Pathil solla matingala??
அதான் சொல்லலைனு தெரியுதுல,

9. What's app number yenna?
ம்ம்க்கும், அங்க ஒன்னும் தேறாது, பதில் சொல்றதுக்கு பல மாசம் ஆகும்,

10. Unga photo anupunga.,
ஏன் வாழறதுக்கு விருப்பம் இல்லையா?

11. Neenga ponne ila, nan namba maten, போய்ட்டு வாங்க புத்திசாலி,

12. Ennai miss panringala?
அய்யோ ஆண்டவா... மண்டைய கொண்டுபோய் எங்க மோத்திக்குவேன்?

13. Yeppavum online thana?
என்ன பிரச்னை உமக்கு?

14. Nenga yenna community?
என் புருஷனுக்கு பொஞ்சாதி,/ என்பொஞ்சாதிக்கி ஆண்சாதி போதுமா?

15 Oi hoii,
என்ன வாந்தி வருதா??

16› இதுதான் இன்றைய முகநூல் வாட்சாப் லொள்ளு நிலவரம்

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## கோடீஸ்வரன்...



குடிசை..!
விறகு..!
அடுப்பு..!
நாட்டுக்கோழி..!
ஆடு..!
நாட்டுமாடு..!
மாட்டுவண்டி..!

தோட்டம்..!
வயல்..!
விவசாயம்..!
இவை
அனைத்தும்
இருந்தால் நீங்களும்
கோடீஸ்வரனே...!

## தைராய்டு அளவு குறைவாக இருப்பவர்கள் சாப்பிட வேண்டிய உணவுகள்



மருத்துவ ரீதியாக தைராய்டு ஹார்மோன் குறைபாடு 'ஹைப்போ தைராய்டிசம்' எனப்படும். மனிதனின் கழுத்தில் உள்ள பட்டாம் பூச்சி வடிவ தைராய்டு சுரப்பியில் தைராய்டு ஹார்மோன் உற்பத்தி ஆகிறது. உடல் தனக்கு கிடைக்கும் ஆற்றலை பயன்படுத்தி கொள்வதற்கும், வளர்சிதை மாற்றத்திற்கும் இது உதவுகிறது. தைராய்டு சுரப்பி குறைபாடு (ஹைப்போ தைராய்டிசம்) இந்தியாவில் 10 பேரில் ஒருவருக்கு இருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இது ஆண்களை விட பெண்களிடையே அதிகம் காணப்படுகிறது.

**தைராய்டு சுரப்பி குறைபாடு உள்ளவர்கள் சாப்பிட கூடாத உணவுகள்**

முட்டைக்கோஸ், காலிபிளவர், புரோக்கோலி மற்றும் முள்ளங்கி. இதில் உள்ள காயிட்ரோஜன் தைராய்டு சுரப்பி உற்பத்தியை குறைக்கிறது. சோயாபீன்ஸ், சோயா பால், டோபு. இவற்றில் உள்ள காயிட்ரோஜன் மற்றும் பைட்டோ ஈஸ்ட்ரோஜன் தைராய்டு செயல்பாட்டை தடுக்கிறது. பதப்படுத்தப்பட்ட இறைச்சிகள் அல்லது உணவுகள், எண்ணெயில் பொரித்த உணவுகள், துரித உணவுகள், பாட்டில் குளிர்பானங்கள், காபி (இது தைராய்டு மாத்திரைகள் உட்கொண்ட பின்னர், அவை வயிற்றில் இருந்து ரத்தத்தில் உறிஞ்சப்படுவதை தடுத்து அதன் செயல்பாட்டை குறைக்கிறது), மது பானங்கள், செயற்கை இனிப்பூட்டிகள்.

**தைராய்டு சுரப்பி குறைபாடு உள்ளவர்கள் சாப்பிட வேண்டிய உணவுகள்**

உணவில் அயோடின் கலந்த உப்பு பயன்படுத்த வேண்டும். மீன், இறால், பால் பொருட்கள், முட்டை, செலீனியம் நிறைந்த உணவுகள் (கடல் உணவுகள், கோழி, காளான், பூண்டு), ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்த உணவுகள் (சால்மன், மத்தி, கானாங்கெளுத்தி போன்ற மீன்கள், ஆளி விதைகள், அக்ரூட்), முழு தானியங்கள் (பழுப்பு அரிசி, ஓட்ஸ் மற்றும் முழு கோதுமை), மெலிந்த புரதங்கள், காய்கறிகள் மற்றும் பெக்டின்கள் நிறைந்த பெர்ரி, ஆப்பிள், பேரிக்காய், பிளம்ஸ், சாத்துக்குடி, ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பழங்கள்.

சர்க்கரை நோயாளிகளுக்கு செய்யப்படும் எச்.பி.ஏ1சி (HbA1c) ரத்த பரிசோதனையில் ஒரு பொய்யான உயர்வை ஹைப்போ தைராய்டிசம் ஏற்படுத்தக் கூடும். மேலும் இது சர்க்கரை நோயாளிகளுக்கு நரம்பியல் மற்றும் சிறுநீரக பாதிப்பு ஏற்படும் வாய்ப்பை அதிகரிப்பதாக ஆராய்ச்சிகளில் கண்டறியப்பட்டுள்ளது.

## மனசு சஞ்சலப்படுகிறதா...?

ஒருமுறை புத்தர் தன்னுடைய சீடர்களுடன் பயணப் பட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு ஏரியை எதிர் கொண்டபோது, அங்கிருந்த பெரிய ஆலமர நிழலில் அனைவரு...ம் சற்று ஓய்வெடுக்கும் எண்ணத்துடன் தங்கினார்கள்.



புத்தர் தன்னுடைய சீடர்களில் ஒருவரை அனுப்பி ஏரியில் இருந்து குடிப்பதற்கு நீர்கொண்டு வரச் சொன்னார்.

சீடரும் தங்களிடம் இருந்த பானை ஒன்றை எடுத்துக்கொண்டு நீர்நிலையை நோக்கி நடந்தார்.

அந்த நேரத்தில், மாட்டு வண்டிக்காரர் ஒருவர், ஏரிக்குள் இறங்கி ஏறியைக் கடந்து சென்றார்.

ஏறி கலங்கி விட்டது. அத்துடன் ஏரியின் கீழ்ப் பகுதியில் இருந்த சேறும் சகதியும் மேலே வந்து நீரை அசுத்தப் படுத்தி பார்ப்பதற்கே உபயோகமற்றதாகக் காட்சியளித்தது.

இந்தக் கலங்கிய நீர் எப்படிக் குடிப்பதற்குப் பயன்படும்? இதை எப்படிக் குருவிற்குக் கொண்டுபோய்க் கொடுப்பது? என்று தண்ணீரில்லாமல் திரும்பிவிட்டார்.

அத்துடன் தன் குருவிடமும் அதைத் தெரிவித்தார்.

ஒரு மணி நேரம் சென்ற பிறகு,

புத்தர் தன்னுடைய சீடரை மீண்டும் ஏரிக்குச் சென்றுவரப் பணித்தார்

நீர்நிலையருகே சென்று சீடன் பார்த்தான். இப்போது நீர் தெளிந்திருந்தது . சகதி நீரின் அடியிற்சென்று பதிந்திருந்தது.

ஒரு பானையின் தண்ணீரை முகர்ந்து கொண்டு சீடன் புத்தரிடம் திரும்பினான்.

புத்தர் தண்ணீரைப் பார்த்தார். சீடனையும் பார்த்தார். பிறகு மெல்லிய குரலில் சொல்லலானார்.

தண்ணீர் சுத்தமாவதற்கு என்ன செய்தாய்..?

நான் ஒன்றும் செய்யவில்லை சுவாமி! அதை அப்படியே விட்டுவிட்டு வந்தேன். அது தானாகவே சுத்தமாயிற்று!

நீ அதை அதன் போக்கிலேயே விட்டாய்.

அது தானாகவே சுத்தமாயிற்று.

அத்துடன் உனக்கு தெளிந்த நீரும் கிடைத்தது இல்லையா?

ஆமாம் சுவாமி!

நம் மனமும் அப்படிப்பட்டதுதான்..

மனம் குழப்பத்தில் இருக்கும்போது நாம் ஒன்றும் செய்ய வேண்டாம்.

அதை அப்படியே விட்டு விட வேண்டும். சிறிது கால அவகாசம் கொடுக்க வேண்டும். அது தனக்குத்தானே சரியாகிவிடும்.

நாம் எந்தவித முயற்சியும் செய்ய வேண்டாம்.

மனதை சமாதானப் படுத்தும் விதத்தைப் பற்றி சிந்திக்கவும் வேண்டாம்.,

அது அமைதியாகிவிடும் .

அது தன்னிச்சையாக நடக்கும்.

அத்துடன் நம்முடைய முயற்சியின்றி அது நடக்கும்.

மன அமைதி என்பது இயலாத செயல் அல்ல!

இயலும் செயலே!

அதற்கு நம் பங்கு எதுவும் தேவை இல்லை! குறைவாகக் காண்க

## முதுகு வலி நிவாரணத்திற்கான உடற்பயிற்சிகள்

முதுகு வலி என்பது இன்றைக்கு ஏறக்குறைய அனைவரையும் பாதிப்படையச் செய்கிறது. முதுகு வலிக்கான காரணங்கள் வருமாறு:

முதுகுத்தசை அல்லது தசைநார்களில் ஏற்படும் பிடிப்புகள், அதிக எடை தூக்குதல் அல்லது மேடு பள்ளமான படுக்கைகளில் படுப்பது, முதுகுத் தண்டுவட வட்டுகளில் ஏற்படும் வீக்கம், அல்லது வட்டுகள் விலகுதல் காரணமாக வட்டுக்குள் இருக்கும் மென்மையான பொருள் வீங்கி அல்லது உடைந்து தண்டுவட நரம்பில் அழுத்தும்போது முதுகு வலி ஏற்படும்.

கீல்வாத நோய்களிலும் முதுகு வலி ஏற்படும். முதுகுத்தண்டுவட வட்டுகள், எலும்புகள் சுருங்குவது (முதுகெலும்பு ஸ்டெனோசிஸ்), எலும்புகளின் வலிமை இழப்பு (ஆஸ்டியோபோரோசிஸ்), முதுகெலும்பில் ஏற்படும் அழற்சி நோய் (அன்கிலோசிங் ஸ்பான்டைலைடிஸ்)








## நாளைய விடியல் நமக்கானது என்று வாழ்வோம்

நாம் இறந்த அடுத்த நொடியே நம்முடைய உயிர் ஆத்மாவாக மாறி

வெளியே நின்றபடி நம்மை வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிடும்.

கொஞ்ச நேரத்தில் எப்படியாவது நாம் இறந்த செய்தி நம் வீட்டுக்கு போய்விடும்,

எல்லோரும் கதறியழுது காத்திருப்பார்கள்,

நம்மை வேடிக்கை பார்க்க ஊரே திரண்டு நிற்கும்,

உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் உடனே தகவல் சென்றுவிடும்,

இவ்வளவு நாள் நேராக வீட்டுக்குள் சென்ற நம்மை இன்று வாசலிலேயே வைத்துவிடுவார்கள்,

இத்தனைக்கும் அந்த வீட்டை நாம்தான் பார்த்து பார்த்து கட்டியிருப்போம்,

எல்லாம் நேரம்!

ஆளுக்கொரு பக்கம் மார்பிலும் தலையிலும் அடித்துக்கொண்டு அழுவார்கள், வருகின்ற நண்பர்களையும் உறவினர்களையும்கூட கட்டிக்கொண்டு அழுவார்கள், நமக்கு ஒன்றுமே புரியாது,

அவர்கள் அழுவதை பார்த்து கஷ்டமாக இருந்தாலும் உள்ளுக்குள் சந்தோஷமாக இருக்கும் நம்மீது இவ்வளவு பாசம் வைத்திருக்கிறார்களே என்று!

உங்களைவிட்டு எங்கும் போகமாட்டேன் எப்போதும் உங்களுடன் இருப்பேன் என்று ஆறுதல் சொல்லி கண்ணீரை துடைக்கவேண்டும் என்று துடியாய் துடிப்போம்.

ஆனால் எதுவுமே முடியாது. அதுதான் மரணத்தின் மிகமோசமான துயரம்!

பாவம் எல்லோரும் tired ஆகி tired ஆகி அழுதுகொண்டே இருக்கிறார்கள் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது!

இதோ நாம் எதிர்பார்த்த அந்த freez-er box வந்துவிட்டது, கோடைவெயிலுக்கு சும்மா குளுகுளு என்று இருக்கும்.


ஆனால் நம்மால் தான் உணரமுடியாது, ஒருவழியாக உள்ளே தள்ளி அடைத்துவிட்டார்கள், இருட்டிக்கொண்டதால் வெளியே campfire ம் போட்டுவிட்டார்கள்.

விடியவிடிய விழித்திருந்து உறங்கலாம் என்று நினைக்கும்போது தாரைதப்பட்டையுடன் ஒரு குரூப் வந்துவிட்டது,

சொந்தபந்தங்கள் எல்லாம் வரத்தொடங்கிவிட்டன பாவிமக்கள் இந்த பாசத்தையெல்லாம் எங்கு வைத்திருந்தார்களோ தெரியவில்லை

அழுதுகொண்டே ஓடிவருகிறார்கள், இவ்வளவு நேரத்திற்கு பிறகு தமிழில் நமக்கு பிடிக்காத அந்த வார்த்தையை ஒருவன் சொன்னான்,

'பொணத்தை ' கொஞ்சம் தள்ளிவைங்க பந்தல்போடனும்,



நம்ம அப்பா எவ்வளவு அழகா பெயர் வச்சிருந்தாலும் செத்தபின்னாடி பத்துகாசுக்கு தேறாது!

கூட்டம் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது, நம் பகையாளிகள் கூட நம்மை ரொம்ப நல்லவன் என்று certificate தருகிறார்கள்,

ஒருபக்கம் தாரை தப்பட்டை

இன்னொரு பக்கம் மக்கள் வெள்ளத்தில் மாலை மரியாதைகள் இன்னொரு பக்கம் பட்டாசுசத்தம், எல்லாம் இருந்தும் என்ன பிரயோஜனம்!?

அத்தனைபேரு முன்னாடி அரைகுறை dress சோட நம்மை குளிக்கவச்சி மானத்தை வாங்கிட்டாங்களே!!

என்ன பண்றது பொணமா பொறந்தாலே இப்படிதான்!

ஒருவழியாக எரிப்பதற்கோ புதைப்பதற்கோ எடுத்துசெல்கிறார்கள்

இவ்வளவு நாள் நாம் போட்ட ஆட்டத்தையெல்லாம் சேர்த்து நாலுபேர் ஆடிக்கொண்டு இருக்கிறார்கள்!

கடைசியில் நம்மை எரித்தேவிட்டார்கள்!

இனி எங்காவது நாய் ஊளையிட்டால் கூட நாம்தான் வந்திருக்கிறோம் என்று புலுக ஆரம்பித்துவிடுவார்கள்!

அடுத்த நாள் வீட்டுக்கு சென்று பார்த்தால்

அழுகை குறைந்து விசும்பலாகிவிட்டிருக்கும்

அதற்கு அடுத்த நாள் விசும்பலும் குறைந்திருக்கும்.

இப்படி நாளாக நாளாக நம்மை கொஞ்சம் கொஞ்சமாய் மறந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிவிடுவார்கள்!

இதில் இன்னொரு சிறப்பு செய்தி என்னன்னா

நாம் இறந்ததை யாரோ Facebook ல் போட மொத்தம் 4000 likes(விருப்பங்கள்)

அடப்பாவிகளா,

அப்போ அத்தனைபேரும் எப்போ போவான்னு wait பண்ணிட்டே இருந்தீங்களா?!

ஒவ்வொரு இறப்பின் போதும் எத்தனையோ கனவுகளும் ஆசைகளும்

சேர்ந்தே புதைந்து போகின்றன!

இப்படி ஒவ்வொரு நாளும் சராசரியா உலகம் முழுவதும் 70,000 பேர் உயிர்துறக்கிறார்கள்!

நாளைய விடியல் நமக்கானது என்கின்ற

எந்த உத்திரவாதமும் இல்லாதபோது

நாம் ஏன் பொய்யோடும், பொறாமையோடும், பகையோடும், பாவத்தோடும் நம் வாழ்க்கையை வாழவேண்டும்?

அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வோம்

## அருள்மிகு மடாவளம் ஸ்ரீ காமாட்சியம்மன் கோயிலில் ஸ்ரீஞான விநாயகர், ஸ்ரீசுப்பிரமணியசுவாமி சிறப்பு தரிசனம்



**செய்யாறு மார்ச். 21:**

செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் தனி சன்னதிகளாக ஸ்ரீஞான விநாயகர், ஸ்ரீ சுப்பிரமணியர் வட திசை நோக்கி அருள் பாலித்து வருகின்றனர்.

இக்கோயிலில் ஆலய குரு சங்கர் குருஜி சிறப்பு அபிஷேகம் ஆராதனை நடத்தினார். பின்னர் நடந்த மகா ஆரத்தி நிகழ்வில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

வடக்கு பார்த்த நிலையில் ஸ்ரீ ஞான விநாயகரும், ஸ்ரீசுப்பிரமணியம் அருள் பாலிப்பது சிறப்பு வாய்ந்ததாக கூறப்படுகிறது.

## ஸ்ரீ பூதநாராயண பெருமாள் கேளுங்க வருடப்பிறப்பு (யுகாதி) சிறப்பு வழிபாடு

**திருவண்ணாமலை மார்ச் 21:**

அருள்மிகு ஸ்ரீ பூதநாராயண பெருமாளுக்கு தெலுங்கு வருட பிறப்பு,(யுகாதி) பண்டிகையை முன்னிட்டு பூத நாராயண பெருமாளுக்கு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், இளநீர், பன்னீர், தேன், பஞ்சாமிர்தம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்காரங்கள் , துளசி மாலைகளால் அலங்கரித்து, வண்ண பூக்களால் அர்ச்சனைகள் செய்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபராதானையும் நடைபெற்றது.



ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ பூத நாராயண பெருமாளை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்கள் துளசி தீர்த்தம், குங்குமம், ஜடாரி வைத்து, சர்க்கரைப் பொங்கல் பிரசாதம் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## ஜகாத் வழங்குதல் இஃப்தார் நிகழ்ச்சி




**சீர்காழி, மார்ச் 21:**

சீர்காழி தாலுக்கா சுன்னத் வல் ஜமாஅத் கூட்டமைப்பு மற்றும் பைத்துல்மால் அறக்கட்டளை சார்பில் ஜகாத் வழங்குதல் இஃப்தார் நிகழ்ச்சி மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் நடைப்பெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு சீர்காழி தாலுக்கா சுன்னத் வல் ஜமாஅத் கூட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர், மாவட்ட தன்னார்வநுகர்வோர் பாதுகாப்பு கண்காணிப்பாளர் முஹம்மது யூசுப் தலைமை வகித்தார். 50 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டது.

## இந்தோ அமெரிக்கன் சி.பி.எஸ்.இ., பள்ளியில் மழலையர்களுக்கு பட்டமளிப்பு விழா !




**செய்யாறு, மார்ச் 21:**

செய்யாறில் உள்ள இந்தோ அமெரிக்கன் சி.பி.எஸ்.இ., பள்ளியில் மழலையர்களுக்கான பட்டமளிப்பு மற்றும் பரிசளிப்பு விழா வெகு விமரிசையாக நடந்தது. பெற்றோர்கள் ஆர்வமாக கலந்து கொண்டு தங்களது பிள்ளைகள் பட்டம் பெறுவதை கண்டுகளித்தனர். செய்யாறில் பிரசித்தி பெற்ற இந்தோ அமெரிக்கன் பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் பயின்று வரும் மழலையர்களுக்கான பட்டமளிப்பு விழா நடந்தது.

விழாவிற்கு பள்ளியின் டாக்டர் இராமதாஸ், அப்பாய் அரங்கில் அறக்கட்டளையின் துணைத் தலைவர் இராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். மெட்ரிக் பள்ளியின் முதல்வர் அ.ப.சையத் அப்துல் இலியாஸ் முன்னிலை வகித்தார். மழலை கோ.நி.சகானா அனைவரையும் வரவேற்றார்.

சிறப்பு விருந்தினர் இந்தோ அமெரிக்கன் கல்லூரியின் முதல்வர் முனைவர். ஜெ.எழிலரசி மழலையர்களுக்கு பட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

விழாவில் சி.பி.எஸ்.இ., பள்ளியின் முதல்வர் சுதா கார்த்திக், மெட்ரிக் பள்ளியின் துணை முதல்வர் க.கோவேந்தன், ஆசிரியைகள் எம்.அகல்யா, பி.திவ்யா ஆகியோர் பட்டம் பெற்ற மழலையர்களை வாழ்த்தி பேசினர்.

ஆசிரியர்கள் சக்திவேல், ஐமுனா, ரம்யா, திவ்யலட்சுமி, சரண்யா ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். நிகழ்ச்சியை நிவேதா கோகுல் தொகுத்து வழங்கினார். மாணவ - மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. பெற்றோர்களும் கலந்து கொண்டு விழாவை கண்டுகளித்தனர். மழலை வி.தியான் நன்றி கூறினார்.

## 7 தலைமுறைகளாக பாதுகாக்கப்படும் மிகச்சிறிய குர்-ஆன் - கல்லூரி பேராசிரியர்கள் ஆய்வு

**குத்தாலம், மார்ச் 21:**

மயிலாடுதுறை மாவட்டம், நீடூரில் அமீனுல்லா (வயது 65) என்பவர் வசித்து வருகிறார். இவரது வீட்டில் மிகவும் பழமையான 6 ஆயிரத்து 676 அத்தியாயங்களை கொண்ட குர்-ஆன் ஒன்று உள்ளது.



சுமார் 19 பக்கத்தில் அரபி மொழியில் எழுதப்பட்ட மிகவும் சிறிய அளவிலான வரலாற்று சிறப்புமிக்க குர்-ஆன் ஒன்று 1.5 இன்ச் அகலம், 1.75 இன்ச் நீளம் உள்ள மெட்டல் பாக்ஸில் வைத்து 7 தலைமுறைகளாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்த குர்-ஆன் 17-ம் நூற்றாண்டை சேர்ந்ததாக இருக்கலாம் என இந்திய தொல்லியல் துறை சான்று வழங்கி உள்ளது. இதனை மயிலாடுதுறை மன்னம்பந்தல் ஏ.வி.சி. கல்லூரி இயற்பியல் துறை பேராசிரியர் ராமலிங்கம் தலைமையில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, இயற்பியல் மற்றும் வேதியியல் துறை பேராசிரியர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

மெட்டல் பாக்ஸில் உள்ள குர்-ஆனை, காரைக்குடி சிக்கிரி, பெங்களூரு ஐ.ஐ.எஸ்.சி, ஐ.ஐ.டி, என்.ஐ.டி., பி.எஸ்.ஜி காலேஜ் ஆப் சைன்ஸ் அண்ட் டெக்னாலஜி போன்ற ஆய்வகங்களுக்கு அனுப்பி ஆய்வு செய்தததில், நுண் பிணைப்பு எழுத்து வடிவில் இந்த குர்-ஆன் எழுதப்பட்டு உள்ளது.

இந்த குர்-ஆன் வைக்கப் பட்டுள்ள மெட்டல் பாக்ஸ் 2 ஆயிரத்து 600 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையை தாங்கக்கூடிய வகையில் 78 வகையான உலோகங்களால் உருவாக்கப்பட்டது கண்டறியப் பட்டு உள்ளது. விண்கலன் வளி மண்டலத்தை கடப்பதற்கு, அதன் மீது செராமிக் தொழில்நுட்பத்தில் முலாம்பூசி பயன்படுத்துகிறார்கள்.

செராமிக் அதிக எடை கொண்டதாக இருப்பதால் விண்கலனுக்கு அதிக எரிபொருள் தேவைப்படுகிறது. அதிக வெப்ப நிலையை தாங்கக்கூடிய இந்த உலோக பெட்டி உருவாக்கப்பட்ட தொழில்நுட்பத்தை நாம் பயன்படுத்தினால் எடை குறைவான விண்கலத்தை தயார் செய்ய முடியும்.

78 வகையான உலோகங்களை எப்படி கலந்தார்கள்? என்ற தொழில்நுட்பத்தை ஆய்வு செய்ய வேண்டும். எதிர்காலத்தில் இதனை பற்றி பல மாணவர்கள் ஆராய்ச்சி மேற்கொள்ள இருப்பதால், அதை கண்டுபிடிப்பதற்கான வாய்ப்புகள் நிறைய உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## கமல்ஹாசனுக்கு தெலங்கானா அரசின் உயரிய விருது!

'தெலங்கானா கட்டர் திரைப்பட விருதுகள் 2025' விழா ஹைதராபாத்தில் நேற்று (மார்ச் 19) நடைபெற்றது. இந்த நிகழ்வில் தெலங்கானா அரசின் உயரிய விருதான 'பைடி ஜெய்ராஜ்' விருது நடிகர் கமல்ஹாசனுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.




இந்தியத் திரையுலகில் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக பங்காற்றி வரும் கமல்ஹாசனின் பங்களிப்பை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.

சினிமா முன்னோடி பைடி ஜெய்ராஜ் பெயரில் அமைந்த இந்த விருது, 'சாகர சங்கமம்' மற்றும் 'சுவாதி முத்யம்' போன்ற காலத்தால் அழியாத திரைக்காவியங்கள் மூலம் தெலுங்கு சினிமாவிற்கு கமல்ஹாசன் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அமைந்தது.

தெலங்கானா முதலமைச்சர் அனுமுலா ரேவந்த் ரெட்டி , இந்த விருதை கமல்ஹாசனுக்கு வழங்கினார். இன்று 'பான்-இந்தியா சினிமா' என கொண்டாடப்படும் வேளையில், பல மொழிகளில் கமல்ஹாசன் ஆரம்ப காலத்திலேயே செய்த சாதனைகளே அதற்கு உண்மையான அடித்தளமாக உள்ளது.

புதுமையான கதைக் களங்கள், மாறுபட்ட கதாபாத்திரங்கள் மற்றும் புதுப்புது தொழில்நுட்பங்கள் என கமல்ஹாசன் இந்திய சினிமாவை தொடர்ந்து செதுக்கி வருவதையும் இந்த விருது கௌரவித்தது.

## வாடிப்பட்டி பேரூராட்சியில் வாக்காளர் உறுதிமொழி கையெழுத்து இயக்கம்







**வாடிப்பட்டி, மார்ச்.21:**

மதுரை மாவட்டம் ஸவாடிப்பட்டி பேரூராட்சி அலுவலகம் முன்பாக வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கையெழுத்து இயக்கம், உறுதிமொழி,கோலம் வரையப்பட்டது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் மணிகண்டன் தலைமை தாங்கிதொடக்கி வைத்தார்.

இதில் தலைமை எழுத்தர் தனலட்சுமி, இளநிலை உதவியாளர் கார்த்திக் சுகாதார பணி மேற்பார்வையாளர் சுரேஷ் உட்பட அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## மேல் ஒலக்கூர் பசுமலை சுப்பரமணிய சுவாமிகள் ஆலய பிரமோற்சவ விழா அழைப்பு





**விழுப்புரம், மார்ச் 21:**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் மேல் ஒலக்கூர் குன்றுகள் தோறும் வீற்றிருந்து பக்கர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப்பெருமான் மகிமை நிறைந்ததும் சித்தர்களும் நானிகளும் வணங்கும் புண்ணிய திருத்தலம் பசுமலை என்று அழைக்கப்படும் கோகிரி சுப்பரமணியசுவாமிகள் திருக்கோவில் பிரமோற்சவ விழா வருகின்ற பங்குனி மாதம் 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் அன்றுமுதல் தொடங்கி 29.03.2026 நாயிற்றுகிழமை திருக்கல்யாணம் நிகழ்ச்சியும் அதனைத்தொடர்ந்து 30.03.2026 திங்கட்கிழமை மாலை திருத்தேரோட்டமும் பதினொன்று நாட்கள் வெகுவிமர்சையாக நடைபெற உள்ளது என்று ஆதின பரம்பரை அறங்காவலர்கள் சுப்பரமணியசோமயாஜுலு, ராம்குமார் சோமயாஜுலு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகரம் ராமதாஸ்
செய்தியாளர்




## தேர்தல் நடத்தை விதிமுறையால் செஞ்சி வாரச்சந்தையில் ஆடுகள் விற்பனை மந்தம்

**செஞ்சி, மார்ச் 21:**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை வாரச்சந்தை நடைபெற்று வரும் நிலையில் சந்தையில் ஆடுகள் மற்றும் மாடுகளின் விற்பனை அதிக அளவு நடைபெறும். குறிப்பாக பண்டிகை காலங்களில் வழக்கத்திற்கு மாறாக ரூ.4 கோடி முதல் 6 கோடி வரை ஒரே நாளில் விற்பனை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நாளை ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில் இன்று நடைபெற்ற வாரச்சந்தையில் ஆடுகளின் விற்பனை அதிக அளவு நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது.



ஆனால் தற்போது தேர்தல் கட்டுப்பாட்டு விதிகள் அதிகளவில் உள்ளதால் வெளி மாவட்ட வியாபாரிகள் அதிகளவு பணத்தை கொண்டு வந்து ஆடுகளை வாங்க முன்வராததால் ஆட்டுச்சந்தை விற்பனையானது மந்தமாக காணப்பட்டது.

வழக்கமாக பண்டிகை காலங்களில் ரூ.4 முதல் 6 கோடி வரை விற்பனையாகும் ஆட்டுச்சந்தையில் தற்போது ரூ.1 கோடி அளவுக்கு கூட விற்பனையாகாத சூழல் ஏற்பட்டது. இதனால் விவசாயிகளும் கொண்டு வந்த ஆடுகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்து செல்லும் சூழல் ஏற்பட்டது. சில வியாபாரிகள் ஜிபே மூலம் பணம் தருவதாக கூறியும், அதன் விவரம் தெரியாத விவசாயிகள் ஆடுகளை விற்காமல் திருப்பி ஓட்டி சென்றது குறிப்பிடத்தக்கது.

## வேலூர் மாநகராட்சி மேயர் கார் பறிமுதல்- தி.மு.க. கவுன்சிலர் உள்பட3 பேர் மீது வழக்கு பதிவு

**வேலூர், மார்ச் 21:**

வேலூர் கலெக்டர் அலுவலகம் அருகே உள்ள அம்மா உணவகம் பின்புறம் தி.மு.க. சார்பில் வேலூர் மேயர் சுஜாதா ஆனந்தகுமார் தலைமையில் இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுவதாக தகவல் கிடைத்தது.

இது பற்றி தகவல் அறிந்த அ.தி.மு.க மற்றும் பா.ஜ.க. கட்சியினர் விளையாட்டு உபகரணங்கள் வழங்க உள்ள பகுதிக்கு திரண்டு சென்றனர்.

அவர்கள் விளையாட்டு உபகரணங்கள் வழங்க கூடாது என்று கூறினர். மேலும் இது பற்றி வேலூர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும் உதவி கலெக்டருமான செந்தில்குமாரிடம் புகார் தெரிவித்தனர்.அவர் தேர்தல் நிலை குழு அலுவலர் சதீஷ் வேலன் தலைமையில் விரைந்து வந்தனர். விளையாட்டு உபகரணங்கள் வழங்க கூடாது என்று எச்சரித்த னர். உடனே காரில் வந்த மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் கவுன்சிலர் சதீஷ்குமார் ஆகியோர் காரை நிறுத்தாமல் சென்று விட்டனர்.



இதுகுறித்து வேலூர் மாநகர அ.தி.மு.க செயலாளர் அப்பு கலெக்டர் அலுவலகத்தில் நடந்த அனைத்து கட்சி கூட்டத்தில் புகார் தெரிவித்தார்.

தி.மு.க.வினர் தேர்தல் விதிமுறையை கடைப்பிடிக்காமல் தற்போது விளையாட்டு உபகரணங்கள் வழங்குவது ஏற்றுக் கொள்ள முடியாது. 15-ந்தேதிக்கு முன்பு வழங்கியிருக்கலாம் என்று குற்றஞ்சாட்டினார். மேலும் இது தொடர்பான வீடியோ காட்சிகளை வெளியிட்டார்.

இந்த நிலையில் தேர்தல் நிலைக்குழு அலுவலர் சதீஷ்வேலன் வேலூர் சத்துவாச்சாரி போலீசில் புகார் செய்தார். அதில் தேர்தல் விதிமுறையை மீறி விளையாட்டு உபகரணங்கள் வழங்க காரில் மேயர் சுஜாதா ஆனந்தகுமார் வந்திருந்தார். அந்தக் காரை நிறுத்தி நாங்கள் சோதனை செய்ய முயன்ற போது அந்தக் கார் நிற்காமல் சென்று விட்டது என புகார் செய்தார்.இதைத்தொடர்ந்து சத்துவாச்சாரி போலீசார் வேலூர் மாநகராட்சி மேயரின் காரை பறிமுதல் செய்தனர். அதனை சத்துவாச்சாரி போலீஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இது தொடர்பாக மேயர் சுஜாதா ஆனந்தகுமார், 27-வது வார்டு கவுன்சிலர் சதீஷ்குமார், கார் டிரைவர் கோபிநாத் உட்பட 3 பேர் மீது வழக்கு பதிவு செய்தனர். இந்த சம்பவம் வேலூரில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# சுற்றுலா: சின்ன பட்ஜெட்டில் மேகமலை கோடை சுற்றுலா செல்லலாம்!



சுற்றுலா செல்ல வேண்டும் என்று பிளான் பண்ணினால் முதலில் மணி பர்ஸ் காலியாகிவிடுமே என்ற பயம் தான் நமக்கு வரும். ஏனென்றால் குடும்பத்துடன் சுற்றுலா செல்ல வேண்டும் என்றால் ஒரு குறிப்பிட்ட தொகையை நாம் பெரிய பட்ஜெட்டாக எடுத்து வைக்க வேண்டும். ஆனால் மேகமலை சென்றால் குளுகுளுவென இருக்கும் சூழ்நிலையில் உங்கள் பணமும் குறைவாகவே செலவாகும் கம்மி பட்ஜெட் சுற்றுலாத்தலமாகும். அதன் சிறப்புகளைப் பற்றி இப்பதிவில் பார்க்கலாம்.

மேகமலை தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் ஒரு சிறிய பிரமிக்க வைக்கும் பகுதி. தேனி மாவட்டம் சின்னமனூரிலிருந்து 45 கிலோ மீட்டர் மலைப்பாதை வழியாகச் சென்றால் மேகமலையை அடைந்து விடலாம். கடல் மட்டத்திலிருந்து சுமார் 1500 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது அழகான மேகமலை.

இங்கு தாவரங்கள், வனவிலங்குகள், நூற்றுக்கும் மேற்பட்ட பறவை இனங்கள் உள்ளன. காணும் திசையெல்லாம் பசுமையான காட்சிகள், நீர்வீழ்ச்சிகள், மலைகள், இதமான சூழல் என மேகமலை நம்மை கட்டி போடுகிறது. ஊட்டி, கொடைக்கானலுக்கு மற்றாக கம்மி செலவில் மலை பகுதிக்கு டூர் போக விரும்புபவர்களுக்கு மேகமலை வரபிரசாதம் என சொல்லலாம்.

இயற்கையின் அழகை கண்டு களிக்கவும், அமைதியாக நேரத்தை கழிக்கவும் ஏற்ற இடம். இங்கு காப்பி, தேயிலை அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தேயிலைத் தோட்டங்கள், பசுமையான மலைத்தொடர்களை எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

18 ஹேர்பின் வளைவுகள் வழியாகச் சென்றாலும், இருபுறமும் உள்ள தேயிலை மற்றும் ஏலக்காய் பண்ணைகள் வழியாகச் சென்றாலும், மேகமலைக்கு வாகனம் ஓட்டுவது சலிப்பை தராது. தேனிக்கு வரும் சுற்றுலா பயணிகளின் முதல் தேர்வாக மேகமலை இருக்கும். அதிகமான வெயிலும் அதிகமான குளிரும் இல்லாமல் இதமான சூழல் எப்போதும் காணப்படும். புலிகள் சரணாலயத்துக்குட்பட்ட பகுதி என்பதால் இங்கே கட்டுப்பாடுகள் அதிகம் இருக்கும். காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டுமே மேகமலைக்கு செல்ல முடியும்.

மணலாறு அணை மேகமலை பேருந்து நிலையத்திலிருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இந்த அணையின் மூலம் தேனி மாவட்டத்தின் கம்பம் பள்ளத்தாக்குகள் மற்றும் குடியிருப்புகளை மேலிருந்து பார்க்க முடியும். மூடுபனி படர்ந்த மலை சிகரங்கள், பசுமையான பள்ளத்தாக்குகள, கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பரந்துகிடக்கும் வனப்பகுதி நல்ல அனுபவத்தை தரும்.

மேகமலைப் பேருந்து நிலையத்திலிருந்து 11 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது மேகமலை காட்சி முனை. அமைதியான சூழல் மற்றும் பசுமையான தாவரங்களால் சூழப்பட்ட இந்த இடம் பிரமிப்பை ஏற்படுத்தும். சமவெளிகள், ஏரிகள், பெரிய தேயிலை தோட்டங்கள் மற்றும் மூடுபனி மூடிய மலைகளின் காட்சிகளை அனுபவிக்க முடியும்.

மேகமலை வனவிலங்கு சரணாலயம் பாதுகாக்கப்பட்ட காப்பகமாகும். 63,000 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இந்த சரணாலயம் வனவிலங்கு பிரியர்களுக்கு சொர்க்கமாக உள்ளது. இது கேரளாவின் பெரியார் புலிகள் சரணாலயத்திற்கு ஒரு பாதுகாப்பு மண்டலமாக செயல்படுகிறது.

இரவங்கலாறு அணை மேகமலை பேருந்து நிலையத்திலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள நீர்த்தேக்கம். இங்கு ஆண்டு முழுவதும் தண்ணீர் தேங்கி இருக்கும். இந்த அணை அருகில் இரவங்கலாறு அருவி உள்ளது. இரவங்கலாறு பகுதியில் உள்ள ஏரியில் வன விலங்குகள் நீர் அருந்தி செல்லும் அழகை ரசிக்கலாம். இரவங்கலாறு அணை மேகமலை பேருந்து நிலையத்திலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள நீர்த்தேக்கம். இங்கு ஆண்டு முழுவதும் தண்ணீர் தேங்கி இருக்கும். இந்த அணை அருகில் இரவங்கலாறு அருவி உள்ளது. இரவங்கலாறு பகுதியில் உள்ள ஏரியில் வன விலங்குகள் நீர் அருந்தி செல்லும் அழகை ரசிக்கலாம்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### என்எல்சி நிறுவனத்தில் சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு!

மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான என்எல்சி நிறுவனத்தில் நிரப்பப்பட உள்ள 21 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியானவர்களிடம் இருந்து வரும் ஏப்ரல் 2 ஆம் தேதிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி மற்றும் இதர விவரங்கள் குறித்து பார்ப்போம்.

பணி: Pharmacist Gr.B
காலியிடங்கள்: 15
சம்பளம்: மாதம் ரூ.22,000 - 90,000

பணி: Ophthalmic Technician
காலியிடங்கள்: 2
சம்பளம்: மாதம் ரூ. 23,000 - 95,000

பணி: Theatre Assistant
காலியிடங்கள்: 2
சம்பளம்: மாதம் ரூ. 20,000 - 81,000

பணி: Audiologist and Speech Therapist
காலியிடங்கள்: 1
சம்பளம்: மாதம் ரூ.24,000 - 1,00,000

பணி: Dental Mechanic
காலியிடங்கள்: 1
சம்பளம்: மாதம் ரூ.22,000 - 90,000

தகுதி: ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியான தகுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளதால் அதிகாரப்பூர்வ அறிவிப்பை பார்த்து தெரிந்துகொள்ளவும்.

வயதுவரம்பு: 1.2.2026 தேதியின்படி 18 முதல் 30-க்குள் இருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: எழுத்துத் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் மருத்துவ பரிசோதனை தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பக் கட்டணம்: எஸ்சி, எஸ்டி, முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத்திறனாளி பிரிவினர் ரூ.236, இதர அனைத்து பிரிவினர் ரூ.486 செலுத்த வேண்டும். கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: என்ற இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 2.4.2026

## ஜோலார்பேட்டை அருகே சிக்னல் அமைக்கும் பணி: 24-ந் தேதி முக்கிய ரெயில்கள் ரத்து

**சென்னை, மார்ச் 21:**

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஜோலார்பேட்டை- தொட்டம்பட்டி இடையே தானியங்கி சிக்னல் அமைக்கும் பணி வரும் 24-ந் தேதி (செவ்வாய்கிழமை) நடைபெற உள்ளது.

இதனால் அரக்கோணம்- சேலம் மெமு எக்ஸ்பிரஸ் ரெயில் அன்றைய தினம் (24-ந் தேதி) இருமார்க்கத்திலும் முழுவதுமாக ரத்து செய்யப்படுகிறது.

இதேபோல், கோவை- எம்.ஜி.ஆர். சென்னை சென்டிரல் இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் ரெயிலும் 24-ந் தேதி இருமார்க்கத்திலும் ரத்து செய்யப்படுகிறது.

மேலும், ஈரோடு- ஜோலார்பேட்டை பயணிகள் ரெயிலும் இருமார்க்கத்திலும் முழுவதுமாக ரத்து செய்யப்படுகிறது.

அதேபோல், கோவை- பெங்களூரு உதய் எக்ஸ்பிரஸ், நாகர்கோவில்- மும்பை சி.எஸ்.டி. எக்ஸ்பிரஸ், பெங்களூரு- கோவை உதய் எக்ஸ்பிரஸ் ஆகியவை 24-ந் தேதி மாற்றுப்பாதையில் இயக்கப்படுகின்றன.

மேலும், எம்.ஜி.ஆர். சென்னை சென்டிரலில் இருந்து கோவை செல்லும் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் வரும் 24-ந் தேதி மதியம் 2.15 மணிக்கு புறப்படுவதற்கு பதிலாக, மாலை 4.15 மணிக்கு புறப்படும்.

இதேபோல், கோவையில் இருந்து 24-ந் தேதி பகல் 3.15 மணிக்கு எம்.ஜி.ஆர். சென்னை சென்டிரல் நோக்கி புறப்படும் கோவை எக்ஸ்பிரஸ் ரெயில் 2 மணி நேரம் தாமதமாக மாலை 5.15 மணிக்கு புறப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தேர்தல் நடத்தை விதிகளை அமல்படுத்த சென்னை விமான நிலையத்தில் அதிகாரிகள் நியமனம்

**சென்னை, மார்ச் 21:**

: சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நடத்தை விதிகளை அமல்படுத்தும் விதமாக சென்னை விமான நிலையத்தில் சிறப்பு அதிகாரிகளை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பு கடந்த மார்ச் 15-ம் தேதி வெளியான நிலையில், தமிழகம் முழுவதும், தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்து உள்ளன.

2106 பறக்கும் படைகள், நிலை கண்காணிப்பு படைகள் சோதனையில் ஈடுபட்டு வருகின்றன. மேலும், விமான நிலையங்களையும் கண்காணிக்க தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

அதன்படி, சென்னை சர்வதேச விமான நிலையம், சென்னை விமான நிலைய கார்கோ பகுதி ஆகியவற்றை கண்காணிக்க, சிறப்பு அதிகாரிகளை இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

சென்னை சர்வதேச விமான நிலையத்தின் வருகை, புறப்பாடு பகுதிகளில் சுங்கச் சோதனைகளை கண்காணிக்க, சுங்கத்துறை இணை ஆணையர் அந்தஸ்தில், சிறப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல், சென்னை விமான நிலைய கார்கோ பகுதிகளில், சரக்குகள் ஏற்றுமதி, இறக்குமதி பகுதிகளில் சுங்கச்சோதனை பிரிவுகளில் கண்காணிப்பதற்காக இணை ஆணையர் அந்தஸ்தில் மற்றொரு சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். இவர்கள் சென்னை விமான நிலையத்தில் பயணிகள், பார்சல்களை தீவிரமாக கண்காணித்து, சந்தேகத்துக்கிடமான தங்கம், வெள்ளி, மின்சாதன பொருட்கள், போதைப் பொருட்கள், போதை மாத்திரைகள், கணக்கில் வராத ரொக்கம் போன்றவை கள் வந்தால், அவற்றை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ரயில் சேவையில் மாற்றம்! மேலும் 10 ரயில்கள் தாம்பரத்திலிருந்து இயக்கப்படும்!

**சென்னை, மார்ச் 21:**



சென்னை எழும்பூரில் மறுசீரமைப்புப் பணிகள் காரணமாக தென் மாவட்டங்களுங்கு இயக்கப்படும் மேலும் சில ரயில்கள் ஏப்ரல் 6 வரை எழும்பூருக்குப் பதிலாக தாம்பரத்தில் இருந்து இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

பயணிகள் தாங்கள் பயணிக்கும் ரயில் குறித்த விவரங்களை, பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பு NTES செயலில் பார்த்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சென்னை எழும்பூர் - திருச்சி சோழன் எக்ஸ்பிரஸ் ரயில் இரவு 8 மணிக்குப் பதிலாக வருகிற ஏப்ரல் 16 ஆம் தேதி வரை இரவு 10.15 மணிக்குப் புறப்படும்.

எழும்பூருக்குப் பதிலாக தாம்பரம்!

ஏற்கெனவே தென் மாவட்ட ரயில்கள் பலவும் சென்னை எழும்பூருக்குப் பதிலாக தாம்பரத்தில் இருந்து புறப்படும் நிலையில் மேலும் சில ரயில்களும் தாம்பரத்தில் இருந்து புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 6 வரை கீழ்குறிப்பிட்ட ரயில்கள் தாம்பரத்தில் இருந்து புறப்படும்.

சென்னை எழும்பூர் - ராமேஸ்வரம் சேது அதிவிரைவு எக்ஸ்பிரஸ் ரயில் (22661) எழும்பூருக்குப் பதிலாக தாம்பரத்தில் இருந்து மாலை 6.22க்குப் புறப்படும்.

அதேபோல , சென்னை எழும்பூர் - செங்கோட்டை பொதிகை அதிவிரைவு எக்ஸ்பிரஸ் ரயில் (12661) இரவு 8.02க்கு தாம்பரத்தில் இருந்து புறப்படும்.

சென்னை எழும்பூர் - கொல்லம் அனந்தபுரி அதிவிரைவு எக்ஸ்பிரஸ் ரயில் (20635) தாம்பரத்தில் இருந்து இரவு 8.17க்கும்

சென்னை எழும்பூர் - ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் ரயில் (16751) தாம்பரத்தில் இருந்து இரவு 9.02க்கும்

சென்னை எழும்பூர் - தஞ்சாவூர் உழவன் எக்ஸ்பிரஸ் (16865) தாம்பரம் ரயில் நிலையத்தில் இருந்து இரவு 10.57க்குப் புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மாவட்டங்களில் இருந்து சென்னை வரும் ரயில்கள்

தென்மாவட்டங்களில் இருந்து சென்னை வரும் சில ரயில்கள் எழும்பூருக்கு பதிலாக தம்பரத்திலேயே நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர்- சென்னை எழும்பூர் உழவன் எக்ஸ்பிரஸ் ரயில் (16866),

கொல்லம்- சென்னை எழும்பூர் அனந்தபுரி அதிவிரைவு எக்ஸ்பிரஸ் ரயில் (20636),

திருநெல்வேலி- சென்னை எழும்பூர் நெல்லை அதிவிரைவு எக்ஸ்பிரஸ் ரயில் (12632),

ராமேஸ்வரம் - சென்னை எழும்பூர் சேது அதிவிரைவு எக்ஸ்பிரஸ் ரயில் (22662),

ராமேஸ்வரம்- சென்னை எழும்பூர் எக்ஸ்பிரஸ் ரயில் (16752) ஆகிய ரயில்கள் தாம்பரம் வரை மட்டுமே இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

## ஏப்ரல் 1-ம் தேதி தென்காசி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை

**தென்காசி, மார்ச் 21:**

பங்குனி உத்திர திருவிழாவைக் கொண்டாடும் வகையில் வரும் ஏப்ரல் 1-ம் தேதி தென்காசி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவித்து மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த உள்ளூர் விடுமுறை தினத்தில் தென்காசி மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள், அரசு அலுவலகங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள் ஆகியவை செயல்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அவசர காலப் பணிகளுக்காகக் குறைந்த அளவிலான பணியாளர்களுடன் முக்கிய அரசு அலுவலகங்கள் இயங்கும்.

மேலும், ஏற்கனவே திட்டமிடப்பட்ட பொதுத்தேர்வுகள் மற்றும் அரசுத் தேர்வுகளுக்கு இந்த விடுமுறை பொருந்தாது. தேர்தல் பணியில் உள்ள அரசு ஊழியர்களுக்கும் இது பொருந்தாது. இந்த உள்ளூர் விடுமுறையை ஈடுசெய்யும் வகையில், ஏப்ரல் 11ம் தேதி (சனிக்கிழமை) அன்று பணி நாளாக அறிவித்து மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக பங்குனி உத்திர திருவிழா விமரிசையாகக் கொண்டாடும் வகையில் நெல்லை மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிப்பு வெளியாகி இருந்தது.

## சேலத்தில் பயங்கர விபத்து... அரசுப் பேருந்து மோதி 7 பேர் உயிரிழப்பு



**சேலம், மார்ச் 21:**

சேலம் மாவட்டம் அரியானூர் பகுதியில் நிகழ்ந்த பயங்கர விபத்தில் அரசுப் பேருந்து மோதி 7 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக கோவையில் இருந்து சேலம் நோக்கி அரசுப் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. இந்த நிலையில் அரியானூர் பகுதி அருகே வந்தபோது திடீரென கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, சாலையோரம் சென்று கொண்டிருந்த பைக் மற்றும் டெம்போ மீது மோதி சாலையின் மறுபக்கம் சென்றது.

இந்த கோர விபத்தில் பைக்கில் சென்ற தாய், மகன் மற்றும் டெம்போவில் பயணித்த 11 மாதக் குழந்தை, 5 வயது சிறுமி உள்ளிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் என 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். விபத்து குறித்து அறிந்த போலீசார், சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# சத்தியமங்கலம் புலிகள் சரணாலயத்தில் சட்டவிரோதமாக செயல்பட்ட 42 ரிசார்ட்கள் மூடல்

**சென்னை, மார்ச் 21:**

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் சரணாலயத்தில் தேசிய வன விலங்குகள் வாரியம், மலைப்பகுதி பாதுகாப்பு ஆணையம் ஆகியவற்றின் ஒப்புதல் பெறாமல் சட்டவிரோதமாகச் செயல்படும் ரிசார்ட்களை மூட நடவடிக்கை எடுக்கக் கோரி கோவையைச் சேர்ந்த ஒலி விழிப்புணர்வு இயக்கத்தின் நிறுவனரான கற்பகம், சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த 2022-ம் ஆண்டு வழக்கு தொடர்ந்திருந்தார்.




அதில், "இந்த புலிகள் சரணாலய பகுதியில் உள்ள கருவண்ணராயர் கோயில் திருவிழா ஆண்டு தோறும் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் நடைபெறும். இவ்விழாவில் சுமார் 50 ஆயிரம் பேர் வரை பங்கேற்பர். திருவிழாவுக்கு வரும் வாகனங்கள் எழுப்பும் ஒலிமாசு, வனவிலங்குகளுக்கும், வனத்தின் சுற்றுச்சூழலுக்கும் கடும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே, இந்த திருவிழாவுக்கு ஒலி மாசு கட்டுப்பாடுகளைவிதிப்பதுடன், அப்பகுதியில் சட்டவிரோதமாகச் செயல்படும் ரிசார்ட்களை மூடவும் உத்தரவிட வேண்டும்" எனக் கோரியிருந்தார். இந்த வழக்கை ஏற்கெனவே விசாரித்த உயர் நீதிமன்றம், சத்தியமங்கலம் புலிகள் சரணாலயத்தில் சட்டவிரோதமாகச் செயல்படும் ரிசார்ட்களை மூட வேண்டும் எனவும், வனப்பகுதியில் ஒலி மாசைக் கட்டுப்படுத்த நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை அமல்படுத்தியது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்றும் தமிழக அரசுக்கு உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில், இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, வனத்துறை தரப்பில் ஆஜரான அரசு சிறப்பு வழக்கறிஞர் டி.சீனிவாசன், "சத்தியமங்கலம் புலிகள் சரணாலயத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பகுதிகளில் உள்ள 53 ரிசார்ட்கள் மற்றும் பண்ணை வீடுகளில் சோதனை நடத்தப்பட்டது. இதில் 11 ரிசார்ட்கள் உரிய அனுமதி பெற்று செயல்படுகின்றன. 42 ரிசார்ட்கள் எவ்வித அனுமதியுமின்றி சட்டவிரோதமாகச் செயல்படுவது தெரியவந்தது. அதையடுத்து, அந்த 42 ரிசார்ட்களும் மூடி சீல் வைக்கப்பட்டுள்ளது" எனக் கூறி அறிக்கை தாக்கல் செய்தார்.

அதற்கு மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எஸ்.பி. சொக்கலிங்கம், அப்பகுதிகளில் இன்னும் பல ரிசார்ட்கள் சட்டவிரோதமாகச் செயல்பட்டு வருகின்றன அந்த ரிசார்ட்கள் மீது இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை.

அதுகுறித்த விவரங்களை மனுவாக தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்தார். அதற்கு வனத்துறை தரப்பில், மனுதாரர் குறிப்பிடும் ரிசார்ட்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, என தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து நீதிபதிகள், இதுதொடர்பாக புதிதாக அறிக்கை தாக்கல் செய்ய வனத்துறைக்கு 3 வார காலம் அவகாசம் வழங்கினர்.

அதற்கு நீதிபதிகள், ரிசார்ட் உரிமையாளர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீட்டு மனுக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசாரிக்கலாம் எனக்கூறி இந்த வழக்கு விசாரணையை ஏப்.7-க்கு தள்ளிவைத்துள்ளனர்.

# க்ரைம் கார்னர்

## மூதாட்டிகளிடம் நூதன முறையில் தொடர்ச்சியாக நகைகளை திருடிய நபர் கைது

**சென்னை, மார்ச் 21:**

மூதாட்டிகளிடம் தொடர்ச்சியாக நூதன முறையில் நகை திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் கைது செய்யப்பட்டார். சென்னை சூளை, ஆண்டியப்பன் நாயக்கன் தெருவைச் சேர்ந்தவர் மூதாட்டி காளியம்மாள் (76). கடந்த 17-ம் தேதி காலை சூளை, வி.வி.கோவில் அருகே உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு மாத்திரைகள் வாங்க சென்று கொண்டிருந்தார். அப்போது, அங்கு வந்த 50 வயதுடைய ஆண் ஒருவர், காளியம்மாவிடம் நலம் விசாரித்து, இது ரமலான் மாதம் என்பதால் ஏழை மக்களுக்கு தொழில் அதிபர் ஒருவர் நகை மற்றும் பணம் கொடுக்கிறார் என நம்பிக்கையுடன் பேச்சு கொடுத்தார்.

இதை உண்மை என நம்பிய மூதாட்டி, தன்னை அங்கு அழைத்துச் செல்லும்படி கூறினார். இதையடுத்து, அந்த நபர் சற்று தொலைவுக்கு அழைத்துச் சென்று, ஒரு பூட்டிய கடையின் அருகே அமர வைத்து, 'ஏழைகளுக்கு மட்டுமே தொழில் அதிபர் நகை, பணம் கொடுக்கிறார்.

எனவே, நீங்கள் இப்படி நகை அணிந்து வந்தால் அந்த உதவி கிடைக்காது. எனவே, உங்களது நகைகளை கழட்டி கொடுங்கள், நான் வைத்துக் கொள்கிறேன். நலத்திட்ட உதவி கிடைத்த உடன் உங்களது நகைகளை திரும்ப கொடுத்து விடுகிறேன் என தெரிவித்துள்ளார். இதை உண்மை என நம்பிய மூதாட்டி காளியம்மாள், தனது கம்மல் மற்றும் மோதிரத்தை கழற்றி கொடுத்தார். அதை பெற்றுக் கொண்ட அந்த நபர், இங்கேயே சிறிது நேரம் இருங்கள். அங்கு கூட்டம் எவ்வளவு உள்ளது என பார்த்து விட்டு வருகிறேன் என சென்றவர் மீண்டும் திரும்பி வரவில்லை. நீண்ட நேரமாகியும் அந்த நபர் வராததால், தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த காளியம்மாள் இது தொடர்பாக வேப்பேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.

இதில், நூதன முறையில் மூதாட்டியிடம் நகைகளை திருடியது சென்னை டி.பி சத்திரத்தைச் சேர்ந்த திருமலை (50) என்பது தெரிந்தது. தலைமறைவாக இருந்த அவரை போலீஸார் கைது செய்தனர். அவரிடமிருந்து 9 கிராம் எடை கொண்ட தங்க கம்மல் மீட்கப்பட்டது. விசாரணையில், திருமலை கடந்த 16-ம் தேதி இதே போல திருவிக நகர் பகுதியில் ஒரு மூதாட்டியை ஏமாற்றி தங்க நகை திருடிச் சென்றதும், இதே பாணியில் அவர் பல மூதாட்டிகளிடம் கைவரிசை காட்டி இருந்ததும் தெரிய வந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

## அரசு வேலை பெற்றுத் தருவதாக ரூ.10 லட்சம் மோசடி: பிரமுகர்கள் மீது வழக்கு

**சென்னை, மார்ச் 21:**

அரசு வேலை பெற்றுத் தருவதாக கூறி ரூ.10 லட்சம் மோசடி செய்ததாக சகோதரர்களான திமுக பிரமுகர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் மகன் சுந்தரமூர்த்தி (29). இவர் 2022 ஆண்டு பொறியியல் படிப்பு முடித்துவிட்டு வேலை தேடி வந்துள்ளார். அப்போது அவரது தந்தை ராஜேந்திரனுக்கு தெரிந்த நபர் மூலம் சென்னை ஆழ்வார் திருநகரை சேர்ந்த திமுக பிரமுகரான நசீர் அகமத் (35) என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது. பின்னர் நசீர் அகமத், ராஜேந்திரனிடம் தனது சகோதரர் பஷீர் அகமத் திமுகவில் முக்கிய பொறுப்பில் உள்ளதாகவும் அவருக்கு கட்சியில் மிகுந்த செல்வாக்கு இருப்பதால் உங்கள் மகனுக்கு அரசு வேலை வாங்கித் தருவதாகவும் தெரிவித்துள்ளார். அதுமட்டுமின்றி அரசு வேலை வாங்கித் தர ரூ.10 லட்சம் செலவாகும் எனக் கூறியுள்ளார்.

இதனை நம்பிய ராஜேந்திரன் தன் மகன் சுந்தரமூர்த்திக்காக ரூ.10 லட்சம் கொடுத்ததாக கூறப்படுகிறது. பணம் வாங்கிய பிறகு நசீர் மற்றும் பஷீர் இருவரும் கூறியதுபோல் வேலை வாங்கி கொடுக்கவில்லையாம். மேலும் பணத்தையும் திருப்பிக் கொடுக்கவில்லை எனக் கூறப்படுகிறது. இந்த விவகாரம் தொடர்பாக சுந்தரமூர்த்தி சில தினங்களுக்கு முன் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்தார். இதுகுறித்து விசாரணை நடத்த மதுரவாயல் போலீஸாருக்கு உத்தரவிடப்பட்டது. அதன்படி போலீஸார் திமுக பிரமுகர் பஷீர் அகமத் மற்றும் அவரது சகோதரர் நசீர் அகமத் இருவர் மீதும் மோசடி உள்ளிட்ட பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விளையாட்டு செய்திகள்

## 'ஏ' டிவிஷன் வாலிபால் லீக்கில் ஐஓபி, ஐசிஎஃப் அணிகள் வெற்றி

**சென்னை, மார்ச் 21:**

சென்னைமாவட்ட 'ஏ' டிவிஷன் வாலிபால் லீக் எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஐஓபி - டி.ஜி.வைஷ்ணவா அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் ஐஓபி 25-23, 25-20, 25-23 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது. மற்றொரு ஆட்டத்தில் ஐசிஎஃப் - அக்னி பிரண்ட்ஸ் அணிகள் மோதின. இதில் ஐசிஎஃப் 25-23, 25-20, 25-15 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது. லீக்கில் இன்று ஓய்வு நாளாகும். நாளை மாலை 5 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் ஐஓபி - ஐசிஎஃப் அணிளும், 6.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் டி.ஜி.வைஷ்ணவா - அக்னி பிரண்ட்ஸ் அணிகளும் மோதுகின்றன.

## நட்பு ரீதியிலான கால்பந்து போட்டியில் அர்ஜெண்டினா - கவுதமாலா மோதல்

**பியூனஸ் ஏர்ஸ், மார்ச் 21:**

நடப்பு சாம்பியனான அர்ஜெண்டினா கால்பந்து அணி வரும் 31-ம் தேதி கவுதமாலா அணிக்கு எதிராக நட்புரீதியிலான போட்டியில் விளையாட உள்ளது.

இந்த ஆட்டம் பியூனஸ் அயர்ஸில் உள்ள லா பொம்போனேராவில் நடைபெற உள்ளது. இந்நிலையில் இந்த போட்டிக்கான அர்ஜெண்டினா அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் நட்சத்திர வீரரான லயோனல் மெஸ்ஸி சேர்க்கப்பட்டுள்ளார். வரும் 27-ம் தேதி அர்ஜெண்டினா - ஸ்பெயின் அணிகள் நட்புரீதியிலான கால்பந்து போட்டியில் விளையாட இருந்தன. ஆனால் மத்திய கிழக்கு நாடுகளில் நிலவி வரும் பிரச்சினை காரணமாக இந்த ஆட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதற்கு மாற்றாகவே தற்போது கவுதமாலா அணிக்கு எதிராக அர்ஜெண்டினா அணி விளையாட உள்ளது. மெஸ்ஸி விளையாட உள்ள நிலையில் காயம் காரணமாக முன்கள வீரர் லவுதரா மார்டினெஸ், டிபன்டர் லிசாண்ட்ரோ மார்டினெஸ், நடுகள வீரர் ஜியோவானி லோ செல்சோ ஆகியோர் அணியில் சேர்க்கப்படவில்லை.

## 2028-ல் புவனேஷ்வரில் நடைபெறுகிறது உலக உள்ளரங்க தடகள விளையாட்டு

**புதுடெல்லி, மார்ச் 21:**

போலந்தின் டோருன் நகரில் நேற்று உலக தடகள கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. இதில், உலக உள்ளரங்க தடகள சாம்பியன்ஷிப் போட்டியை நடத்தும் உரிமை இந்தியாவுக்கு வழங்கப்பட்டது. இதன்படி, இந்தப் போட்டி ஒடிசா மாநிலம் புவனேஷ்வரில் நடைபெறவுள்ளது. 2025-ம் ஆண்டுக்கான உலக உள்ளரங்க தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் போலந்தில் இன்று (20-ம் தேதி) தொடங்குகிறது. இந்த சூழ்நிலையில் உலக தடகள கவுன்சில் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. உலக தடகள அமைப்பின் துணைத் தலைவர் அடில் சுமரி வாலா கூறும்போது, "இந்தியா 2028-ம் ஆண்டுக்கான உலக உள்ளரங்க தடகள சாம்பியன்ஷிப் போட்டியை நடத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளது" என்றார்.

# 250 கம்பெனி துணை ராணுவப் படை விரைவில் வருகை

**சென்னை, மார்ச் 21:**

தமிழகத்தில் தேர்தல் பாதுகாப்புக்காக மேலும் 250 கம்பெனி துணை ராணுவப்படையினர் வர உள்ளனர் என்று தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பறக்கும் படை சோதனையின் போது பிடிக்கப்படும் பணம், பொருட்களுக்கான உரிய ஆவணங்களை காட்டினால் அப்போதே திருப்பிக் கொடுக்கப்படும். பதற்றமான வாக்குச்சாவடிகள் பற்றி தேர்தல் பார்வையாளர்களுடன் கலந்து பேசி முடிவு செய்யப்படும். ஒரு வாக்குச்சாவடிக்கு 1,200 வாக்காளர்கள் என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

பள்ளிக்கூடங்கள் தவிர மற்ற அடுக்குமாடி குடியிருப்புகளிலும் கீழ் தளத்தில் வாக்குச்சாவடிகளை அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதை சென்னை, கோவையில் முயற்சிக்கிறோம்.

அந்த குடியிருப்புகளில் 3 நாட்களுக்கு இடம் ஒதுக்கித் தர வேண்டும் என்ற நிலையிருப்பதால் சிலர் ஒப்புக்கொள்வதில்லை ஆன்லைன் மூலம் வேட்பு மனு தாக்கல் செய்யலாம்.

அப்படி செய்தாலும் அந்த ஆவணங்கள் அனைத்தையும் நகலெடுத்து தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் நேரில் வந்து தாக்கல் செய்வது அவசியம். தேர்தல் பாதுகாப்புப் பணிக்காக 50 கம்பெனி துணை ராணுவத்தினர் ஏற்கெனவே தமிழகத்துக்கு வந்துள்ளனர்.

மேலும் 250 கம்பெனி துணை ராணுவத்தினர் வரவுள்ளனர். கூடுதலாக தேவைப்பட்டால் தேர்தல் ஆணையத்திடம் கேட்டுபெறலாம். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் இல்லை. ஒரு கம்பெனியில் 70 முதல் 90 பேர் வரை துணை ராணுவத்தினர் இருப்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னையில் தேர்தல் பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் ஆலோசனை

**சென்னை, மார்ச் 21:**

தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டப்பேரவை தொகுதிகளில் நடைபெறும் ஆயத்தப் பணிகள் குறித்து, தேர்தல் பார்வையாளர்கள் உடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

மாவட்ட தேர்தல் அலுவலரும், சென்னை மாநகராட்சி ஆணையருமான குமரகுருபரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பொது பார்வையாளர்கள், செலவின பார்வையாளர்கள் மற்றும் காவல் பார்வையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தொகுதிவாரியான வாக்காளர்கள் எண்ணிக்கை, வாக்குப்பதிவு மையங்கள், பதற்றமான, மிகவும் பதற்றமான வாக்குச்சாவடிகள் குறித்த ஆய்வு, நிலையான கண்காணிப்பு குழுக்கள், பறக்கும் படைகள், வீடியோ கண்காணிப்பு குழுக்களின் செயல்பாடுகள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பணம், பொருட்கள் குறித்த விவரங்கள்.

சி-விஜில் செயலி, சுவிதா செயலிகள் மூலம் பெறப்பட்ட புகார்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள், விவிபேட் இயந்திரங்களின் இருப்பு மற்றும் தயார் நிலை.

தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# வாக்குப் பதிவு தினத்தன்று பொதுவிடுமுறை: தமிழக அரசுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல்

**சென்னை, மார்ச் 21:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு நடைபெறும் ஏப்.23-ம் தேதி அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பொது விடுமுறை விட வேண்டும் என்று தமிழக அரசுக்கு, தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.



தமிழக சட்டப்பேரவைக்கான தேர்தல் வாக்குப்பதிவு வரும் ஏப்.23-ம் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தலில் 2.90 கோடி பெண், 2.78 கோடி ஆண், 7,656 திருநங்கைகள் என மொத்தம் 5.69 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

இந்நிலையில், தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு, பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்கள், அனைத்து கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கு ஏப்.23-ம் தேதி சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை விட வேண்டும்.

தொழிலாளர் பணியாற்றும் தொகுதியில் தேர்தல் நடைபெறாவிட்டாலும், தேர்தல் நடைபெறும் தொகுதியில், அந்த தொழிலாளி வாக்காளராக இருந்தால் அவர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு அளிக்க வேண்டும்.

தினக்கூலி தொழிலாளராக இருந்தாலும் விடுப்பு அளிக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு, இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது.

# வணிகச் செய்திகள்

## பிரீமியம் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.2 அதிகரிப்பு!

**புதுடெல்லி, மார்ச் 21:**

பிரீமியம் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.2 உயர்த்தி ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனம் அறிவித்துள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தாக்குதலை தொடங்கியதை அடுத்து, இரு தரப்புக்கும் இடையேயான போர் 21-வது நாளாக நீடித்து வருகிறது. ஈரானின் முக்கிய எண்ணெய் வயலை இஸ்ரேல் தாக்கியதால், கத்தாரின் மிகப் பெரிய எண்ணெய் வயலை ஈரான் தாக்கியது. மேலும், ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கி உள்ளது. இதன் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது. தற்போதும் ஏற்ற இறக்கங்களுடன் கச்சா எண்ணெய் விற்பனையாகி வருகிறது. இந்நிலையில், பிரீமியம் பெட்ரோலின் விலையை லிட்டருக்கு ரூ.2 உயர்த்தி ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனம் அறிவித்துள்ளது. அதேநேரத்தில், விலை உயர்வுக்கான காரணத்தை அது தெரிவிக்கவில்லை. எனினும், சாதாரண பெட்ரோலின் விலையில் மாற்றம் எதையும் அது செய்யவில்லை. இந்தியாவில் கச்சா எண்ணெய்க்கு தட்டுப்பாடு இல்லை என எண்ணெய் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. அதேநேரத்தில், அவற்றின் விலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

# வரலாறு காணாத ரூபாய் சரிவு - டாலருக்கு நகரும் முதலீட்டாளர்கள்

**சென்னை, மார்ச் 21:**

மும்பை:மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் பதற்றங்கள், கச்சா எண்ணெய் விலை உயர்வு ஆகியவை காரணமாக வரலாறு காணாத அளவாக டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு ரூ.93.40 ஆக சரிந்தது.

முந்தைய வணிகத்தின் முடிவில் டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு ரூ.92.87 ஆக இருந்த நிலையில் இன்று அது ரூ.93.40 ஆக உயர்ந்து வணிகமாகி வருகிறது. இது முன் எப்போதும் இல்லாத சரிவாகும். அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது கடந்த பிப். 28ம் தேதி தாக்குதலை தொடங்கியதை அடுத்து, இவ்விரு நாடுகளுக்கும் எதிராக ஈரான் பதிலடி கொடுத்து வருகிறது. இஸ்ரேலின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் மீதான தாக்குதல் உட்பட அந்நாட்டுக்கு எதிராக தொடர் தாக்குதல்களை நடத்தி வரும் ஈரான், அமெரிக்காவுக்கு ஆதரவாக செயல்படும் வளைகுடா நாடுகள் மீதும் தாக்குதல்களை நடத்தி வருகிறது. அதோடு, வளைகுடா நாடுகளின் முக்கிய கடல் வழித்தடமான ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியுள்ளது. இதனால், உள்ளே உள்ள கப்பல்கள் வெளியே செல்ல முடியாமலும், வெளியே உள்ள கப்பல்கள் உள்ளே செல்ல முடியாமலும் உள்ளன. இதுகச்சாஎண்ணெய் தட்டுப்பாடுபரவலாக்கத்துக்கு வழி வகுத்துள்ளது. இதன் காரணமாக கச்சா எண்ணெய் விலை 94.5 டாலராக உள்ளது. உயர்ந்த தரம் கொண்ட பிரென்ட் கச்சா எண்ணெய் விலை 107.65 டாலராக உள்ளது. டாலர் மூலமாகவே எண்ணெய் வர்த்தகம் நடைபெறுவதால் டாலருக்கான மதிப்பும் உயர்ந்து வருகிறது. டாலர் மதிப்பு உயர்வதால், இந்திய பங்குச் சந்தையில் முதலீடுகளை செய்திருந்த முதலீட்டாளர்கள் தங்கள் முதலீட்டை விற்றுவிட்டு டாலரை நோக்கி நகருகிறார்கள். இதனால், இந்திய பங்குச் சந்தை கடும் சரிவைச் சந்தித்து வருகிறது. டாலரின் மதிப்பு உயர்வதால் ரூபாயின் மதிப்பும் சரிந்து வருகிறது. வட்டி வகிதங்களைக் குறைப்பதற்கான வாய்ப்பு ஏறக்குறைய இல்லை என்பதாக அமெரிக்க ஃபெடரல் ரிசர்வ் எடுத்துள்ள நிலைப்பாடு காரணமாக, டாலர் வலுவாகவே இருந்து வருகிறது. இது முதலீடுகளை ஈர்த்து வருகிறது.

புவிசார் அரசியலில் ஏற்பட்டிருக்கும் நிலையற்றத் தன்மை காரணமாக இந்திய ரூபாயின் மதிப்பு தொடர் சரிவைச் சந்தித்து வருகிறது

# பண மோசடி வழக்கு: அனில் அம்பானியிடம் சிபிஐ விசாரணை

**புதுடெல்லி, மார்ச் 21:**

பாரத ஸ்டேட் வங்கியில் (எஸ்பிஐ) கடன் பெற்ற ரூ. 2,929 கோடி மோசடியில் ஈடுபட்டது தொடர்பான வழக்கில் ரிலையன்ஸ் குழுமத் தலைவரும், பிரபல தொழிலதிபருமான அனில் அம்பானியிடம் (66) சிபிஐ அதிகாரிகள் வியாழக்கிழமை விசாரணை மேற்கொண்டனர்.

இதற்காக, தில்லியில் உள்ள சிபிஐ தலைமை அலுவலகத்துக்கு வியாழக்கிழமை காலை வந்த அவரிடம், சிபிஐ அதிகாரிகள் பல மணி நேரம் விசாரணை மேற்கொண்டதாக தெரிகிறது.

இதுகுறித்து அனில் அம்பானிக்கான செய்தித்தொடர்பாளர் கூறுகையில், 'எஸ்பிஐ தரப்பில் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்) தொடர்புடைய விசாரணைக்காக அனில் அம்பானி ஆஜரானார். தொடர்ந்து, வெள்ளிக்கிழமையும் (மார்ச் 20) விசாரணைக்கு ஆஜராவார். அனைத்து விசாரணை முகமைகளின் விசாரணைக்கும் அவர் முழு ஒத்துழைப்பை அளிப்பார்' என்றார். பல்வேறு பொதுத் துறை வங்கிகளில் கடன் பெற்று ரூ. 40,000 கோடிக்கும் மேல் மோசடி செய்தது தொடர்பாக எஸ்பிஐ அளித்த புகாரின் பேரில், அனில் அம்பானி மீதும், அவரின் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் மீதும் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் சிபிஐ வழக்குப் பதிவு செய்தது.

பின்னர், மும்பையில் உள்ள அனில் அம்பானியின் வீடு மற்றும் அவருக்குச் சொந்தமான இடங்களில் சிபிஐ சோதனை மேற்கொண்டது. தற்போது அவரிடம் விசாரணை மேற்கொண்டு வருகிறது.

இந்த மோசடி புகார் தொடர்பாக, அனில் அம்பானி மீது அமலாக்கத் துறையும் மூன்று பண முறைகேடு வழக்குகளைப் பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டு வருகிறது.

இந்த விசாரணையின் ஒரு பகுதியாக, மும்பையில் பாலி ஹில் பகுதியில் இருக்கும் அனில் அம்பானியின் ரூ. 3,716. 83 கோடி மதிப்பிலான பிரம்மாண்ட பங்களாவை அமலாக்கத் துறை புதன்கிழமை முடக்கியது.

இந்த வழக்கில் இதுவரை ரூ.15,700 கோடி மதிப்பிலான இவரின் சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது.

மகனிடம் விசாரணை: முன்னதாக, இந்திய யூனியன் வங்கியிடம் ரூ.228 கோடிக்கு கடன் மோசடி செய்தது தொடர்பான வழக்கில் அனில் அம்பானியின் மகன் ஜெய் அன்மோல் அம்பானியிடம் சிபிஐ கடந்த மார்ச் 13-ஆம் தேதி விசாரணை மேற்கொண்டது.

இந்த வழக்கு தொடர்பாக, ஜெய் அன்மோல் வீட்டிலும் சிபிஐ சோதனை மேற்கொண்டது.

## குழு மத மாற்றத்துக்கு ஆயுள் தண்டனை: சத்தீஸ்கர் பேரவையில் மசோதா தாக்கல்

**புதுடெல்லி, மார்ச் 21:**

குழு மத மாற்றத்தில் ஈடுபடுபவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்க வழிவகுக்கும் மதச் சுதந்திர மசோதா 2026 சத்தீஸ்கர் பேரவையில் வியாழக்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. அண்மையில் கட்டாய மத மாற்றத்தை தடுக்கும் மதச் சுதந்திர மசோதா மகாராஷ்டிரா பேரவை மற்றும் மேலவையில் நிறைவேற்றப்பட்ட நிலையில் சத்தீஸ்கர் பேரவையிலும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவை சத்தீஸ்கர் துணை முதல்வரும் உள்துறை அமைச்சருமான விஜய் சர்மா பேரவையில் வியாழக்கிழமை தாக்கல் செய்தார். மத்திய பிரதேசத்தில் இருந்து 2000-இல் சத்தீஸ்கர் தனி மாநிலமாக பிரிக்கப்பட்டது.

அதற்கு முன்பாக இயற்றப்பட்ட சத்தீஸ்கர் மதச் சுதந்திர சட்டம்,1968-க்கு மாற்றாக புதிய சட்டத்தை கொண்டுவரும் நோக்கில் தற்போது மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

அதில் கூறப்பட்டிருப்பதாவது: மதச் சுதந்திர மசோதா 2026, சமூக ஊடகங்கள் மற்றும் எண்ம தளங்கள் உள்பட எந்த முறையிலும் கட்டாயமாகவோ மோசடியாகவோ ஏமாற்றும் விதமாகவோ அல்லது திருமணத்துக்காகவோ மத மாற்றம் மேற்கொள்ளப்படுவது முற்றிலும் தடுக்கப்படுகிறது.

குழு, கட்டாய மதமாற்றம் வரையறை: பரிசுகள், நிதி உதவி, வேலைவாய்ப்பு, இலவச கல்வி அல்லது மருத்துவ வசதிகள், சிறப்பான வாழ்வாதாரம் உள்ளிட்டவை வழங்குவதாக கூறுவது 'ஏமாற்று வார்த்தைகள்' என வரையறைக்கப்படுகிறது. உளவியல் அழுத்தம், உடல்ரீதியான தாக்குதல் அல்லது அச்சுறுத்தல், சமூக புறக்கணிப்பு உள்ளிட்டவற்றின்கீழ் மேற்கொள்ளப்படும் மத மாற்றம் கட்டாய மத மாற்றமாக கருதப்படும். ஒரே நிகழ்வில் இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட நபர்களை மத மாற்றம் செய்வது குழு மத மாற்றம் என வரையறைக்கப்படுகிறது.

## ஜனநாயகத்தை பாதுகாக்கும் போராட்டத்தில் மம்தாவுக்கு ஆதரவு: கேஜரிவால்

**புதுடெல்லி, மார்ச் 21:**

முதல்வர் மம்தா பானர்ஜி ஜனநாயகத்தை பாதுகாக்க போராடுவதாக அவருக்கு கேஜரிவால் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தில்லி முன்னாள் முதல்வர் அரவிந்த் கேஜரிவால் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது: தேர்தல்களில் தேர்தல் ஆணையத்தை ஓர் ஆயுதமாகக் கொண்டு சூழ்ச்சியின் மூலம் பாஜக வெற்றி பெற்று வருகிறது. ஓராண்டுக்கு முன்பாக தில்லி பேரவையின் தேசிய தலைநகர் சந்தித்த அதே சூழலை மேற்கு வங்கம் தற்போது எதிர்கொண்டு வருகிறது. தில்லி பேரவைத் தேர்தலின்போது, வாக்காளர்கள் பட்டியலில் இருந்து பெயர்கள் நீக்கப்பட்டன. பாஜகவின் செயல்பாடுகளுக்கு காவல் துறை எவ்வித கட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை. அவர்களுடைய வெற்றிக்காக ஒட்டுமொத்த நிர்வாகமும் செயல்பட்டது.

ஜனநாயகம் அடிப்படை சிதைக்கப்பட்டது.

தற்போது, சகோதரரி மம்தா ஜனநாயகத்தை பாதுகாக்க போராடி வருகிறார். இந்தப் போராட்டத்தில், ஆம் ஆத்மி அவருக்கு துணை நிற்கிறது என்று அந்தப் பதிவில் கேஜரிவால் தெரிவித்துள்ளார்.

## சபரிமலை தங்கக் கவச விவகாரம்: 2 பேருக்கு ஜாமீன் வழங்கியது நீதிமன்றம்

**திருவனந்தபுரம், மார்ச் 21:**

கடந்த 2019-இல் சபரிமலை ஐயப்பன் கோயிலின் கருவறைக் கதவுகள் மற்றும் துவார பாலகர் சிலைகளின் தங்கக் கவசங்கள் புதுப்பிக்கப்பட்ட பிறகு, அவற்றின் எடை குறைந்ததாகப் புகார் எழுந்தது. இது தொடர்பாக இரு வழக்குகள் பதிவுசெய்யப்பட்ட நிலையில் விசாரணை மேற்கொள்ள கேரள உயர் நீதிமன்ற வழிகாட்டுதலில் சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) அமைக்கப்பட்டது. இந்த முறைகேடு வழக்கில் திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரியத்தின் (டிடிபி), முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள், தொழிலதிபர் உண்ணிகிருஷ்ணன் போற்றி உள்பட பலர் கைது செய்யப்பட்டனர்.


சென்னையைச் சேர்ந்த ஸ்மார்ட் கிரியேஷன்ஸ் தலைமை செயல் அதிகாரி (சிஇஓ பங்கஜ் பண்டாரி மற்றும் கர்நாடக மாநிலம், பெல்லாரியைச் சேர்ந்த நகைக் கடை அதிபர் கோவர்தன் ரோட்டம் ஆகியோர் இரு வழக்குகளிலும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கருவறைக் கதவுகள் வழக்கில் பங்கஜ் பண்டாரி 9-ஆவது குற்றவாளியாகவும் துவார பாலகர் சிலைகள் வழக்கில் 12-ஆவது குற்றவாளியாகவும் சேர்க்கப்பட்டார். அதேபோல் கருவறைக் கதவுகள் வழக்கில் 10-ஆவது குற்றவாளியாகவும் துவார பாலகர் சிலைகள் வழக்கில் 13-ஆவது குற்றவாளியாகவும் கோவர்தன் ரோட்டம் சேர்க்கப்பட்டு எஸ்ஐடி விசாரணை நடத்தி வந்தது.

இந்நிலையில், இருவரும் கைது செய்யப்பட்டு 90 நாள்களாகியும் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படாததால் அவர்களுக்கு கொல்லம் ஊழல் தடுப்பு நீதிமன்ற நீதிபதி மோஹித் சிஎஸ் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து, சபரிமலை தங்கக் கவசம் தொடர்புடைய வழக்குகளில் இதுவரை 10 பேர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மார்ச் மாத இறுதிக்குள் இந்த வழக்குகளில் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்வதாக கேரள உயர் நீதிமன்றத்தில் எஸ்ஐடி கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## போரால் மாற்றுப் பாதையில் விமானங்களை இயக்க இந்திய விமானத் துறை முடிவு!

**புதுடெல்லி, மார்ச் 21:**



அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் போர் காரணமாக வளைகுடா வான்வழியைத் தவிர்க்குமாறு விமான நிறுவனங்களுக்கு இந்திய விமானப் போக்குவரத்துத் துறை அறிவுறுத்தியுள்ளது.

அமெரிக்க, இஸ்ரேல் - ஈரான் போர் தொடர்ந்து நடைபெற்று வருவதால் வளைகுடா நாடுகளின் வான்வழி, கடல்வழி போக்குவரத்துகளில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதனால், பாதுகாப்பு அபாயங்களைக் கருத்தில் கொண்டு அந்தப் பகுதி வான்வழி போக்குவரத்தைத் தவிர்த்து மாற்றுப் பாதைகளில் விமானங்களை இயக்க விமான நிறுவனங்களுக்கு இந்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் அறிவுரை வழங்கியுள்ளது.

இந்தியாவை ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் மேற்கு ஆசியாவுடன் இணைக்கும் முக்கிய வான்வழித் தடங்களில் இடையூறு ஏற்பட்டுள்ள நிலையில் இந்திய விமானப் போக்குவரத்துத் துறை இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

ஏர் இந்தியா நிறுவனம் பல்வேறு நீண்ட தூர விமானங்களை இந்த வழித்தடத்தில் இயக்கிவந்த நிலையில் ஈரான் மற்றும் ஈராக் மீதான கட்டுப்படுத்தப்பட்ட வான்வெளியைத் தவிர்ப்பதற்காக மாற்றுப் பாதைகளில் தற்போது விமானங்களை இயக்கி வருகிறது. இதனால், விமானப் பயண நேரம் அதிகரித்துள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, விமானப் பணி நேரம் தொடர்பான தளர்வுகளை இந்திய விமானத் துறை வழங்கியுள்ளது.

இதுதொடர்பாகப் பேசிய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு, "ஐரோப்பா மற்றும் அமெரிக்கா செல்லும் இந்திய விமானங்களுக்கு மேற்காசிய வான்வழி முக்கிய வழித்தடமாக உள்ளது. வான்வழிப் போக்குவரத்து சார்ந்த தடைகளைக் குறைக்கவும், பயணிகளின் வசதியை உறுதிப்படுத்தவும் சம்பந்தப்பட்ட வெளியுறவுத் துறை அதிகாரிகள் மற்றும் விமான நிறுவனங்களிடம் இந்திய அரசு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திவருகின்றது" என்று அவர் தெரிவித்தார்.

நாங்கள் இப்போது நடுத் தெருவில் நிற்கிறோம். மகன் என்றாவது ஒரு நாள் கண் விழிப்பான் என்ற நம்பிக்கையில், அவனது கைக்கடிகாரத்தையும் அலைபேசியையும் இன்னும் அவரது தாயார் கையில் பத்திரமாக வைத்துள்ளார்.

அவர்கள் எங்களது வீட்டையும், பணத்தையும் பறித்திருக்கலாம். ஆனால், என் மகன் மீண்டும் வருவான் என்ற எங்களது நம்பிக்கையை மட்டும் யாராலும் பறிக்க முடியாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தேர்தல் ஆணைய செயல்பாடுகள் அதிர்ச்சியளிக்கிறது: மம்தா பானர்ஜி

**கொல்கத்தா, மார்ச் 21:**

மேற்கு வங்கத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் அதிர்ச்சியளிப்பதாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு அந்த மாநில முதல்வர் மம்தா பானர்ஜி வியாழக்கிழமை கடிதம் எழுதியுள்ளார்.

மேற்கு வங்கத்தில் 294 பேரவைத் தொகுதிகளுக்கு ஏப்ரல் 23, 29 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட்டு மே 4-ஆம் தேதி வாக்குகள் எண்ணப்படவுள்ளன. அங்கு தேர்தல் நடத்தை விதிகள் அமலான நிலையில், கடந்த புதன்கிழமை ஒரே நாளில் அரசு உயரதிகாரிகளை ஒட்டுமொத்தமாக பணி இடமாற்றம் செய்து தேர்தல் ஆணையம் நடவடிக்கை மேற்கொண்டது.

புதிதாக, மாவட்ட ஆட்சியர்கள் உள்பட 13 ஐஏஎஸ் அதிகாரிகளைப் பணி இடமாற்றம் செய்து உத்தரவு பிறப்பித்தது. இதற்கு கண்டனம் தெரிவித்து ஞானேஷ் குமாருக்கு மம்தா பானர்ஜி எழுதிய கடிதத்தில், 'பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட சில தினங்களில் எவ்வித முறையான காரணங்களுமின்றி காவல் துறைத் தலைவர், தலைமைச் செயலர், உள்துறைச் செயலர், மாவட்ட ஆட்சியர்கள், மூத்த காவல் துறை அதிகாரிகள் என பலரை ஒரே நாளில் தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்துள்ளது.

அரசமைப்புச் சட்ட உரிமைகள் மற்றும் நாகரிகத்தின் அனைத்து எல்லைகளையும் கடந்து ஒரு தலைபட்சமாக தேர்தல் ஆணையம் செயல்படுவது அதிர்ச்சியளிக்கிறது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) தொடங்கியதில் இருந்து பல்வேறு இடர்பாடுகளை தேர்தல் ஆணையம் ஏற்படுத்தி வருகிறது. எஸ்ஐஆர் முரண்பாட்டு பட்டியலில் உள்ளவர்களின் விவரங்கள் சரிபார்ப்பு பணி நடைபெற்று வரும் வேளையில் மாவட்ட தேர்தல் அதிகாரிகளை தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்துள்ளது கண்டனத்துக்குரியது. கூடி தேர்தல் ஆணையத்தின் தன்னிச்சையான முடிவுகள் ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சி முறைக்கு எதிரானது.

அவசரநிலை அல்லது மத்திய அரசின் அதிகாரத்தை மறைமுகமாக அதிகரிக்கும் இந்த நடவடிக்கைகள் கவலையளிக்கிறது' எனத் தெரிவிக்கப்பட்டது.

## வைரலான விடியோ! மெட்ரோ ரயிலில் சப்தமாகப் பாடிய பெண்கள் மீது நடவடிக்கை!

**பெங்களூரு, மார்ச் 21:**

மெட்ரோ ரயிலுக்குள் சப்தமாகப் பாடி மற்ற பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில், பதினொரு பெண் பயணிகள் கொண்ட குழு மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டதாக காவல்துறை வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

மார்ச் 15ஆம் தேதி இரவு இந்த சம்பவம் நடந்துள்ளது. பெங்களூர் சர்வதேச கண்காட்சி மையத்திலிருந்து கேம்பேகௌடா ரயில் நிலையம் வழித்தடத்தில் பயணித்த மெட்ரோ ரயிலில் 11 பெண்கள் சப்தமாகப் பாடும் விடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகியிருந்தது.

மெட்ரோ ரயிலுக்குள் ஏறிய 11 பெண்களும் திடீரென சப்தமாகப் பாடத் தொடங்கினர். இது அருகில் இருந்த பயணிகளுக்கு தொந்தரவாக இருந்ததாக அவர்கள் கூறியும் பாடலை நிறுத்தவில்லை. இதையடுத்து, பயணிகள் சிலர், ரயில் நிலையத்தில் இறங்கி, மெட்ரோ ரயிலின் கதவை மூட விடாமல் வாக்குவாதம் செய்தனர். அங்கு வந்த பாதுகாவலர்கள், தலையிட்டு அந்தப் பெண்களைக் கைது செய்தனர். மெட்ரோ ரயில் நிலை கண்காணிப்பாளர் அளித்த புகாரின் அடிப்படையில், 11 பெண்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டது. தண்டனைக்குரிய குற்றம் இல்லாததால், அவர்களது செயல் குறித்து எடுத்துக் கூறப்பட்டு, அவர்கள் மன்னிப்புக் கேட்டதையடுத்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.




## கோடை காலத்தில் நாட்டின் மின்சாரத் தேவை 270 ஜிகா வாட்டாக அதிகரிக்கும்: மத்திய அமைச்சர் தகவல்

**புதுடெல்லி, மார்ச் 21:**


இந்த கோடை காலத்தில் நாட்டின் மின்சாரத் தேவை 270 ஜிகா வாட்டாக அதிகரிக்கும் என்று மத்திய மின்சாரத் துறை அமைச்சர் மனோகர் லால் கட்டர் தெரிவித்துள்ளார்.

புது தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற பாரத் எலெக்ட்ரிசிட்டி தேசிய மாநாட்டில், இதுகுறித்து அவர் பேசியதாவது: 2024-25ஆம் ஆண்டில் நாட்டின் மின்சாரத் தேவை 250 ஜிகா வாட்டாக உச்சம் தொட்டது. அதேபோல், 2025-26ஆம் ஆண்டிலும் மின்சாரத் தேவை 270 ஜிகா வாட்டாக அதிகரிக்கும் என மின்சார அமைச்சகம் இலக்கு வைத்திருந்தது. ஆனால் மோசமான வானிலை காரணமாக (மழை), அப்போது மின்சாரத் தேவை அதிகரிக்கவில்லை.

இந்த சீசனில் மே - ஜூன் மாதங்களில் நாட்டில் மின்சாரத் தேவை 270 ஜிகா வாட்டாக அதிகரிக்கக்கூடும் என கணக்கிட்டு, அதற்குத் தயாராக உள்ளோம். ஆதலால் எந்தப் பிரச்னையும் ஏற்படாது. நாட்டில் 2034-ஆம் ஆண்டுக்குள் 900 ஜிகா வாட் மின்சாரம் கொண்டு செல்லும் வகையில் மின்சார வழித்தடம் ஏற்படுத்தப்படும். கடந்த 10 ஆண்டுகளில் புதிதாக 2.09 லட்சம் சர்க்யூட் கிலோ மீட்டர் தூரத்துக்கு மின்சார வழித்தடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது ஏற்கெனவே இருந்ததை விட 72 சதவீதம் அதிகமாகும். நமது மின்சார வழித்தடம், உலகிலுள்ள மிகவும் வலுவான தடங்களில் ஒன்றாக மாறி வருகிறது. இது எதிர்காலத்தில் பெரும் பலனைத் தரும் என்றார். மேற்காசியாவில் ஈரான், இஸ்ரேல்-அமெரிக்கா இடையே போர் நடப்பதால் கச்சா எண்ணெய் கப்பல்களின் போக்குவரத்தில் சிக்கல் நிலவுகிறது. இதனால் பெட்ரோல், டீசல் வாகனத்தை பயன்படுத்தும் நபர்கள், மின்சார கார்களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். எரிவாயு சிலிண்டர் பிரச்னை காரணமாக, மின்சாரத்தில் செயல்படும் மின்சார அடுப்பை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாகவும், நாட்டில் மின்சாரத் தேவை அதிகரித்து வருகிறது.

# 2 குழந்தைகளுக்கு அதிகமாக உள்ள குடும்பத்துக்கு ரூ. 25,000 ஊக்கத்தொகை: அறிவித்த ஆந்திர முதல்வர்

**திருப்பதி, மார்ச் 21:**



இரண்டு அல்லது மூன்று குழந்தைகளைப் பெற்றுள்ள குடும்பத்துக்கு ரூ. 25,000 ஊக்கத்தொகை உள்ளிட்ட மக்கள்தொகையை அதிகரிப்பதற்கான பல்வேறு புதிய அம்சங்களுடன்கூடிய மாநில மக்கள்தொகை மேலாண்மை கொள்கையை தெலுங்கு புத்தாண்டு (யுகாதி) நாளில் ஆந்திர முதல்வர் என். சந்திரபாபு நாயுடு வியாழக்கிழமை அறிவித்தார்.

முதியவர்களுக்கான சிறந்த பராமரிப்பை உறுதிப்படுத்தவும், சமூக நிலைத்தன்மையை விரிவுபடுத்தும் வகையிலும் கூட்டு குடும்ப முறைக்குப் புத்துயிர் கொடுப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முதல்வர் அப்போது கூறினார்.

ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் அரசு சார்பில் நடத்தப்பட்ட யுகாதி விழாவில் பேசும்போது இந்த அறிவிப்பை முதல்வர் சந்திரபாபு நாயுடு வெளியிட்டார். அப்போது அவர் பேசியதாவது:

பிறப்பு விகிதம் குறைந்து வருவதும், வயது முதிர்ந்தவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதும் உலக அளவிலான தீவிர பிரச்னையாக உருவெடுத்து வருகிறது. இந்தப் போக்கு, தற்போது தென் இந்தியாவிலும் தற்போது தொடங்கியுள்ளது.

இளம் மக்கள்தொகை எண்ணிக்கை இவ்வாறு தொடர்ந்து குறைந்து வருவது, வரும் காலங்களில் பணியிடங்களில் மனிதப் பங்கேற்பு குறைந்து, இயந்திரங்கள் மற்றும் தானியங்கிகளின் ஆதிக்கத்துக்கு வழிவகுத்துவிடும்.

அந்த வகையில், குடும்பக் கட்டுப்பாடு மீதான எனது கண்ணோட்டம், தற்போது மக்கள்தொகைமேலாண்மைக்கான பரந்த உத்தியாக மாறியுள்ளது. மக்கள்தொகை சமநிலையைப் பேண, பெரிய குடும்பங்களே இன்றியமையாதவை. சமூக நிலைத்தன்மையைப்பேணுவதற்கு, ஒரு தம்பதிக்கு 2.1 விகதத்தில் குழந்தைகள் இருக்க வேண்டும். ஆனால், மாநிலத்தில் இந்த விகிதம் 1.5 விகிதமாகக் குறைந்து. இது நீண்டகால மக்கள் தொகையியல் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தும்.

முன்னர், 'ஒரு குழந்தை பெற்றுக்கொள்வது சிறந்தது; 2 குழந்தைகள் இருக்கலாம்; 3 குழந்தைகள் வேண்டாம்' என்று நான் கூறினேன். ஆனால், இப்போது அதை தலைகீழாக மாற்றுகிறேன். ஒரு குழந்தை போதாது; இரண்டு குழந்தைகள் இருப்பது நல்லது; மூன்று குழந்தைகள் இருப்பது மேலும் சிறந்தது. அந்த வகையில், மாநிலத்தில் மக்கள்தொகையை அதிகரிக்கச் செய்யும் வகையிலும், மக்கள்தொகை மேலாண்மை கொள்கையை மாநில அரசு கொண்டுவந்துள்ளது. இதன் கீழ், மக்கள் மதிப்பு சார்ந்த வாழ்க்கை முறைக்குத் திரும்பவும், கூட்டுக் குடும்ப முறைக்குப் புத்துயிர் அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், 2 அல்லது 3 குழந்தைகளைப் பெற்றுள்ள குடும்பங்களுக்கு இந்தக் கொள்கையின் கீழ் ரூ. 25,000 ஊக்கத் தொகை அளிக்கப்படும் என்றார்.

# ஈரான் போருக்கு கூடுதல் நிதியாக ரூ.18 லட்சம் கோடி தேவை - அமெரிக்க ராணுவம்



வாஷிங்டன், மார்ச் 21:

ஈரானுக்கு எதிராக போரிட்டு வரும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள், நாளுக்கு நாள் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகின்றன. இதில் அந்த நாட்டின் நீர்மூழ்கி கப்பல்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டதாக அமெரிக்க ராணுவ மந்திரி ஹெக்சேத் கூறியுள்ளார்.

இதனிடையே வளைகுடா பிராந்தியத்தில் ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் நடத்தி வரும் போர் இன்று 21-வது நாளை எட்டி உள்ளது. இந்த போரில் தனது உச்சபட்ச தலைவர் மற்றும் மூத்த தலைவர்களை இழந்த ஈரான் இஸ்ரேல் மீதும் வளைகுடா நாடுகள் மீதும் ஆவேச பதிலடியை கொடுத்து வருகிறது.

சர்வதேச சமூகத்தை உலுக்கி வரும் இந்த போர், தற்போது அடுத்த கட்டத்தை எட்டி இருக்கிறது. அதாவது இரு தரப்பும் எண்ணெய் மற்றும் கியாஸ் நிறுவனங்களை குறிவைத்து தாக்க தொடங்கி உள்ளன.

இந்நிலையில் அமெரிக்க ராணுவ தலைமையகம் (பெண்டகன்) ஈரான் போருக்கு கூடுதலாக 200 பில்லியன் டாலர் (ரூ.18 லட்சம் கோடி) நிதி தேவை என கோரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து அமெரிக்க பாதுகாப்புத்துறை மந்திரி பீட் ஹெக்சேத் கூறுகையில், "இந்த தொகையில் மாற்றம் ஏற்படலாம். ராணுவத்துக்கு தேவையான நிதியை உறுதி செய்ய நாடாளுமன்றத்தை அணுக உள்ளோம். மோசமான நபர்களை கொல்ல ராணுவத்துக்கு கூடுதல் நிதி தேவைப்படுகிறது" என்று கூறினார்.

இது மிகவும் அதிகமான தொகை என்பதால், இந்த புதிய செலவின கோரிக்கைக்கு காங்கிரஸின் ஒப்புதல் தேவைப்படும். மேலும் இத்தகைய செலவினங்களுக்கு அரசியல் ஆதரவு இருக்குமா என்பதும் தெளிவாக தெரியவில்லை. நாட்டின் கடன் சாதனை அளவான 39 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை தாண்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக பெண்டகனில் நடந்த நிகழ்ச்சியில் ராணுவ மந்திரி ஹெக்சேத் பேசும்போது, 'ஈரானின் கடற்படை இனி ஒரு காரணியாக இருக்காது. அவர்களது நீர்மூழ்கி கப்பல்களை பொறுத்தவரை, ஒரு காலத்தில் அவர்களிடம் இருந்த 11 நீர்மூழ்கி கப்பல்களும் தற்போது அழிக்கப்பட்டு விட்டன' என தெரிவித்திருந்தார்.

## உலக சுகாதார அமைப்பிலிருந்து அர்ஜெண்டினா விலகல்

வாஷிங்டன், மார்ச் 21:

உலக சுகாதார அமைப்பிலிருந்து அர்ஜெண்டினா அரசு அதிகாரப்பூர்வமாக வெளியேறி விட்டது. இதனை அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் பாப்லோ கிர்னோ தெரிவித்துள்ளார். 2025 மார்ச் 17, அன்று ஐ.நா பொதுச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதம் மூலம் இந்த முடிவு முறைப்படி அறிவிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தீவிர வலதுசாரியும் டிரம்ப் ஆதரவாளருமான அர்ஜெண்டினா ஜனாதிபதி ஜேவியர் மிலே தனது மோசமான கொள்கைகளால் நாட்டை படுகுழியில் தள்ளி வருகிறார். அவரது தற்போதைய முடிவு மிக மோசமானது என கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

## 2024 இல் தடுக்க வாய்ப்பிருந்தும் 49 லட்சம் குழந்தைகள் உயிரிழப்பு

2024 ஆம் ஆண்டு 5 வயதிற்குட்பட்ட சுமார் 49 லட்சம் குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக ஐ.நா அவை தெரிவித்துள்ளது. முறையான மருத்துவ வசதி, முன்கூட்டியே பிறக்கும் குழந்தைகளுக்கான சிகிச்சை மற்றும் மலேரியா போன்ற நோய்களுக்கான குறைந்த செலவிலான மருத்துவ உதவிகள் செய்திருந்தால் அந்த மரணங்களில் பெரும்பாலானவற்றைத் தடுத்திருக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2015 க்கு பிறகு தடுக்க வாய்ப்பிருந்தும் பலியாகக்கூடிய குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாகவும் வேதனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அவதூறு பிரச்சாரத்தை நிறுத்து : அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை

தைவானை சீனா ஆக்கிரமிக்கும் என அமெரிக்கா பிரச்சாரம் செய்து வருகிறது. இந்நிலையில் சீனாவுக்கு தைவான் மீது போர் தொடுக்கும் திட்டம் இல்லை என அமெரிக்க உளவுத்துறை தெரிவித்துள்ளது. இதையடுத்து சீன வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் லின் ஜியான், தைவான் விவகாரத்தில் அமெரிக்கா எச்சரிக்கையுடன் பேசவும் செயல்படவும் வேண்டும். சீனா அச்சுறுத்தலை உருவாக்கும் நாடு என அமெரிக்கா செய்து வரும் பிரச்சாரத்தை நிறுத்த வேண்டும். மேலும் சீனா பற்றிய தவறான புரிதலைத் திருத்திக்கொள்ள வேண்டும் என எச்சரித்துள்ளார்.

## ஐரோப்பிய ஒன்றிய உச்சிமாநாடு : சர்வதேச சூழல் குறித்து ஆலோசனை



பெல்ஜியத்தில் துவங்கியுள்ள ஐரோப்பிய ஒன்றிய உச்சிமாநாட்டில், ஈரான் மீதான போர், எரிசக்தி விலை உயர்வு, உக்ரைனுக்கு ஐரோப்பிய நாடுகளின் கடன் உதவி குறித்து விவாதிக்கப்பட்டு வருகின்றன. 27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பா, பொருளாதார நெருக்கடி மற்றும் எரிசக்தி விலையை கட்டுப்படுத்த ஒரு தீர்வு பெட்டகத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளது. உக்ரைனுக்கு உதவும் ஐரோப்பிய நாடுகளின் திட்டத்திற்கு ஹங்கேரி பிரதமர் விக்டர் ஓர்பான் எதிர்ப்பு தெரிவிக்கும் நிலையில் அது முக்கிய விவாதமாக மாறியுள்ளது.

## டிரம்ப்பை விமர்சித்தவர் மீது துரோகிப் பட்டம்

அமெரிக்க பயங்கரவாத எதிர்ப்பு பிரிவு அதிகாரி ஜோசப் கென்ட் ரகசியத் தகவல்களை கசிய விட்டாரா என எஃப்.பி.ஐ விசாரணை நடத்தி வருகிறது. ஈரான் மீதான போர் இஸ்ரேலின் லாபியால் தான் நடைபெறுகிறது. ஈரானால் அமெரிக்காவுக்கு உடனடி ஆபத்து இல்லை என போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து இவர் தனது பதவியை ராஜினாமா செய்திருந்தார். இந்நிலையில் அவர் ராஜினாமா அறிவிப்பதற்கு முன்னாலேயே அவர் அரசு தகவல்களை கசியவிட்டதாக சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணையை துவங்கி விட்டதாகவும் கூறப்படுகிறது.

# அமெரிக்க போர் விமானங்களுக்கு அனுமதி மறுத்த இலங்கை

கொழும்பு, மார்ச் 21:

வளைகுடா பிராந்தியத்தில் ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் நடத்தி வரும் போர் இன்று 21-வது நாளை எட்டி உள்ளது. இந்த போரில் தனது உச்சபட்ச தலைவர் மற்றும் மூத்த தலைவர்களை இழந்த ஈரான் இஸ்ரேல் மீதும் வளைகுடா நாடுகள் மீதும் ஆவேச பதிலடியை கொடுத்து வருகிறது.

சர்வதேச சமூகத்தை உலுக்கி வரும் இந்த போர், தற்போது அடுத்த கட்டத்தை எட்டி இருக்கிறது. அதாவது இரு தரப்பும் எண்ணெய் மற்றும் கியாஸ் நிறுவனங்களை குறிவைத்து தாக்க தொடங்கி உள்ளன.

இந்த நிலையில், கடந்த மார்ச் 4 அன்று இந்தியாவில் பயிற்சி முடித்து புறப்பட்ட ஐரிஸ் டெனா என்கிற ஈரானின் போர்க் கப்பலை இந்தியப் பெருங்கடலில் இலங்கையின் எல்லைக்கு அப்பால் அமெரிக்கா தாக்கியதால் ஈரான் மாலுமிகள் 84 பேர் பலியாகினர். இலங்கை கடற்படையினரின் உதவியால் 32 பேர் மீட்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, மறுநாளே ஈரானின் ஐரிஸ் புஷேர் எனப்படும் மற்றொரு கப்பல் 225 பணியாளர்களின் பாதுகாப்பு காரணமாக இலங்கை எல்லைக்குள் நுழைய அனுமதி வழங்கப்பட்டது. அவர்கள் தற்போது வரை கொழும்புவில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அமெரிக்கா தனது போர் விமானங்களை நிறுத்த அனுமதி கோரிய நிலையில் அதற்கு மறுப்பு தெரிவித்ததாக இலங்கை அதிபர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இலங்கை நாடாளுமன்றத்தில் பேசிய அதிபர் அநுரகுமார திஸ்ஸநாயக, அமெரிக்கா கப்பல்களைத் தாக்கும் 8 ஏவுகணைகள் கொண்ட இரு போர் விமானங்களை மட்டாலா சர்வதேச விமான நிலையத்தில் கடந்த மார்ச் 4 முதல் 8 வரை நிறுத்த அனுமதி கேட்டிருந்தனர். அதற்கு நாம் மறுப்பு தெரிவித்தோம்.

அதே சமயத்தில் ஈரானும் மார்ச் 9 முதல் 13 வரை தங்களது 3 போர்க் கப்பல்களை நிறுத்த அனுமதி கேட்டனர். அவர்களின் கோரிக்கை தற்போது வரை ஏற்கப்படவில்லை.

நாம் ஈரானுக்கு 'ஆம்' என்று சொன்னால், அமெரிக்காவுக்கும் 'ஆம்' என்று சொல்ல வேண்டியதாக இருந்திருக்கும். ஆனால், நாம் மறுத்துவிட்டோம். நமது நடுநிலையான நிலைப்பாட்டை நாம் உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறோம்" என்று தெரிவித்தார்.

# போர்க்களத்தின் நடுவே சிக்கி தவிக்கும் கப்பல்கள்: உதவி கோரும் மாலுமிகள்; அனுமதி மறுக்கும் துறைமுகங்கள்

தெஹ்ரான், மார்ச் 21:

வளைகுடா பிராந்தியத்தில் ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் நடத்தி வரும் போர் இன்று 21-வது நாளை எட்டி உள்ளது. இந்த போரில் தனது உச்சபட்ச தலைவர் மற்றும் மூத்த தலைவர்களை இழந்த ஈரான் இஸ்ரேல் மீதும் வளைகுடா நாடுகள் மீதும் ஆவேச பதிலடியை கொடுத்து வருகிறது.

இந்நிலையில், ஈரான் போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டுள்ள நிலையில், 3,200 வணிகக் கப்பல்கள் வெளியேற முடியாமல் அங்கேயே சிக்கியுள்ளன. போர் தொடர்ந்து நடந்து வருவதால் பாரசீக வளைகுடா பகுதியில் நடுக்கடலில் சிக்கி தத்தளிக்கும் கப்பல்களில் உள்ள மாலுமிகளுக்குக் குடிநீர் மற்றும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சரி நிலப்பகுதிக்கு சென்று உணவு, தண்ணீர் கிடைக்கும் என்று எதிர்பார்த்து உதவி கேட்டால், துறைமுகங்களைத் தொடர்பு கொள்ளும் வணிகக் கப்பல்களைப் பாதுகாப்பு காரணங்களுக்காக அனுமதிக்க அதிகாரிகள் மறுத்து வருகின்றனர்.

இதனால் அத்தியாவசியத் தேவைகளுக்காகச் சிவிலியன் மாலுமிகள் கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

மாலுமிகள் கப்பல்களைக் கைவிட்டு வெளியேறத் தொடங்கினால், கடலில் தத்தளிக்கும் இந்த ரசாயன மற்றும் எண்ணெய் கப்பல்களால் மிகப்பெரிய சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

2021-ல் சூயஸ் கால்வாயில் 400 கப்பல்கள் முடங்கியதே பெரிய செய்தியாகப் பார்க்கப்பட்டது.

ஆனால் தற்போது 3,200 கப்பல்கள் போர்க்களத்தின் நடுவே சிக்கியுள்ளன, இது உலகப் பொருளாதாரத்தையே சீர்குலைக்கும் என அஞ்சப்படுகிறது.

மேலும் இது சர்வதேச அளவில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## அமெரிக்காவின் சக்தி வாய்ந்த எஃப்-35 போர் விமானத்தை தாக்கியதாக ஈரான் அறிவிப்பு

தெஹ்ரான், மார்ச் 21:

அமெரிக்காவின் சக்தி வாய்ந்த எஃப்-35 ரக போர் விமானத்தைத் தாக்கியதாக ஈரான் அறிவித்துள்ளது. மேலும், அமெரிக்காவின் மிகவும் ஆற்றல் வாய்ந்த இத்தகைய போர் விமானத்தை தாக்கிய முதல் நாடு தாங்கள்தான் என்றும் ஈரான் ராணுவம் தெரிவித்துள்ளது.

மத்திய ஈரானின் வான்வெளியில் அமெரிக்க விமானப் படையின் எஃப்-35 ஸ்டெல்த் ரக போர் விமானத்தைத் தாக்கியதாக ஈரான் ராணுவம் (IRGC) தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதல் தொடர்பானதாகக் கூறப்படும் காணொலியும் சமூக ஊடகங்களில் பரவி வருகிறது.

ஈரான் ராணுவம் வெளியிட்ட அறிக்கையில், 'உள்ளூர் நேரப்படி அதிகாலை 2:50 மணிக்கு ஈரான் ராணுவத்தின் மேம்பட்ட, நவீன வான் பாதுகாப்பு அமைப்புகளால் இந்த விமானம் தாக்கப்பட்டுள்ளது. அந்தப் போர் விமானத்தின் நிலைமை குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில், எஃப்-35 அவசரமாகத் தரையிறங்கியதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஈரானின் ஏவுகணை தாக்குதலுக்குப் பிறகு, எஃப்-35 விமானம் அவசரமாகத் தரையிறங்கியதை அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள் காட்டி சிஎன்என் செய்தி வெளியிட்டது. மேலும், விமானி பாதுகாப்பாக உள்ளார் என்றும், விசாரணை நடைபெற்று வருவதாகவும் தெரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து அமெரிக்க மத்திய கட்டளைப் பிரிவின் (CENTCOM) செய்தித் தொடர்பாளர் கேப்டன் டிம் ஹாக்கின்ஸ், "விமானம் பாதுகாப்பாகத் தரையிறங்கியது, விமானி உடல்நிலை சீரான நிலையில் உள்ளது" என்று கூறினார். ஈரானின் பாதுகாப்பு அமைப்புகளால் 125-க்கும் மேற்பட்ட அமெரிக்க - இஸ்ரேலிய ட்ரோன்கள் வெற்றிகரமாகச் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து, இந்த தாக்குதல் நடந்துள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

எஃப்-35 விமானம் தங்களின் முக்கியமான ஆற்றல் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. இந்தப் போரில் அமெரிக்காவும், இஸ்ரேலும் F-35 ரக போர் விமானங்களை பயன்படுத்தி வருகின்றன. ஈரான் குறிப்பிட்டபடி, எஃப்-35 ரக போர் விமானம் மீதான தாக்குதல் உறுதியானால், ஈரான் முதன்முறையாக சக்தி வாய்ந்த அமெரிக்க போர் விமானத்தைத் தாக்கி அழித்த நிகழ்வாக இது அமையும்.

## எரியும் குவைத் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்: தாக்குதலுக்கு பின் ஈரான் கடும் எச்சரிக்கை!

குவைத், மார்ச் 21:

குவைத்தின் மினா அல்-அஹ்மதி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது ஈரான் (மார்ச் 20) நடத்திய ட்ரோன் தாக்குதல்களால் பெரும் தீ விபத்து ஏற்பட்டதாக குவைத் அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தாக்குதலைத் தொடர்ந்து, "எங்கள் உள்கட்டமைப்புகள் மீண்டும் தாக்கப்பட்டால், எங்களிடம் எந்தவிதமான கட்டுப்பாடும் இருக்காது." என்று ஈரான் எச்சரித்துள்ளது

இன்று அதிகாலை மினா அல் அஹ்மதி சுத்திகரிப்பு நிலையம் ட்ரோன் தாக்குதல்களுக்கு உள்ளானதாகவும், அதன் விளைவாக சுத்திகரிப்பு நிலையத்தின் பல அலகுகளில் தீ விபத்து ஏற்பட்டதாகவும் குவைத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் (KPC) தெரிவித்தது.

குவைத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில், "இன்று அதிகாலை மினா அல் அஹ்மதி சுத்திகரிப்பு நிலையம் ட்ரோன் தாக்குதல்களுக்கு உள்ளானதால், பல பிரிவுகளில் தீ விபத்து ஏற்பட்டதுடன், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்நிறுவனத்தின் சில பகுதிகள் மூடப்பட்டன. இந்த தாக்குதலில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. ஆனால், நிலைமையைக் கட்டுப்படுத்த அவசரகாலக் குழுக்கள் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், வியாழக்கிழமை, ஈரான் வெளியுறவு அமைச்சர் சையத் அப்பாஸ் அராக்சி, "எங்கள் உள்கட்டமைப்பு மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு நாங்கள் அளித்த பதிலடி, எங்கள் சக்தியின் ஒரு சிறு பகுதி மட்டுமே. பதற்றத்தைத் தணிக்குமாறு கோரப்பட்ட கோரிக்கைக்கு மதிப்பளிப்பதே கட்டுப்பாட்டிற்கான ஒரே காரணம். எங்கள் உள்கட்டமைப்புகள் மீண்டும் தாக்கப்பட்டால், எங்களிடம் எந்தவிதமான கட்டுப்பாடும் இருக்காது. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமானால், எங்கள் பொதுமக்கள் வசிக்கும் இடங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் சரிசெய்யப்பட வேண்டும்." என்று கூறினார்.

# ஈரான் தாக்குதலால் கத்தார் எரிவாயு ஆலையில் ஏற்றுமதி பாதிப்பு: இந்தியா, சீனா பாதிக்கப்பட வாய்ப்பு

வாஷிங்டன், மார்ச் 21:

வளைகுடா பிராந்தியத்தில் ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் நடத்தி வரும் போர் 20-வது நாளை தாண்டியுள்ளது. இந்த போரில் தனது உச்சபட்ச தலைவர் மற்றும் மூத்த தலைவர்களை இழந்த ஈரான், இஸ்ரேல் மீதும் வளைகுடா நாடுகள் மீதும் ஆவேச பதிலடியை கொடுத்து வருகிறது. சர்வதேச சமூகத்தை உலுக்கி வரும் இந்த போர் தற்போது அடுத்த கட்டத்தை எட்டியுள்ளது. அதாவது, இரு தரப்பும் எண்ணெய் மற்றும் கியாஸ் நிறுவனங்களை குறிவைத்து தாக்கத் தொடங்கியுள்ளன. இதை முதலில் தொடங்கியது இஸ்ரேல் ராணுவம். அதாவது, பாரசீக வளைகுடாவில் அமைந்துள்ள மிகப்பெரிய இயற்கை எரிவாயு வயலான சவுத் பார்ஸில் நேற்று முன்தினம் இஸ்ரேல் ராணுவம் திடீர் தாக்குதல் நடத்தியது.



கத்தாருடன் இணைந்து இந்த எரிவாயு வயலை ஈரான் சொந்தமாக வைத்திருக்கும் நிலையில், ஈரானுக்கு சொந்தமான பகுதியில் இந்த தாக்குதல் நடைபெற்றது. இதனால் அந்த எரிவாயு வயல் தீப்பற்றி எரிந்தது. ஈரானின் மின் தயாரிப்பில் சுமார் 80 சதவீதம் இந்த இயற்கை எரிவாயுவால் நடைபெறுகிறது. மேலும், குழாய் மூலம் நேரடியாக வழங்கப்படும் இந்த கியாஸ் மூலம் மக்கள் தங்கள் வீட்டை வெதுவெதுப்பாக வைத்துக்கொள்ளவும், சமைக்கவும் பயன்படுத்தி வருகின்றனர். அந்த கியாஸ் வயல் தாக்கப்பட்டதன் மூலம் ஈரானின் மின் வினியோகம் பெரும் பாதிப்பை அடையும் என அஞ்சப்படுகிறது.

இந்த தாக்குதல் ஈரானுக்கு பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. சவுத் பார்ஸ் தாக்குதலை கடுமையாக கண்டித்த அதிபர் மசூத் பெசஷ்கியான், இது கட்டுப்படுத்த முடியாத விளைவுகளை ஏற்படுத்தும் என்றும், அது ஒட்டுமொத்த உலகுக்கும் பாதிப்பாக அமையும் என்றும் தெரிவித்தார். அதன்படி, இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளுக்கு ஈரான் கடுமையான பதிலடியை தொடங்கியது. குறிப்பாக வளைகுடா பிராந்தியத்தின் எண்ணெய் மற்றும் கியாஸ் நிறுவனங்களை குறிவைத்து தாக்கியது.

குறிப்பாக, கத்தாரின் மிகப்பெரிய ராஸ் லப்பான் திரவ எரிவாயு நிறுவனத்தை ஏவுகணை மூலம் ஈரான் தாக்கியது. நேற்று அதிகாலையில் நடந்த அந்த தாக்குதலால் அந்த நிறுவனம் தீப்பற்றி எரிந்தது. இங்கு ஏற்கனவே நடந்த தாக்குதல் காரணமாக உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், தற்போதைய தாக்குதலால் அந்த நிறுவனம் கணிசமான சேதத்துக்கு ஆளாகியுள்ளது என்று கத்தார் தெரிவித்துள்ளது. தாக்குதலால் 17 சதவீதம் அளவிற்கு ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் வருடத்திற்கு 20 பில்லியன் டாலர் இழப்பு ஏற்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக கத்தார் எரிசக்தி துறை மந்திரி சாத் அல் காபி கூறியதாவது: எரிவாயு தளத்தில் ஏற்பட்டுள்ள சேதத்தை சரிசெய்யும் பணிகளால் ஆண்டுக்கு 12.8 மில்லியன் டன் எல்.என்.ஜி. உற்பத்தி பாதிக்கப்படும். இது 3 முதல் 5 ஆண்டுகள் வரை நீடிக்கும்" என்றார். இதனால் ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகள், குறிப்பாக சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கு எரிவாயு வினியோகம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.



# அரசியல் கட்சிகள் விளம்பரங்களை வெளியிட சான்றிதழ் பெற வேண்டும்: அர்ச்சனா பட்நாயக்

# திராவிட மாடலை நாடு முழுவதும் பின்பற்றினால் இந்தியா இன்னும் விரைவாக வளரும்!



# மன்சுக் மாண்டவியாவை சந்தித்த புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி - தொகுதி பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்து

# சேலத்தில் பயங்கர விபத்து... அரசுப் பேருந்து மோதி 7 பேர் உயிரிழப்பு

# 2 குழந்தைகளுக்கு அதிகமாக உள்ள குடும்பத்துக்கு ரூ. 25,000 ஊக்கத்தொகை


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை

21.03.2026 சனிக்கிழமை

இலவச இ-பேப்பர்